Registered as a News Paper


பக்கம் - 20

# ஈழநாதம்

விலை: 15.00


வெள்ளிநாதம் Weekly

நாதம் - 14 | வெள்ளி - 32 | 03 - 09 - அக்டோபர் - 2003



## அந்தநாள்















ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 03.10.2003
மின் அஞ்சல : Ehatham@sltnet.lk

# இ.நி.ச. வரைபு ஒளிக்கீற்றாகும்

இடைக்கால நிர்வாக சபைதிட்ட வரைபை தமது தலைமையுடன் பரிசீலித்த புலிகளின் அரசியற்பேச்சுக்குழு இன்று அதனை மேலும் கலந்தா லோசிப்பதற்காக பிரித்தானியா செல்கிறது.

இருபத்தைந்து வருட ஆயுதப்போராட்ட வரலாற்றில் விடுதலைப்புலிகள் முதன்முதலாக சமர்ப்பிக்கும் ஒரு சட்டவரைபு இதுதான்.

முன்னர் திம்புவில் தமது கோட்பாட்டை வெளிப்படுத்தியிருந்தனர். ஆனால் ஒரு சமாதான பேச்சு முயற்சியில் ஒரு சட்டவரைபை புலிகள் முன் வைப்பது இதுவே முதற்தடவை.

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகள் தொடர்பான சர்வதேச பிரச்சாரத்தில் அந்தக்காலத்தில் புலிகளை பயங்கரவாதிகளாகவும் சமாதான களத்தில் பிரிவினையிலிருந்து இறங்கி வராத கடும் போக்குள்ள இராணுவக்குழு என்றும் சித்திரித்து வந்துள்ளது.

இந்தப்பிரச்சாரத்தை மேவக் கூடியவாறு புலிகளுக்கான சர்வதேச வாய்ப்பு என்றும் வாய்த்ததில்லை. அந்த வாய்ப்பற்ற சூழல் தான் அரச தரப்பை சமாதானப்பேச்சுக்களில் விசுவாசமின்றியும் பொறுப்பின்றியும் நடக்கத் தூண்டியது. அத்துடன் சமாதான பேச்சு எப்பொழுதும் உள்நோக்கங் களுக்காக கொண்டு வரப்படுவதாகவும் என்றும் சமாதானத்தை அது இலக்காகக் கொண்டிருக்காத தற்குமான காரணமாகவும் இது அமைந்தது.

ஆனால், அரசு பேச்சுக்காக அழைப்பு விடுக்கும் போதெல்லாம் புலிகள் அதனை பெரும்பாலும் ஏற்கவேண்டியவர்களாக இருந்தனர். அல்லாதவிடத்து புலிகள் சர்வதேச அரங்கில் போர்வெறியர்கள் என்று பட்டஞ்சூட்டப்படுவதற்கு வாய்ப்பளித்து விடுவதாக இருந்தது.

ஆனால், எல்லாப் பேச்சுக்களினதும் உள்ளடக்கம் யுத்தத்தையோ, சதியையோ உள்ளடக்கியிருந்தது. அதிலிருந்து தம்மை தற்காத்துக்கொள்வதற்காக புலிகள் எப்பொழுதும் முன்னெச் சரிக்கையுடனேயே சமாதான காலத்தில் செயற்பட வேண்டியி ருந்தது.

அதனாலேயே புலிகளால் வரலாற்றில்வைக்கப்பட்ட எல்லாவிதப் பொறிகளிலிருந்தும் தப்பிக்க முடிந்தது. அந்த தப்பித்தல் திறனும் அதனுடனான எழுச்சியுமே புலிகள் சமாதானத்தில் நேர்மையற்றவர்கள் யுத்த உள்நோக்கங்கொண்டவர்கள் என பிரச்சாரப்படுத்த ஆதாரமாகவும் வசதியாகவும் அரசுக்கு வாய்த்தது. அல்லது வசதியினைக் கொடுத்தது.

சர்வதேச கவனத்திற்கு அதிக வாய்ப்பளித்திருந்த தமிழ் மக்களின் விடுதலைக்குரல் அதனை மேவி ஒளிக்க முடியாது போயிற்று.

இம்முறைப்பேச்சு அத்தகையது அல்ல. சர்வதேச அரங்கில் தமிழ் மக்களின் விடுதலைக்குரலும் ஒளிக்க முடியுமான சூழல் வாய்த்திருக்கிறது. சர்வதேசத்தின் முன்னிலையில் பிரிவினைப்பட்டங்கட்டி போராட்டத்தை கைது செய்துவிட சொல்லியவர்களுக்கு அதனையே வாய்ப்பாக்கி சர்வதேசத்தின் முன்னிலையில் தமது அரசியல் அபிலாசையை வெளிப்படுத்தி தமது நேர்மையை, நியாயத்தை மெய்ப்பிக்க தமிழர் தரப்பு எடுத்து வரும் முயற்சியில் தெற்கு மிரண்டு போய் நிற்கிறது.

விடுதலைப்புலிகள் மாற்று யோசனையாக உள்ளக. சுயநிர்ணயத்தை முன்வைத்ததும் அதனை ஏற்படுத்த முடியாத அரசியல் சூழலை ரணில் அரசாங்கம் முன்வைத்த காரணத்தை ஏற்றுக்கொண்டு பதிலாக இடைக்காலநிர்வாக சபையை தற்காலிக ஏற்பாடாக கேட்டிருப்பதும் இதில்முக்கியமானவை.

அந்த இடைக்கால நிர்வாக சபை வரைவை சர்வதேசத்தில் அங்கீகாரத்துடன் சர்வதேச நியமங்கள், நடைமுறைகள், அனுபவங்களை உள்வாங்கி முன்வைக்க புலிகள் அவாவுகின்றனர்.

அயர்லாந்தில் நடக்கும் மாநாட்டில் கனடிய முன்னாள் அமைச்சர் அயர்லாந்து அமைச்சை சேர்ந்தவர்கள் கிழக்குத் தீமோர் அரசைச்சேர்ந்தவர்கள், நெல்சன்மண்டேலா, எனப்பலரும் கலந்து கொள்வர். அவர்களின் ஆலோசனைகளை புலிகள் செவிமடுப்பதை புலிகளுக்கு சர்வதேசத்தில் நல்லவிப்பிராயப் புள்ளியாகஅமையும்.

15ஆம் திகதியளவில் புலிகளால் சமர்ப்பிக்கப்படும் இவ்வரைபு தெற்கில் பல கொந்தளிப்புக்களை ஏற்படுத்தலாம். அதில் தமிழ் மக்களுக்கு ஒரு ஒளிக்கீற்று தென்படும். அது சிங்கள தேசம் இதை ஏற்கவேண்டிய நிர்ப்பந்தமாகவோ அல்லது எடுத்தறிந்து தனது மெய்முகத்தை காட்டுவதாகவோ அது அமையும்.

## தூரனின் பார்வையில்

# மாறிவரும் சர்வதேசத்தின் பார்வை: பேரினவாதிகளுக்கு ஏற்படுத்தும் ஏமாற்றம்!

**சிங்களப்** பேரினவாத சமாதான எதிர்ப்பு நடவடிக்கையாளர்களுக்கு இப்போதுள்ள கவலையும் சீற்றமும் ஐரோப்பிய யூனியன் விடுதலைப்புலிகளை பயங்கரவாதிகள் பட்டியலில் இணைத்துக் கொள்ளவில்லை என்பது குறித்ததாகவே உள்ளது.

ஐரோப்பிய யூனியன் வெளியிட்டுள்ள இந்த புதிய பயங்கரவாத அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் விபரங்கள் அடங்கிய பட்டியலானது கடந்த 12ஆம் திகதி பகிரங்கமானதை அடுத்து அதில் விடுதலைப்புலிகளின் பெயர் இல்லாதிருப்பதை உணர்ந்ததும் சிங்கள பௌத்த பேரினவாத கட்சிகளும், அமைப்புகளும், சிந்தனையாளர் களும் பெரிதும் விசனமடைந்துள்ளதாக தெரிகிறது.

ஐரோப்பிய யூனியன் வெளியிடவிருந்த இப்பட்டியலை அவர்கள் மிக ஆவலாக எதிர்பார்த்து ஏமாந்துள்ளதையே அவர்களின் அதிருப்திநிலை வெளிப்படுத்துவதாக உள்ளது. சந்திரிகாவின் தலைமையிலான பொ.ஐ.முன்னணி ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 1994இல் இருந்து அதன் ஆட்சி முடிவுக்கு வந்த 2000 ஆண்டு வரையிலான ஏழாண்டு காலப்பகுதிக்குள் - அதாவது சந்திரிகா - புலிகள் சமாதான பேச்சு வார்த்தை முறிவடைந்து மூன்றாம் ஈழப் போர் ஆரம்பமானது முதல் தற்போதைய போர்நிறுத்த அறிவிப்பு வெளியாகும்வரைக்கும் - சந்திரிகா - கதிர்காமர் கூட்டுச்செயலணியானது, தமிழ் மக்களுக்கு எதிரான கொடிய யுத்தத்தை - சமாதானத்திற்கான யுத்தமெனப் பேரிட்டு முன்னெடுக்கத் தொடங்கியது முதல் தமது நடவடிக்கையை நியாயப்படுத்தவும், விடுதலைப்புலிகளை தேசிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும், தனிமைப்படுத்தி ஒடுக்கும் அல்லது அழித்தொழிக்கும் செயற்பாடுகளை, துரிதப்படுத்தவும் தீவிர மாக செயலாற்றியது.

இதில்முக்கியமானது விடு தலைப் புலிகளை விடுதலைப் போராளிகள் என்ற கருத்து நிலைப்பாட்டிலிருந்து, பயங்கரவாதிகள் என்ற உணர்வு நிலைப் பாட்டிற்கு சர்வதேச சமூகத்தை மாற்றுவதாக இருந்ததேயாகும்.

இந்திய அரசு தனது அரசியல் அபிலாஷை, மற்றும் தனிப்பட்ட கொள்கை முரண்பாடு, உட்பட இந்திய அமைதிப்படை காலப்பின்னடைவுகள் - தோல்விகள் ஆகிய பலநோக்கு காரணங்களுக்காக விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக பட்டியலிட்டதை - வாய்ப்பாக பயன் படுத்திக் கொண்டு தனது நகர்வுகளை சந்திரிகா அரசு மேற்கொண்டது.

இந்தப்பிரசார யுத்த நடவடிக்கையின் தளபதியாக லக்ஷ்மன் கதிர்காமரையே சந்திரிகா நியமித்து மிருந்தார்.

நம்கையைக் கொண்டே நம் கண்ணைக்குத்த வைக்கும் மூலோ பாயச்சதி இதுவாகும்.

பதவிப்பற்று, எஜமானி விசு வாசம் ஆகியன கதிர்காமரின் கண்ணையும், கருத்தையும் மறைக்க அவர் நாடு நாடாக





பறந்து விடுதலைப்புலிகளுக்கு எதிரான பொய்ப் பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டார்.

இதன் பிரதான நோக்கங்கள், விடுதலைப்புலிகளின் அரசியல் நட வடிக்கைகளை தடுக்கவும், அவர்கள் மீது தடைவிதிக்கவும் கோருதல், புலம்பெயர்ந்து பல்வேறு நாடு களிலும் பரந்து செறிந்துவாழும் தமிழ்மக்களிடையே விடுதலைப் புலிகளுக்கு இருக்கும் ஆதரவுத் தளத்தை சிதைத்தல், நிதிசேகரிப்பு நடவடிக்கைகளை முடக்கி வைக்க 'கெஞ்சு'தல் ஆகியன வாகும்.

கதிர்காமரின் திக்விஜயம் ஓரளவு வெற்றியளித்தது என்றே கூறலாம். அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கனடா, இங்கிலாந்து, போன்ற சில நாடுகள் விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகள் என்று பட்டியலிட்டு அவர்களின் நிதி சேகரிப்பு நடவடிக்கைகளை முடக்கவும் செய்தன.

இதன் பின்னணியில் கதிர்காமரின் பிரசாரம் மட்டுமல்ல, அமெரிக்கா சார்பான குறிப்பிட்ட நாடுகளின் ஒன்றிணைந்த அரசியல் அபிலாசைகளுடன் கூடிய உள்நோக் கமும்



உண்டு.

சிறிலங்கா அரசின், தமிழ்மக்களுக்கு எதிரான, நன்கு திட்டமிட்ட, இராணுவ ரீதியிலான காட்டு மிராண்டித் தனமான அரசபயங்கரவாதச்செயல்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் ஆயுதரீதியிலும் இராணுவ பயிற்சி மற்றும் ஆலோசனை ரீதியிலும் மிகவும் அக்கறையுடன் கூடிய ஆதரவை வழங்கியதன் மூலம் இந்த நாடுகள் தமது அரசியல் நேர்மையின்மை, மனித உரிமை மீறல்களுக்கான ஆதரவு, அரச பயங்கரவாதத்திற்கு துணைபோகும் சுபாபம் ஆகியவற்றை வெளிப்படுத்திக் கொண்டன.

சிறிலங்கா அரசுக்கு இது பெரும் வெற்றியாக அமைந்தது.

ஆனால் சந்திரிகாவின் பொ.ஐ. முன்னணி - போரில் மட்டு மல்ல, தேர்தலிலும் தோல்வியைச் சந்தித்த பின்னர் ஏற்பட்ட அரசியல் மாற்றம் நிலைமைகளை தலை கீழாக மாற்றியது.

போர் நிறுத்தம், சமாதான பேச்சுக்களின் ஆரம்பம் ஆகியன சர்வதேச சமூகத்தின் கவனத்தை பெரிதும் ஈர்க்க, மாறிவரும் சர்வதேச அரசியல்சூழலின் தன்மையானது விடுதலைப்புலிகளை தவிர்க்க முடியாத அரசியல் சக்தியாகவும் அவர்களின் போராட்டம் பயங்கரவாதமல்ல.... அரசியல் ரீதியில் தீர்வுகாண வேண்டிய அவசியத்தை கொண்ட ஒரு நடவடிக்கைதான் என்பதை வெளிப்படையாக அங்கீகரிக்கவும் வைத்தது.

சர்வதேச சமூகம் வன்னி நோக்கி தமது பார்வையைக் குவிமையப்படுத்தத் தொடங்கியமையானது சிறிலங்காவின் பேரினவாத சக்திகளுக்கு பலத்த அடியாக விழுந்தது.

விடுதலைப்புலிகள் மீதான தடையை உடனடியாக நீக்க சில நாடுகளின் வரட்டு சுயகௌரவம் விட்டுக்கொடுக்காவிட்டாலும், அது குறித்து பரிசீலணை செய்யப்படும் என்று அறிவித்துள்ளமையும், புலிகளுக்கு கிடைத்த வெற்றியேயாகும்.

இந்த ஓராண்டுகாலசமாதான நகர்வுகள் விடுதலைப் புலிகளின் போராட்டத்தின் நியாயத்தன்மையை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவைத்துள்ளது என்பதில் ஐயமில்லை.

இந்த நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட்ட பயங்கரவாதிகளின் பட்டியலில் புலிகள் அமைப்பு உள்ளடக்கப்படாமை பேரினவாதிகளுக்கு அடிக்குமேல் கிடைக்கும் அடியாகவே இருக்கும்.

விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச சமூகம் மெல்ல மெல்லவழங்கிவரும் அந்தஸ்து தவிர்க்க முடியாத வரலாற்று நிகழ்வேயாகும்.

இதைச்சிங்கள பேரின வாதிகள் புரிந்து கொள்ள வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகவே அவர்கள் முன் உள்ளது.

தவறின் அவர்களின் தேசமும் இனமும் ஏன் சர்வதேசமும் கூட அவர்களை மன்னிக்காது என்பதை வரலாறு யதார்த்தமாக்கியே தீரும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, உன்னையே நீ மதித்துப்போற்று. - பைத்தேகரஸ்

# உள்ளங்கையுக்குள் அடங்கும் மூன்று வருடங்கள்





**சமாதானத்தில்** அழுத்தம் தரவல்லதான மேற்குலக சக்திகள் இப்பொழுது கள யதார்த்தத்தை அதன் சூக்சுமத்தை புரியத்தொடங்கி விட்டதற்கான சமிக்கைகள் தென்படுகின்றன.

இது விடுதலைப்போராட்டத்தின் நியாயமான வேண்டுதல்களுக்கு செவி சாய்ப்பதான தோற்றத்தை வெளிப்படுத்துகின்றது. இது சிங்களக் கடும்போக்காளரின் மனநிலையில் கொந்தளிப்பை ஏற்படுத்தலாம். ஆனால் அவர்களை யதார்த்ததை நோக்கி இட்டுவருவதற்கு இது உதவக்கூடும்.

பிரச்சினையைத் தமக்கு சாதகமாக ஆராய்வதும் அதற்காகப் புலிகளுக்கு அழுத்தம் தருவதும் தான் மேற்குலகின் இராஜதந்திரப் பணி என எண்ணிவந்த சிங்களக் கடும்போக்குவாதிகள், இந்த இருபத்தைந்து வருடகால இன முரண்பாட்டு யுத்தத்தில் மேற்குலகம் குறித்து அதிருப்தி கொள்ளவில்லை என்பது, மேற்குலகம் மாயையான புரிதலிலிருந்து விடுபடவில்லை என்பதுடன் சிங்களக் கடும்போக்குத்தனத்திற்கு அது ஊக்கமளிப்பதாயும் இருந்திருக்கிறது.

அவ்வக்காலங்களில் பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகளுக்கு இலங்கையின் இன முரண்பாட்டை சமரச வழியில் தீர்த்துவைக்க வேண்டியதற்கான அரசியல் பொருளாதாரத் தேவைகள் எழுந்திருக்கின்றன. அவ்வப்போதெல்லாம் நேரடியாகவோ மறைமுகமாகவோ அவர்கள் மூன்றாந்தரப்புப்பாத்திரத்தை அல்லது அதற்கு நிகரான பாத்திரத்தை வகித்தபோது அவர்களைக் கையாளுவதில் சிங்கள ...ாஜதந்திர உலகம் வெற்றிபெற்றி... கிறது.

சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்கவல்ல மேற்குலகின் செல்வாக்கிற்குட்பட்ட சர்வதேச ஸ்தாபனங்கள் தொண்டர் நிறுவனங்கள் என்பவற்றின் அதிகாரிகளையும் கையாள்வதில் சிங்கள அரசியல் வட்டாரம் வெற்றிபெற்றே வந்திருக்கிறது.

இனமுரண்பாட்டில் மூன்றாந்தரப்புப் பாத்திரம் கூர்மையடையும் காலகட்டங்களிலெல்லாம் அவர்களைத் தமது வலையில் வைத்திருப்பதற்கென்று சிங்கள இராஜதந்திர வட்டாரத்தில் பரீட்சையமான உத்தியொன்று உண்டு.

சக்திமிக்க நாடுகளிலிருந்து நியமிக்கப்படும் தூதுவர்கள் அல்லது சிறப்பு இராஜதந்திரிகள், உத்தியோகத்தர்களேயன்றி அரசியல்வாதிகள் அல்லர். இவர்களின் பணிக்காலம் பெரும்பாலும் மூன்று வருடம். தேவையேற்பட்டால் ஒன்று அல்லது இரண்டு வருடங்கள் நீடிக்கப்படுவதுண்டு.

எனவே ஒரு குறுங்காலத்திற்குள் அவர்கள் நிலமையை சரிவரப்புரிந்துகொள்வதற்கிடையில் அவர்களைச் சமாளிப்பதே இலங்கை இராஜதந்திரத்திற்குப் போதுமானதாக இருக்கிறது.

இதனை இலங்கையின் அரசியல் தலைவர்கள் அத்தூதுவர்கள் இராஜதந்திரிகளுடனான தனிப்பட்ட பழக்கத்தை நட்பை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் நிறைவேற்றுகின்றனர்.

தனிப்பட்ட நட்புச்சார்ந்த உரையாடல்கள் மூலம் தன்னையொரு மென்போக்குவாதியாகவும் பிரச்சினையைத் தீர்ப்பதில் தான் மனதார இருப்பதாகவும் கட்சிக்கு உள்ளேயும் வெளியேயும் தனது தலைமைத்துவத்திற்கு சவால்களும் நெருக்கடிகளும் நிறைந்திருக்கின்றதாகவும் ஒரு கருத்தைக் கட்டிவளர்க்கின்றனர்.

தனது தலைமைத்துவத்திற்கு எழுந்துள்ள சவால்களை என்னென்ன வழியில் தீர்க்கலாம் என்பது பற்றியும் அதற்கான தனது திட்டம் பற்றியும் ஆனால் அது எடுக்கவேண்டியுள்ள கால அவகாசம் பற்றியும் தனிப்பட்ட மானசீக உரையாடல்களாக அவர்கள் அதனை வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் அவிழ்த்து விடுகின்றனர்.

ஆனால் இதுவே சிங்கள அரசியல் இராஜதந்திரத்தின் பொது இயல்பு என்பதை அவர்கள் விளங்கிக்கொள்வதில்லை. அவ்வாறு விளங்கிக்கொள்வதற்கான கால அவகாசம் தேவைப்படுவதற்கிடையில் தூதுவர் மாற்றலாகி சென்றுவிட நேர்ந்துவிடுகிறது.

எனவேதான் இலங்கையில் கடமையாற்றிச்சென்ற இலங்கை அரசியலோடு தொடர்புள்ள எந்தத் தூதுவரும் இலங்கை அரசியற் தலைவர்களை சமாதானத்தில் விசுவாசமற்று இருந்தார்கள் என்று யாரையும் சுட்டிக்காட்டியதுமில்லை, வெளிப்படுத்தியதுமில்லை.

அனேகமாக நிலமையின் கைதியாகவே தங்கள் காலத்து அரசியல் தலைவர் இருந்தாரென்று அவர்கள் புரிந்துகொண்டிருக்கின்றனர். வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

அப்படித்தான் நிலமை உள்ளதென்றால் சமாதானத்திற்குச் சவாலாக இருந்த அரசியற்தலைவர்கள் யாரென்று தேடினால் பதிலே இருக்க முடியாதே. அப்படி பதில் இருந்தால் ஒன்றில் எல்லோரும் என்றோ, அல்லது ஒருவரும் இல்லை என்றோ தான் பதிலமையும்.

இப்படி எந்தவொரு வெளிநாட்டு இராஜதந்திரியையும் குறுங்காலத்துள் பேணப்படும் தனிப்பட்ட நட்புசார்ந்த அணுகுமுறை சிங்கள இராஜதந்திரத்திற்குப் போதுமானதாக சுலபமானதாக இருந்தது.

இம்முறை சமாதானம் ஒரு மூன்றாந்தரப்பு சாட்சியுடன் நடக்கிறதென்ற நம்பிக்கையில் தமிழர்கள் இருந்தார்கள். ஆனால் ஆட்சியாளர்களோ இம்முறை சமாதானத்தின் மூலம் சர்வதேசத்தை வளைத்துப் போட்டு புலிகளைத் தனிமைப்படுத்தி விட முடியும் என்ற உற்சாகத்தில் இருக்கிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த இராஜபக்ஷ சொல்கிறார் அதிகாரமுள்ள இடைக்கால நிர்வாக சபையை அரசு வழங்குமென்பது பகற்கனவு என்று. பாம்பின் கால் பாம்பறியும். சிங்கள இராஜதந்திரத்தை சிங்கள இராஜதந்திரமே அறியும்.

“பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட மாகாணசபைகளுக்குப் போதிய அதிகாரங் களை வழங்க மறுக்கும் ஐ.தே.மு அரசாங்கம் புலிகளுக்கு சகல அதிகாரங்களையும் கொண்ட இடைக்கால நிர்வாக சபையை வழங்குமென ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது” என்கிறார் எதிர்க்கட்சித்தலைவர்.

இலங்கைத் தேசிய கொள்கைத் திட்டமிடலில் இப்படியானதொன்று சாத்தியமில்லை என்பதே அவரது கூற்றிலிருந்து விளங்கப்பட வேண்டியது.

மேற்குலகம் இந்த இன முரண்பாட்டின் தீர்வில் அதிகம் அக்கறையுடன் இருக்கிறதென்றால் சிங்கள இராஜதந்திரத்தின் பின்புலத்தையும் அதிகம் விளங்கவேண்டியிருக்கும்.

புலிகள் டோக்கியோ மாநாட்டைப் புறக்கணித்ததும் பேச்சை இடைநிறுத்தியதும் இப்போது கொழும்பில் நடந்த நிதி மாநாட்டில் பங்கேற்காததும் புலிகளின் சமாதான விரோதச் செயலாக கொள்ளத்தக்கதன்று.

இது மேற்குலகை சிங்கள இராஜதந்திரத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கான புலிகளுக்கு எட்டக்கூடியதாகவிருந்த மார்க்கங்களிலொன்று. மேலும் மறுதரப்பிற்கிருக்கும் அரசு என்ற ஸ்தானத்திற்காக சமாதானப்பேச்சின் சாதகங்கள் அரசை நோக்கிச் சாய்க்கப்படுவதை புலிகள் நெகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை வெளிப்படுத்துவதன் மூலம் சர்வதேசத்தை களநிலமையை மேலும் உன்னிப்பாக ஆய்ந்தறிவதற்கும் புரிந்துகொள்வதற்கும் வற்புறுத்துவதற்குமான மார்க்கமாக புலிகள் இதைச் செய்திருக்கலாம்.

இதன் நிமித்தமாகவோ இது அல்லாமலோ மேற்கு நிலவரத்தை புரிந்துகொண்டு செயற்படத் தொடங்கியிருப்பதற்கான சமிக்ஞைகள் தென்படுகின்றன.

புலிகளைத் தடைசெய்து வைத்திருந்த பிரித்தானியாவின் அயர்லாந்தில் புலிகள் இடைக்கால நிர்வாகசபை பற்றி சட்ட வல்லுநர்கள் சில சர்வதேச அரசியற் தலைவர்களையும் அழைத்து கலந்தாலோசிப்பதற்கு அனுமதியளித்ததுமன்றி அதன் செலவையும் தான் பொறுப்பேற்றிருக்கிறது.

ஐரோப்பிய யூனியன் இறுதியாக தான் கொண்டுவந்த சர்வதேச பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் புலிகளைத் தவிர்த்திருக்கிறது.

டோக்கியோ மாநாட்டுடன் மனக்கசப்படைந்ததாக எண்ணப்பட்ட ஜப்பான் புலிகளோடு மீண்டும் நல்லுறவைப் பேணுகிறது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இணைந்த சிறுவர்களை இடைத்தங்கல் முகாம் ஒன்றில் வைத்து பராமரிப்பதற்கான நிதியுதவிகளைக்கூட வழங்குகின்றது.

அண்மையில் ‘சண்டேலீடர்’ பத்திரிகையில் புலிகளின் இடைத்தங்கல் முகாம் பயிற்சி முகாம் என்றும் அவர்கள் அநாதரவான சிறுவர்கள் என்றும் வெளியான தலையங்கத்தை மறுத்து யூ.என்.எச்.சி.ஆர். நேரில் அதனை அவதானித்து வரும் சாட்சி யாக பதில் எழுதியிருக்கிறது.

அமெரிக்கச் செல்வாக்கிற்குட்பட்டிருக்கும் கனடா புலிகளின் சமஷ்டி பற்றிய பரிசீலனைக்கும் அதனை ஆய்ந்தறிவதற்கும் தன் நாட்டிற்கு அழைப்பு விடுப்பதற்கான சமிக்ஞையைக் காட்டியிருப்பதாகத் தெரிகிறது.

இவையெல்லாம் அவநம்பிக்கை அடைந்திருந்த தமிழ்மக்களுக்கு சமாதானத்தில் புத்துணர்ச்சியூட்டும் விடயங்கள். சிங்கள அரசியற் தலைவர்கள் சமாதானத்தில் விசுவாசம் கொள்ள வற்புறுத்தவைக்கும் விடயங்களும் இவைதான்.

ஆனால் ஆட்சிக் கலைப்பிற்குத் தருணம் பார்த்துக் காத்திருக்கும் சக்திகளுக்கு இதுவொரு வாய்ப்பான சந்தர்ப்பமாக அமையலாம்.

ஆனால் அதனைக் கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பும் பலமும் சர்வதேசத்தின் சக்திகளிடம் உண்டு. சமாதானத்திற்காக அது செய்யப்பட வேண்டியது அவசியமானதும் கூட.

ஆனால் அதற்காக, வரும் 8ஆம் திகதி அமெரிக்கா வெளியிடவுள்ள பயங்கரவாத பட்டியலில் புலிகளை சேர்ப்பது சிங்கள மக்களை சாந்தப்படுத்த உதவக்கூடியது என்று எண்ணக்கூடும்.

ஆனால் விடுதலைப்புலிகளின் சமாதான வழிமூலமான பிரயத்தனங்களை மதிக்கும், ஊக்குவிக்கும் பொருட்டும் இ.நி.ச வரைபு புலிகளால் கையளிக்கப்படும் சமயத்தில் யதார்த்ததை தட்டிக் கழிக்க வியலாதவாறு சிங்களத் தலைவர்களை நெகிழ்ச்சிக்கு நிர்ப்பந்திக்கும் பொருட்டும் ஒரு நெகிழ்ச்சியான சமிக்ஞையே ஆவது அதில் அமெரிக்கா காட்டுவது அதிக பயன்விளைவுள்ளதாய் இருக்கும்.

— ஜீ.கே —

## ஓகோ! அப்படியா!



சந்திரிகா, புதிதாக பயிற்சி பெற்று வெளியேறிய இராணுவத்தினர் முன்.

**தேவை ஏற்படின் நானும் களத்தில் இறங்கிப் போராடுவேன்.**

### ஓகோ! அப்படியா!



விமல் வீரவன்ச. செய்தியாளர் மாநாட்டில்.

**சு.கட்சியில் உள்ள சில திருடர்கள் காரணமாக ஒப்பந்தம் ஒன்றை எட்ட முடியவில்லை.**

### ஓகோ! அப்படியா!



ரணில். கண்டியில் நடைபெற்றவைபவத்தில்.

**ஐ.தே.க - பொ.ஐ.மு இடையே அரசியல் தீர்வு என்பதில் பிரச்சினை இல்லை. எப்படிக் காண்பது என்பதிலேயே முரண்பாடு.**


### ஓகோ! அப்படியா!



சமூகநலத்துறை அமைச்சர் வளர்மதி. சிவகங்கை அரச விழாவில் ஜெயலலிதா முன்னிலையில்

**காந்தியை விட ஜெயலலிதா எளிமையானவர். எளிமையை எடுத்துக் காட்டிய மகாத்மா காந்தி கூட நேரத்தை அறிய இடுப்பில் கைக் கடிகாரம் கட்டி இருந்தார். ஜெயலலிதா கடிகாரமே கட்டுவதில்லை. பசித்தபிறகு பக்கத்தில் இருப்பவரிடம்தான் நேரத்தை கேட்டு தெரிந்து கொள்வார்.**

### ஓகோ! அப்படியா!



புஷ். ஐ.நா.மாநாட்டில்.

**ஈராக்கில் படிப்படியாகவே மாற்றங்கள் நிகழும்.**

### ஓகோ! அப்படியா!




வாஜ்பாய்

**இலங்கையின் சமதான முயற்சிகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகிறது. சமயம் வரும்போது இந்தியா நேரடியாகப் பங்கு கொள்ளும்.**

# நறுக்கென...

## துரோகமிழைத்தால் மந்திரியாகலாம்



**ஜே.வி.பி.** இற்கு எனது உயிருள்ள வரை அமைச்சர் பதவிகளை கையளிக்க இடமளியேன் என்று கூறியிருக்கின்றார் மகிந்த விஜயசேகர.

அதுசரி, அந்தக்கட்சியின் சிவப்புக்கொள்கைக்கொடி பிடித்தவர்களில் முக்கியமான தலைவர்களில் இவரும் ஒருவர். ஆட்சியைக் கவிழ்க்கது முற்பட்டு இவர்கள் முதலில் கவிழ்ந்தது சுதந்திரக்கட்சி ஆட்சியில் தான்.

பிறகு பொ.ஐ.மு கூட்டில் கட்சி மாறிய இந்தசிவப்புக்கொள்கைக் காரர் தன் முன்னைய கட்சிக்கிளைத்த துரோகங்களுக்காகவே அமைச்சர் பதவி பெற்றவர்.

ஐ.தே.க ஆட்சி அமைக்கக்கூடிய வாய்ப்பைக் கண்டறிந்ததும் ஜே.வி.பி.யை ஈவிரக்கமற்றுக் கொன்றொழித்த ஐ.தே.க வுக்கே குத்துக்கரணமடித்து பொ.ஐ.மு.க்கு துரோகம் இழைத்ததற்காக இன்றைய அரசாங்கத்தில் மந்திரிப்பதவியைப் பெற்றுக்கொண்டார்.


இப்படியிருக்க இப்போது ஜே.வி.பியுடனேயே பொ.ஐ.மு. கூட்டு வைத்துக்கொள்ள முனைந்தால் கோபம் வராத மனிசனுக்கு. தான் துரோகம் செய்த தன் தாய் கட்சியே தான் கையாளாகிய கட்சியோடு ஆட்சியை பகிர்ந்தால் தான் அடுத்து சந்திரிகாவை நோக்கி ஒரு குத்துக்கரணத்தை அடித்து ரணிலுக்குச் செய்யவிருக்கும் துரோகத்திற்கு மகிமை இல்லாதுபோய்விடுமே. துரோகத்திற்கு 'மகத்துவம்' இல்லையென்றால் மந்திரிப்பதவி தான் கிடைப்பதெப்படி.

ஐயா விஜயசேகர! உமது தனிநபர் துரோகத்திற்கு மந்திரிப்பதவியென்றால் அவர்கள் ஒரு கட்சியின் கொள்ளைத் துரோகத்திற்கு என்னவெல்லாம் கொடுக்க வேண்டும். அதைத்தானே உமது 'தோழர்கள்' கேட்கிறார்கள்.

உயிருள்ளவரை விடேன் என்ற கோஷமெல்லாம் இப்பொழுது எடுபடாதையா.

தெரிந்த பாணியில் நீலத்திற்காக மீண்டுமொரு குத்துக்கரணத்திற்கு தயாரென சந்திரிகாவிற்கு முந்திக்கொண்டு சமிக்ஞை அனுப்பினால் போச்சு.

## துறவியாகினால் அரசனாகலாம்?



2500 வருடங்களுக்கு மேலாக நாடு மகாசங்கத்தினரால் பாதுகாக்கப படுகிறது என்று பாத யாத்திரையில் குணவன்ச தேரர் கூறியிருக்கிறார்.

அப்படியென்றால் மகாசங்கம் ராணுவப்பாசறை யாகவா இருந்தது? அல்லது, அரசியல் கூடாரமாகவா இருந்தது?. அப்படி யென்றால் மும்மணிகளுக்கு என்னவாச்சு.

புத்தன் யுத்தத்தை எதிர்த்து அரசுகள் தோறும் பாதயாத் திரைகள் செய்தான். அதற்காகவே தன் அரச வாழ்வைத்துறந்தான்.

அவனைக் கடவுளாகக் கொண்டு மகாசங்கம் யுத்தப் பாசறையாகவோ, அரசியல் கூடார மாகவோ ஆகிய தெப்படி? யார் ஆசீர்வதித்தார்கள்?

இம்முறை தேர்தலில் தேரர் ஒருவரும் பாராளுமன்றத்தின் கதிரையில் ஏறினார்.

குறைந்த பட்சம் துறவறத்தை துறந்துகூட அவர் அரசியலுக்கு வந்திருக்கலாம்.

மனுசன் காவியும் மொட்டையுமாய் வந்திருக்கிறார்.

அப்படியென்றால் என்ன தான் அர்த்தம். குடிமகன் ஒருவன் அரசனாக வர ஆசைப்பட்டால் துறவு பூண்டு மகாசங்கத்தில் சேரவேண்டுமென்றாயிற்றோ.

பெருமை உள்ள புத்தனே! உன் மும்மணிகளின் சவஊர்வலத்தை எப்போது வேண்டு மென்றாலும் பார்க்க ஆசைப்பட்டால் நீ இலங்கை வரலாம்.

## இல்லாததை இழந்தேனும் தியாகியாகலாம்



"**தமிழ்மக்களை** அரசு ஏமாற்றுகிறது அமைச்சர் பதவி அர்த்தமற்றது" என்று அறிக்கை விட்டிருக்கிறார் இந்து கலாச்சார அமைச்சர் மகேஸ்வரன் அவர்கள்.

இந்துகலாச்சார அமைச்சர் பதவியை கேட்டுவாங்குவதற்காக யாழ்ப்பாணத்தில் எந்தக் குடிமகனாவது இந்தப் பெருமகனுக்கு வாக்களித்தானா? இல்லை ஐ.தே.அரசு தமிழ்மக்களை உண்மையிலேயே ஏமாற்றுகிறதா? என்று கண்டறிந்து வரு வதற்காகவாவது வாக்களித்தார்களா?

பின் என்னய்யா தமிழ் மக்களை அரசு ஏமாற்றுகிறது. அமைச்சர் பதவி அர்த்தமற்றது என்று அறிக்கை விடுகிறீர்.

சரி, நீராவது இப்பொழுது இதைக்கண்டறிந்து விட்டீர் என்றால் இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமரவிடாவிட்டால் பதவியை ராஜினாமாச் செய்வேன் என்றேனும் அறிக்கையாவது விடலாமே. அர்த்தமற்ற பதவிதானே அதைத்துறந்தேனும் தியாகிப்பட்டம் வாங்குவது லாபம் இல்லையா?

வின்சன் சேர்ச்சில் சொன்னார், தான் பேசத்தொடங்க முன்பு முன்னால் இருப்பவர்கள் எல்லோரையும் முட்டாள்கள் என்று மனதில் எண்ணிக்கொண்டே போசத்தொடங்குவேன் என்று.

அதேபோல அறிக்கை எழுதத்தொடங்கு முன்பு யாழ்ப்பாணத்துச் சனங்களை அப்படி நீர் எண்ணினால் அது ஆகுமோ ஐயா.

பின்ன சனங்கள் சொல்லித்திரியுதோ. "மூடனின் கையில் பவ்வி பட்டால் மூன்று இடங்களில் சேதம்" என்று.

## விளையாட்டைக் கூட அரசியலாக்கலாம்



**அகில** இலங்கை மட்டத்திலான விளையாட்டமைச்சின் போட்டிகளை யாழ்ப்பாணத்தில் நடத்த முடியாத சூழ்நிலையைப் பற்றி யாழ். மாவட்ட விளையாட்டுஅபிவிருத்திச்சங்கம் விளக்கி ஒரு கண்டன அறிக்கையை வெளியிட்டதுடன், சிறுவர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சியை பழக்கிய சிங்கள அதிகாரிகளை வெளி யேறும்படி மக்களும் கோரியிருந்தனர்.

இதன்பின்னர் கொழும்பில் நடைபெற்ற இளைஞர்கள் சேவைகள் மாவட்ட அதிகாரிகளுக்கான கூட்டத்தில் சிறிலங்காவின் விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ யாழ்ப்பாணத்தில் இருந்தும் சுசந்திகா போன்ற வீராங்கனைகளை உருவாக்குவதற்காகவே 29வது போட்டியை யாழ்ப்பாணத்தில் நடத்த தீர்மானித்ததாகவும், இதனை புலிகள் குழப்பி விட்டதாகவும் கோபப்பட்டிருக்கிறார். விளையாட்டுப்போட்டி கூட ஊக்கிதான். ஆனால் உண்மையிலேயே சுசந்திகா போன்ற ஒரு வீரரை உருவாக்க அமைச்சர் விரும்பியிருந்தால் அதற்கு வேறுபல வழிகளும் உண்டு.


இதுவரை, வடக்கு - கிழக்கில் திருமலை தவிர்த்து அகில இலங்கைப்போட்டி ஒன்று நடத்தப்படக்கூடிய மைதானம் ஒன்று இல்லை. விளையாட்டு உபகரணங்களில் அவசியமானவை கூட இல்லை. வட-கிழக்கு தமிழர்களுக்கு தரமான பயிற்சிகளுக்கு வாய்ப்பளிப்பது இல்லை. எல்லாம் ஏன், யாழ்ப்பாணப் போட்டிக்கு சிறுவர்களை ஆரம்ப நிகழ்விற்கு தயார்படுத்தக் கூட ஒரு தமிழ் பயிலுநர் அமைச்சில் இருக்கவில்லை.

இப்படி பல்வேறு பற்றாக்குறைகளை வைத்துக்கொண்டு எப்படி சுசந்திகா போன்ற வீர்களை ஒரு போட்டியினூடே உருவாக்க அமைச்சர் நீர் எண்ணியிருந்தீரோ, அது மட்டுமில்லை இனிமேல் வடக்குக்கு எந்த உதவியும் செய்யப்போவதில்லை என்றும் சூளுரைத்திருந்திராம்.

28இலும் செய்யாததை 29 இல் நீர் விளையாட்டுக்குள் அரசியலை குழைத்து புட்டவிக்க முனைந்தால் புலிகள்விடுவரோ. ஆனால் ஒன்று, ஐக்கிய தேசிய முன்னணி அமைச்சர் ஒருவருக்கும் வடக்கு கிழக்கு அவரின் தேசத்தின் இறையாண்மைக்குள் இல்லை என்பதை சத்தியம் செய்யும் நிலமை தோன்றிவிட்டதோ? என்று எண்ண உதவியிருக்கிறதுஇது.

கோஷி

## மதவடி மயிலர்



**செய்தி:-** *கலவரத்தை ஏற்படுத்த ஜே.வி.பி முயல்கிறது என்கிறார் ஜோன் அமரதுங்கா.*

**மயிலர்:-** எறிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என நினைக்கும் கும்பல் வேறெதைச்செய்யும் பாருங்கோ..... இவர்கள் முன் கடவுள் தோன்றி உங்களுக்கு என்ன வரம் வேண்டுமென்று கேட்டால் பட்டென்று 'கலவரம' என்று தான் பதில் சொல்லுவீனம் பாருங்கோ....!

**செய்தி:-** *உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்ற அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு வேண்டுகோள்!*

**மயிலர்:-** மயிலே மயிலே எண்டால் மயில் இறகு போடாது பாருங்கோ, அன்பாய் கேட்டால் அழிச்சாட்சியம் கட்டுவினம். அடிச்சுக்கேட்டால் அடங்கிப்போவினம்.... இது தான் உலகம் பாருங்கோ. கெஞ்சினால் மிஞ்சுவர் மிஞ்சினால்... கெஞ்சுவர்.... விளங்குதெல்லே...

**செய்தி:-**
*பேசத்தயார் என்கிறார் விமல்வீரவன்ச....*

**மயிலர்:-** அதிகாரப்பகிர்வு யோச னையை அம்மணி கைவிடத்தயார் தான்.... ஆனால் பேச்சு முடிய ஆட்சியை பகிரச்சொல்லியெல்லே கேட்பினம். அதுதான் அவவுக்கு பயம் பாருங்கோ.... இடங்கொடுத்தால் மடங்கட்ட நினைக்கிற கூட்டமல்லே....

**செய்தி:-** *களத்தில் இறங்கி போரா டத்தயார் என்கிறார் சந்திரிகா....*

**மயிலர்:-** இதை 'தீச்சுவாலை' இரா ணுவ நடவடிக்கையின் போதெல்லோ சொல்லியிருக்க வேனும்.... இப்ப சமாதான காலத்திலை சண்டைக்கு தயார் என்று சவால் விட்டால் இதை என்னெண்டு சொல்லுறதாம்....? ஆறு வரண்டு கிடக்கேக்கை நான் இப்ப நீந்தத்தயார் எண்டு சொல்லுறது மாதிரியெல்லே கிடக்கு.....!

**செய்தி:-** *இலங்கையின் இனப் பிரச்சினைக்கு யுத்தம் மூலம் தீர்வு காணமுடியாது என்கிறார் சந்திரிகா....*

**மயிலர்:-** அப்ப..... சமாதானத்திற்கான யுத்தம் மூலம் தீர்வு காணலாமென்று சொல்லுறாவோ அம்மணி..... பேச்சு வார்த்தைக்கும் எதிர்ப்பு... யுத்தமும் சரிவராது எண்டால் என்ன மாதிரி? யுத்தத்திற்கும் பயம் சமாதானத்திற்கும் மாட்டேன் எண்டால் வேறென்னென்று கூடுவதாம்?

**செய்தி:-** *முகாமைப் பலப்படுத்துவதற்கு மக்களிடம் பொருட்கள் அபகரிப்பு...*

**மயிலர்:-** பிச்சை எடுக்குதாம் பெரு மாள் அதை பிடுங்கித்தின்றதாம் அனு மார்... எண்ட கதை மாதிரி எல்லே இருக்கு.... காணியை, வயலை, தோட்டத்தை பிடுங்கி முகாமாக் கிவிட்டு, இப்ப கிடக்கிற மிச்ச சொச்சத்திற்கும் வழி பண்ணப்பாக்கினம் போலை..... அதிரடிப்படையினருக்கு அதிகார வெறி கூடிக்கொண்டு தான் போகுது பாருங்கோ...!



குழந்தைகள் எங்கு உள்ளாரோ, அங்குள்ளதே பொற்காலம். - நோவாலிஸ்

# அந்த நாள்

**அன்று** செப்டெம்பர் 26ஆம் நாள். கிளிநொச்சி நகரின் மத்தியில் உள்ள பாசறையொன்றின் முற்றத்தில் நாங்கள் மூன்று போராளிகள் கதைத்துக் கொண்டிருந்தோம். மின்சாரம் தன் வழமையான நேரத்திற்கு நின்று போகநட்சத்திர வெளிச்சத்தில் மகிழ்ச்சியும், சோகமும், துன்பமும் தந்த நினைவுகளை மீட்டுக் கொண்டிருந்தோம்.

எப்போதுமே அன்றைய நாளில் எங்களுள் ஏற்படும் உணர்வுகள் வலிமையானவையாகவே இருக்கும். அந்த நாளில் இருந்து காட்டாற்று வெள்ளமென எங்கள் நினைவுகள் பரந்து விரிந்து வியாபித்துச் செல்லும். எங்களது உணர்வுகளின் பெரும் பகுதியை அந்த நாளில் இருந்து சங்கிலித் தொடர் போல மீட்டிப்பார்க்க முடியும்.

அப்போதுதான் திலீபன் அண்ணையின் நினைவாக உண்ணாவிரதமிருந்து, நீராடி, உணவு உண்டுவிட்டு வந்திருந்த தோழன் ஒருவன் கதையைத் தொடக்கி வைத்திருந்தான். வைத்திய கலாநிதி சிவகுமார் அவர்கள் திலீபனை தொட்டுவணங்கி அந்த அவல முடிவை அறிவித்த போது நல்லூரின் வீதியில் வெடித்துக் கிழம்பிய பேரொலி இப்போதும் எங்கள் மனங்களில் ஒலிக்க, அந்த பதினாறு ஆண்டுகளின் முன்பிருந்து தொடங்கினோம்.

திலீபனை வளர்த்த தளபதி கிட்டுவைச் சுற்றி, அவனது பிரியமான தோழன் மில்லரைச் சுற்றி, கோட்டையை, கிளிநொச்சியைச் சுற்றி... எங்கள் நினைவுகள் சுழன்று கொண்டிருந்தன. அவற்றிலிருந்து கிளையெடுத்துச் சென்ற எத்தனையோ விடயங்களைப் பகிர்ந்து கொண்டிருந்தோம்.

நேரம் பதினொரு மணியை அண்மித்த போது நாங்கள் இன்னமும் உணர்ச்சி பூர்வமான கட்டத்துள் பிரவேசித்தோம். அந்த நேரமும், அமைதியும், மெல்லியதான நிலவும் எல்லாவற்றிற்கும் மேலாக நாங்கள் அமர்ந்திருந்த இடமும் அப்படியொரு உணர்வை எமக்குள் ஏற்படுத்தியிருந்தன. சரியாக ஐந்து வருடங்களின் முன் இந்த நகரத்தைச் சுழ்ந்து பல்வேறு போர் அணிகளாக எங்களது வீரர்கள் அமைதியாக நகர்ந்து கொண்டிருந்த நேரம் அது. நாங்கள் தீவிரமாகப் பங்கெடுத்த அந்த நாட்களிற்குள் புகுந்து கொண்டோம்.

'எதிரி 'சத்ஜய' என கண்டிவீதியை பறித்தெடுக்கப் படையெடுத்தபோது இதே நாளில் இதே இரவில் கிளிநொச்சி புனித பற்றிமா பாடசாலையில் நடந்த பெரும் சமருடன்தான் அவனது படையெடுப்பு கிளிநொச்சியுடனேயே முடங்கிக்கொண்டது. அன்றிலிருந்து இந்த நகரத்தின் மக்கள் அகதிகளாக வன்னிநிலம் எங்கும் அலைந்த போது, எதிரியைச் சூழ அமைத்த காவலரண்களுக்குள் நாங்கள் குடி புகுந்து கொண்டோம்.

எறிகணைகளால் சிதையுண்டு போன இந்த நகரம் கண்முன்னாலேயே பற்றை மண்டிக்கொண்டிருந்தது. 1997 தை மாதத்தில் ஆனையிறவு பரந்தன் தளங்களுக்குள் புகுந்து விநியோகக் களஞ்சியங்களை அழித்தொழித்ததுடன் கிளிநொச்சியில் எதிரி பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்பாகிவிட எங்களது காவலரண் வேலியின் தேவையும் குறைந்து போனது. பின்னர்தான் எதிரி 'ஜயசிக்குறு'வை வவுனியாவில் இருந்து தொடங்கினான்.

'ஜயசிக்குறு' நாட்களில் எதிரியும் நாங்களுமாக விடாப்பிடியாக வன்னியின் தென்முனைக்காடுகள் எங்கும் அலைந்து திரிந்தோம். அங்கெல்லாம் அவர்களின் இயலாமையைப் புரிய வைத்தபோது கிளிநொச்சி மீண்டும் எரிமலைக் குழம்பாகிக் குமுறத் தொடங்கியது. கிளிநொச்சி மத்திய கல்லூரியின் முன்னால் கண்டி வீதியைக் குறுக்கறுத்துச் சென்ற தனது முன்னணிக் காவலரண்களில் இருந்து முன்னேறும் முயற்சியில் எதிரி விடாப்பிடியாகவே செயற்பட்டான்.

அந்த நாட்களில் எல்லாம் நாங்கள் எவ்வளவு நம்பிக்கையோடும் உறுதியோடும் இருந்தோம் என்பதை நினைக்கும்போது இப்போது பிரமிப்பாக இருந்தது. யாழ்ப்பாணத்தைப் பிடித்திருந்த எதிரி கண்டி வீதியில் எல்லா நகரங்களையும் வீழ்த்தியபடி வந்த போதும் நாங்கள் சலித்துப்போனதாக நினைவிலில்லை. எவ்வளவு உற்சாகமாய், மகிழ்ச்சியாய் நம்பிக்கையோடு இருந்தோம் என்பதை இத்தனை ஆண்டுகளின் பின் மீட்டிப் பார்க்கும் போது பிரமிப்பாகத்தான் இருக்கிறது.



எங்கள் தலைவரின் துணையுடன் எல்லா நிலங்களையும் மீட்டெடுக்கும் நாளுக்காய் நாங்கள் பொறுமையோடு காத்திருந்தோம்.

வன்னியின் கிழக்கையும் மேற்கையும் இணைத்து நின்ற இரணைமடு அணைக்கட்டின் ஊடான இறுதிப் போக்குவரத்துப் பாதையையும் கைப்பற்றி விட எதிரி தொடர்ச்சியாக முயல்வான்; அப்போதெல்லாம் வாழ்வா சாவா என்று சண்டையிட்டு வெல்வோம். ஒவ்வோரு தடவையும் கூடஇருந்த தோழர்கள் இல்லாது போய்விட எங்களது சுமைகள் அதிகரிக்கும். வன்னியிலிருந்து வரக்கூடிய சிறிய தொகை ஆளணியினை வைத்து எல்லாவற்றையும் சுமந்து கொள்வோம்.

புதியவர்களிலும் பெரும்பான்மையோர் முன்னைய சமர்களில் வீழ்ந்த தோழர்களினதோ அல்லது வன்னியின் எங்கோ ஒரு மூலையில் இப்போதும் காவலிருக்கும் போராளி ஒருவரினதோ சகோதரனாகவோ சகோதரியாகவோ தானிருப்பர். எல்லோருமாகச் சேர்ந்து மீட்பிற்காக உழைத்தோம். இன்னமும் வீழ்ந்து போகாத கிராமங்கள், பட்டினங்கள், நகரங்களில் இருந்த உறவுகள் களத்தில் வந்து எங்களின் சுமைகளில் பங்கெடுத்துப் போவார்கள்.

1998 பிறப்பெடுத்த ஆரம்ப நாட்கள். அந்த ஆண்டு தமது ஐம்பதாவது சுதந்திர நாளில் எல்லாவற்றையும் முடித்து வெற்றிக்கொடி நாட்டிவிட எதிரி சபதம் கொண்டிருந்தான். தெற்கிலிருந்து கொடி பிடித்துக் கண்டிவீதியால் வந்து, கிளிநோச்சியில் கைகுலுக்கி, தமது வெற்றியின் அடையாளமாக தாம் வெற்றி கொண்ட அடிமைகளை யாழ்ப்பாணத்திலிருந்து பேருந்திலேற்றி கண்டிக்குக் கொண்டு செல்லும் கனவில் மிதந்தபடி செயற்பட்டான் எதிரி.

அந்தக் கனவுடன் வந்த எத்தனையோ நூறு எதிரிகள் கிளிநொச்சியிலும் மாங்குளத்திலுமாய் வீழ்த்தப்பட்டார்கள். இறுதியில் எங்களால் திரட்டப்படக்கூடிய பலத்துடன் ஒன்றிணைந்து தாக்கி, சிறிலங்காவின் சுதந்திர நாளில் கொடிநாட்ட இருந்த எதிரியை அதே நாளில் கிளிநொச்சியின் மத்திய பகுதிவரை விரட்டியடித்தோம். முன்னூறு போராளிகள் இந்த நகரத்தைச் சூழவும் குருதிசிந்தி உயிர் தந்து வீழ்ந்தார்கள். அன்றிலிருந்து கிழக்கே ஊரியான் முதல் மேற்கே சுட்டதீவு வரையான நீண்ட காவலரன் வரிசையில் அசையாது நின்று



போரிட்டோம்.

இடிந்து சிதையுண்ட எங்கள் நகரத்தில் எதிரியின் மாபெரும் படைத்தளம் கட்டியெழுப்பப் பட்டுக்கொண்டிருந்தது. எங்களது கைகளில் வீழ்ந்து விடக்கூடாது என எதிரி நினைத்த ஆனையிறவின் பாதுகாப்புக் கவசமாக இருந்ததால் கிளிநொச்சித் தளத்தில் ஆயிரக்கணக்கான இனவெறி பிடித்த, நன்கு பயிற்றப்பட்ட முன்னணிப்படைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

அப்போதெல்லாம் 'பேயமைதி' மண்டிக்கிடக்கும் கடும் இருள் பொழுதுகளில்; இதோ இப்போது நாங்கள் இருந்து கதைத்துக்கொண்டிருக்கும் இந்தப் பகுதியிலிருந்து எழும் பெரு வெளிச்சம் மரங்களின் மேலால் எங்கள் கண்களுக்குள் தெரியும். அந்தப் பொழுதுகளின் போது எண்ணிக்கொள்வோம், காடுகளுக்குள் குடிசையிட்டு இருக்கும் இந்த நகரத்தின் மக்களை.

எப்போதும் வரும் கத்தரிக்காய் 'கறி'ச் சாப்பாடு, மண்ணைத் தோண்டியெறியும் நாளாந்த வேலையில் தேய்ந்து போகும் ஒன்றோ அல்லது இரண்டோ உடைகள், தனக்கு ஓய்வு தருமாறு எப்போதும் கெஞ்சிக் கொண்டிருக்கும் மண்வெட்டிகள், கிளிநொச்சிக் கிணறுகளால் எப்போதாவது குளிப்பாட்டப்படும் உடல் என எல்லாவற்றோடும் மனதில் மட்டும் கலக்கமின்றித் துப்பாக்கிகளை பத்திரப்படுத்தியபடி அந்த "என்றோ ஒருநாள்"இற்காக காத்திருப்போம்.

எங்களது தோழர்களில் பலர் தமது ஒரு வயதை அந்தக் காவல் வேலிகளிலேயே கழித்திருந்தார்கள். அம்மாவை, அப்பாவை, சகோதரர்களைக் கடைசியாகக் கண்டு பல வருடங்களுக்கு மேலாகியிருந்தது. பலரது தேகம் மட்டும் மூன்றோ நான்கு தடவைகளுக்கும் மேலாக விழுப்புண்களைத் தாங்கியிருந்தது. அவர்கள் மட்டும் அந்தக்குறுகிய நாட்களில் போர் மருத்துவ மனைகளில் புண்களின் வேதனையுடன் கூடிய சிறிய 'விடுமுறைகளை' கழித்திருந்தார்கள். அந்த வேதனைகூட முற்றாக மாறமுன்னரே களத்தில் அவர்களும் கலந்துவிடுவார்கள்.

மழைகாலங்கள் மிகுந்த கொடுமைதரும். நாங்கள் நிலை கொண்டிருந்த பகுதிகளிலுள்ள மக்களின் வீடுகள் எல்லாமே கூரைகள்இன்றி இடியுண்டு போய்க் கிடந்தன. அந்தக் கூரைகளையெல்லாம் கழற்றிச் சென்றிருந்த எதிரி தனது காவலரண்களை நன்றாக அமைத்து வைத்திருந்தான். பின்னர் கிளிநொச்சியை மீட்டபோது மக்களின் வீட்டுக்கதவுகள்கூட பெரும்பாலான காவலரண்களில் சிப்பாய்களின் படுக்கைக் கட்டில்களாக இருந்ததைக் கண்டிருக்கிறோம். ஆனால் எங்களது காவலரண்கள் பல வேளைகளில் நீர்த்தேக்கமாகிவிடும். மழைக்குள் நனைந்த படியே நித்திரை கொள்ளும் அனுபவத்தைக்கூட நாங்கள் பெற்றுவிட்டிருந்தோம்.

காரிருள் பொழுதுகளில் எமது வேவு வீரர்கள் எதிரியின் பாசறைக்குள் புகுவதற்காகப் புறப்பட்டுப் போவார்கள். சில வேளைகளில் அவர்களில் பலர் திரும்பி வராமலேயே போய்விடுவார்கள். சிலர் வாரக்கணக்கில் காணமல்போய் என்ன நடந்துவிட்டதோ என்று ஏங்கியிருக்க ஒட்டியொடுங்கிப்போய் மீண்டு வருவார்கள். அவர்களின் கதைகளைக் கேட்டு ஒருபுறம் வருந்துவோம். எதிரியின் வலயத்துள் முற்றுகைக்குள் சிக்கியிருந்தபோது முகாம்களுக்குள் உணவுக்கும் தண்ணீருக்குமாகப் புகுந்து அவற்றுடன் கூடவே தகவல்களையும் பெற்றுவரும் அவர்களின் கதைகளைக்கேட்டு எல்லோருமாக சிரித்து மகிழ்வோம். மீண்டும் மீண்டும் அவர்கள் புறப்பட்டுப் போவார்கள். அப்படித்தான் "அந்தநாளை" அடைவதற்கான மார்க்கங்களைக் கண்டறிந்து வருவார்கள்.

காவல் காத்த படியே மாபெரும் சமருக்கான பயிற்சியிலும் போராளிகள் ஈடுபட்டார்கள். இரட்டிப்புச் சுமை என்ற போதும் "அந்தநாள்" பற்றிய இனிமையான எதிர்பார்ப்புக்களுடன் எல்லாவற்றையும் சுமந்தோம். எங்களுக்குத் தெரியும் இந்த நகரம் மீட்சி பெற்று வயல்கள் பசுமைகாணும் நாளில் அதைக்கண்டு மகிழ்வுற எங்களில் பலர் இருக்கமாட்டோம் என்று. "என் தோழர்களுடன் வானத்தில் இருந்து பார்த்து மகிழ்வேன்" என்ற திலீபன் அண்ணணின் வார்த்தைகள் எங்களுக்குள்ளும் எதிரொலிக்கும்.

1998 செப்டெம்பர், சமருக்கான நாட்கள் நெருங்கி நெருங்கி வந்தன. நகர்மீளும் அந்த நாளுக்காக இத்தனை நாட்களும் உயிர்விட்ட அத்தனை தோழர்களின் கனவுகளுடனும் காத்திருந்தோம். அன்று, இன்று உண்ணாதிருந்த இதேநாளில் (செப்டெம்பர்-26) நல்ல உணவுண்டு உறுதி எடுத்துக்கொண்டு, எங்கள் எங்களது சமர்முனைகளுக்காகப் பிரிந்து சென்றோம். இதே இரவில் அன்று இந்த நகரத்தைச் சூழ்ந்த பதினான்கு முனைகளில் எமது சமரணிகள் கட்டளைக்காகக் காத்திருந்தன.

நள்ளிரவைத் தாண்டிய ஒரு நேரத்தில் பிரளயம் வெடித்தது. எல்லாமுனைகளாலும் பாய்ந்தோம். அந்த இருள் பொழுதில் எம்மிடம் வீழ்ச்சியுற்ற ஏராளமான காவலரண்களுள் கணிசமானவற்றை விடிந்த பொழுது எதிரி மீளவும் கைப்பற்றி விட்டான். ஆனால் தளத்தின் பிற்பகுதியில் ஊடுருவிய எமது ஏனைய அணிகள் எதிரித்தளத்தைப் பிளந்து அதை ஆனையிறவு-பரந்தன் [illegible] தளங்களிலிருந்து [illegible] யிருந்தன. [illegible] கரும்புலி அணிகளோ [illegible] தளங்கள், வெடிபொருட் களஞ்சியங்கள், படைத்தலைமையகங்கள் எல்லாவற்றையும் குறிவைத்து அழித்தொழிக்கத் தொடங்கிவிட்டிருந்தன.

மறுநாள் 27ஆம் திகதி பகல் பொழுது முன்னணிக்காவலரண் பகுதியில் மீண்டும் பாரிய சமர் வெடித்தபோது எமது போராளிகள் விடாப்பிடியாக முன்னேறிச் சென்றார்கள் அன்றைய இருள் பொழுதில் எதிரியின் உச்சபாதுகாப்பு வலயத்தை நோக்கிப் போராளிகள் முன்னேறத் தொடங்கிவிட்டார்கள். எதிரியோ எமது தடுப்பு அணிகளைக் கடந்து ஆனையிறவை நோக்கி விழவிழ ஓடிக்கொண்டிருந்தான்.

எமது போராளிகள் தளத்தைக் கைப்பற்றிய போது எதிரியின்பாசறைகள் மின்னொளியில் மிதந்தபடியிருந்தன. எதிரியின் தலைமையகத்தில் சிங்கக்கொடி பறந்து கொண்டிருந்தது. அதேஇடத்தில் மறுநாட் காலை குதூகலித்து வந்த மக்கள் புடைசூழ புலிக்கொடியை ஏற்றினோம். எங்களின் எதிர்பார்ப்பிற்குரிய "அந்தநாள்" மலர்ந்தது. எல்லாவற்றிற்கும் உரமாக அந்தச்சமரில் மட்டும் 403 தோழர்களை கிளிநொச்சிமண் அணைத்துக்கொண்டது.

கிளிநொச்சிக்குளக்கட்டில் எவருமே மீதமின்றி மறைந்துபோன லெப்.கேணல் சித்தாவின் அணியிலும், கிளிநொச்சி இந்துக்கல்லூரிப் பகுதியால் களம்இறங்கி எவருமே திரும்பிவராமல் போன மேஜர் கனீபாவின் அணியிலும் இருந்த தோழர்களினதும் தோழிகளினதும் கதைகளை அறிய இப்போதும் துடித்தபடி இருக்கிறோம்.

**- இளநிலவன் -**

நேர்நோக்கு

# கொடூரச்சட்டத்தின் நுகத்தில்...

***சிறிலங்காவில்*** அமுலிலுள்ள பயங்கரவாதச் சட்டத்தை நீக்க வேண்டும் என்ற கோரிக்கை பல தரப்பினராலும் விடுக்கப்பட்டு வருகிறது. இச்சட்டமானது சாதாரண மனிதாபி மானநெறி முறைக்கு



முற்றிலும் விரோத மானது. இச்சட்டம் ஆயுதப் படையின ருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரங் களை வழங்குகிறது என மனித உரிமை யாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

"பயங்கரவாதத்தில்" ஈடுபட்டார் என எவரையும் குற்றம் சாட்டி அவரை விசாரணையின்றிக் கொல்லவும் தடையமின்றி அவரது உடலை அழித்து விடவும் கூட இது படையினருக்கு அனுமதி அளிக்கின்றது. இச்சட்டத்தைப் பயன்படுத்தி கொடூரச்சித்திரவதைகள் மூலம் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை, நீதிமன்றத்தில் ஓர் ஆதாரமாகச் சமர்ப்பிக்க முடியும். இதனால் அப்பாவிகள் கூட குற்றவாளியாக்கப்படும் நிலை. சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்படும் எவரையும் நீண்ட காலத்திற்கு சிறையில் அடைத்து வைக்க இச்சட்டம் வழி செய்கிறது.

இத்தகையதொரு கொடூரச்சட்டம் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக இலங்கையில் அமுலாக்கப்பட்டுள்ள போதிலும் அதனை நீக்க வேண்டும் என தென்பகுதியில் போராட்டம் எதுவும பெரிதாக நடைபெறவில்லை என்பது இங்கு கவனிக்கத்தக்கது. ஏனெனில் இச்சட்டம் பாய்வது தமிழ் மக்கள் மீது என்பதே அதன் காரணமாகும்.

எனினும் 1987-1989 காலப் பகுதியில் ஜே.வி.பி மீதும் இச்சட்டம் பாய்ந்தது. ஜே.வி.பி. யினர் என்ற போர்வையில் சிங்களக்கிராம மக்கள், அரசியல் எதிரிகள் மீதும் கூடப்பாய்ந்தது. அப்போதும் கூட இச்சட்டத்திற்கு எதிராக தென்பகுதியில் குரல் எழவில்லை. இன்று தொட்டதற்கெல்லாம் போராட்டம் நடத்தும் ஜே.வி.பி தன் தலைவரையே இலகுவாக அழித்து விட உதவிய பயங்கரவாதத்தடைச் சட்டத்திற்கு எதிராக இன்றும் கூட போராட்டம் நடத்த முன்வரவில்லை. இதன் மூலம் இச்சட்டம் சிங்களவர் தரப்பை பாதிப்பதை விட தமிழ் மக்களையே அதிகம் பாதிக்கிறது என்பது தெளிவாகிறது.

படையினர் சிறிலங்கா என்ற நாட்டின் பாதுகாவலர்களாகவோ அல்லது சிறிலங்கா மக்களின் காவலர்களாகவோ செயற்பட்டதில்லை. சிறிலங்காவின் ஆளும் தரப்பின் ஆட்சி அதிகாரத்தின் ஏவற்படையாகவே இருந்து வந்துள்ளனர். பதவி உயர்வுகள், சலுகைகள், ஊழல் மோசடிகளை மறைத்தல் போன்ற காரணங்களுக்காக எப்போதுமே ஆளும் கட்சியினரின் கட்டளைகளை அப்படியே நிறை வேற்றுபவர்களாகவே இருந்திருக்கின்றனர். ஆட்சியாளர்களுக்காக இவர்கள் செய்த தேர்தல் மோசடிகள். தேர்தற்கால கொலைகள். குற்றச்செயல்கள் என்பன எண்ணிலடங்காதவை.

தனிப்பட்ட நலன்களுக்காக சொந்தபகைக்காக அயல வர்கள். உறவினர்கள், ஊரவர்கள் மீதும் இவர்களின் ஆயுதங் களும் அதிகாரங்களும் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன.

அத்துடன் இவர்களால் விளக்கமறியல். சிறைப்படு கொலைகள் என்பன நிகழ்த்தபட்டிருக்கின்றன. அண்மையில் அதிஸ்ட லாபச்சீட்டில் 35 லட்சம் பெற்றவர் விளக்க மறியலில் மர்மமாக மரணமடைந்தார். இதனையடுத்து 4 கோடிக்கு மேல் பரிசு பெற்ற ஒருவர் பரிசுத்தொகையையே புறக்கணித்து விட்டதாகத்தகவல் ஒன்று கூறுகின்றது.

இவ்வாறு சிங்கள மக்களே அஞ்சும் சிறிலங்காவின் காவல்துறையின் கையில் முழு அதிகாரங்களையும் வழங்கி தமிழர்கள் அனைவரையும் ஒப்படைத்தது போன்றதே இப்பயங்கரவாதத் தடைச்சட்டமாகும்.

இச்சட்டத்தின் கீழ் கைதாகி விசாரணையின்றி அடைத்து வைக்கப்பட்டிருந்த அப்பாவிகள் பலர் சிறைக்ளிலே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு ஒரு தடவை இருதடவைகள் அல்ல 1983முதல் பலதடவைகள் இடம் பெற்றிருக்கின்றன.

இந்தப்படுகொலைகள் எல்லாம் சிறிலங்காப்படையினர். பொலிசார். சிறை அதிகாரிகளின் பார்வையின் கீழேயே இடம் பெற்றிருக்கின்றன.

எனவே முற்றுமுழுதாக எவ்வித பாதுகாப்புமற்ற நிலையிலேயே இச்சட்டத்தின்கீழ் தமிழ் மக்கள் வைக்கப் பட்டிருக்கின்றனர். இதற்கு எதிராகப்போராட வேண்டிய நிலையி லும் தமிழ் மக்களே இருக்கின்றனர். இன்றுள்ள புதிய உலக ஒழுங்கு இவ்வாறான பயங்கரச்சட்டங்களை அமுல் செய்வதன் மூலமே உலகளாவிய பயங்கரவாதத்தை ஒழிக்க முடியும் எனக்கருதுகின்ற நிலையில் இந்தப்போராட்டமானது மேலும் கடினமானதாகவே இருக்கும். ஆனால் சமாதான முயற்சிகள் நம்பிக்கைக்குரியவையாக மாறுவதாயின் இச்சட்டம் நீக்கப்படுவதும் அவசியமாகும்.

**வேலவன்**

# யாழ்ப்பாணத்தின் விலைவாசி

***மனித*** உரிமை அமைப்புக்கள் என்றாலும் சரி, மனித நேயப்பணி புரியும் தொண்டர் அமைப்புக்கள் என்றாலும் சரி மனித உரிமைப்பிரச்சினை என்று வந்துவிட்டால் அதனை புலிகளோடு இணைத்து விடுவதில் தான் அதிக அக்கறையாக இருக்கின்றன. அல்லது, புலிகளோடு இணைக்கக் கூடியவற்றில் தான் அக்கறை காட்டுகின்றன. யாழ்ப்பாணத்தில் மீன் பிடிப்பிரச்சினை தொடர்ந்து பேசப்பட்டு வரும் ஒரு கரையோர வாழ்மக்களின் பிரச்சினையாகவே உணரப்படு கின்றது. இதேபோலவே மீளக்குடியமரும் பிரச்சினையும் இடம்பெயர்ந்து வாழும் மக்களின் பிரச்சினையாகத்தான் உணரப்படுகிறது.

ஆனால், இவை இரண்டும் அந்தந்த மக்களுக்குரிய பிரச்சினையாக மட்டும் இருக்கவில்லை. அது மொத்த யாழ்குடாநாட்டு மக்களையும் பாதிக்கின்ற பிரச்சினையாக இருக்கின்றது என்பது உணரப்படவில்லை.

குருநகா, பாசையூர், நாவாந்துறை, கொழும்புத்துறை ஆகிய பிரதேசங்களில் மீன் பிடிப்பதற்கு படையினர் தொடர்ந்தும் முட்டுக் கட்டையை போட்டு வருகின்றனர்.

இயந்திரப்படகில் மீன் பிடிப்பது இவர்களால் தடை செய்யப்பட்டிருக்கின்றது. மீன் பிடிக்கும் நேரத்தையும் வரையறை செய்கின்றனர். படகில் பயன்படுத்தப்படும் பாய்கள் நாளுக்கு நாள் படையினர் சொல்லும் வர்ணத்திற்கு மாற்றப்பட வேண்டுமென நிபந்தனை விதிக்கின்றனர். இவையெல்லாம் காலங்காலமாக அங்கு வாழ்ந்து தொழில் செய்து வந்த மக்களை, அவர்களது உரிமை களை எந்தச்சட்ட விதிகளுக்கும் உட்படாத அரசபடை என்ற அதிகாரத்தின் மூலம் இம்சைப்படுத்துகின்ற செயல் என்பது மனித நேயத்தின் கண்களை அதிகம் உறுத்த வில்லை. ஆனால், இதன் விளைவு யாழ்ப் பாணத்தின் கடலுணவிற்கான நிரம்பலை பாரிய அளவில் குறைத்துவிடுகின்றது. இதனால் யாழ்ப்பாணத்தில் இயல்பிற்கு மீறியவாறு கடலுணவின் விலையுயர்ச்சி உள்ளது.

இதே போலவே மீள்குடியேற்றப் பிரச்சினை அந்த மக்களின் வாழ்வுரிமையை



பாதிக்கின்றது என்பது ஒருபுறம் இருக்க, செழிப் பான உற்பத்தி நிலங்களான வலி வடக்கு போன்ற நிலங்கள் இதற்குள் உள்ளடக்கப்படு வதுடன் தென்மராட்சியிலும் ஆயிரம் ஏக்கர் பயிர்ச்செய்கை நிலம் இதற்குள் உள்ளடக் கப்பட்டிருக்கின்றமை யாழ்ப்பாணத்தில் மரக்கறி உற்பத்தியை பெரிதளவில் பாதித்திருக்கின்றது. இதன் விளைவால் இயல்பிற்கு மீறி இதன் சந்தைவிலை அதிகரித்திருக்கின்றது. மேலும் தென்பகுதி காய்கறிகளும் சந்தையில் நிரம்புவது கூட ஒரு துர்க்குறியாக இருக்கிறது.

யாழ்பாணத்தின் வாழ்க்கைச்செலவில் இந்த அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை செலுத்துகின்ற தாக்கம் சாதாரணமானதல்ல. இதன் விளைவால் சிறுவர்கள் உட்பட பெரும் போசாக்கு பாதிப்பை யாழ்ப்பாணம் எதிர்கொள்ள வேண்டி யிருக்கின்றது. போசாக்கு குறைபாட்டால் ஏற்படும் நோய்களும் அண்மைய ஆண்டுகளில் மிக மோச மாக அதிகரித்திருக்கின்றது. இவற்றில் அரசாங்கம் விடாப்பிடித் தனத்தோடு நடந்து கொள்வது மனிதநேய கண்களை உறுத்தவில்லை.

தெற்கில் தேர்தல் விஞ்ஞாபனத்தின் முக்கிய வாக்குறுதியாக இடம்பிடித்துக் கொள்வது பாணின் விலை குறைப்பும் மாவின் விலை குறைப்புமே. புதிதாக ஆட்சியேறும் எந்த அரசாங்கமும் இதனை செய்து சிங்கள மக்களை மகிழ்விக்க என்றும் தவறியதில்லை.

இப்படியிருக்க, யாழ்ப்பாண மக்கள் விலை வாசியால் அவதியுறுவது எவரினதும் கரிசனைக்குரியதான ஒன்றாக இருக்கவில்லை. மாறாக புலிகளின் தீர்வை விதிப்போடு இதனை சம்மந்தப்படுத்தி இந்த மனித நேயக்கண்கள் கண்ணீர் விடுகின்றன. அறிக்கையிடுகின்றன.

அரசியல் உள்நோக்கங்களின் அடிப் படையிலேயே அனைத்தையும் அணுகும் இவர்களை நிர்ப்பந்திக்க யாழ்ப்பாணத்தின் மொத்த சமூக பிரதிநிதித்துவ அமைப்புக்களும், யாழ்குடாநாட்டின் மொத்தமான பிரச்சினையாக இதை உணர்த்துவதற்கு பரந்தளவிலான செயற்பாட்டில் இறங்க வேண்டும். இது இந்த அர்த்தத்தில் வெளிப்படுத்தப்பட வேண்டியது அதன் குறுகிய பார்வையில் இருந்து அதன் தாக்கத்தை பரந்த அளவில் விளக்குவதற்கு அவசியமாக இருக்கிறது.

**பிரவீன்**

***2003ஆம்*** ஆண்டிற்கான அரச சாஹித்திய விழா கடந்த 18.09.2003 வியாழக்கிழமையன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்று முடிவடைந்துள்ளது. சிறப்பு அதிதிகளாகமின்சக்தி எரிபொருள் அமைச்சர் திரு.கரு ஜயசூரிய அவர்களும் கல்விகலாசார. மனிதவள அபிவிருத்தி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அவர்களும் கலந்துகொண்டனர்.

சென்ற ஆண்டினைப்போலவே இம்முறையும் தமிழ்மொழிப் புறக்கணிப்பு இடம் பெற்றது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

# தேசிய இலக்கிய விழாவில் மீண்டும் வேதாளம் ...?

அரங்கத்தின் மத்தியில் தனிச்சிங்களத்திலேயே விழா வினைப்பற்றிய அறிவித்தல் இடம் பெற்றிருந்ததையும், விழாமலரின் முன் அட்டையில் 'அரச சாஹித்திய விழா' என்ற ஒரேயொரு வசனத்தைத்தவிர நிகழ்ச்சிபற்றி அறிவிப்பு தனிச்சிங்களத்திலேயே இடம்பெற்றிருந்தது. அது மாத்திரமின்றி 'சாஹித்யரத்ன உபகாரசம்மான' என்ற பெயரிலான இலக்கிய இரத்தின உதவி விருது என்ற தலைப்பில் விருது பெறும் சிங்கள. தமிழ். ஆங்கில அறிஞர்கட்கான அறிமுகங்களின் போது சிங்களமொழி அறிஞர் பேராசிரியர் ஆனந்த குலசூரிய அவர்களைப் பற்றிய அறிமுகம் சிங்கள மொழியிலும். ஆங்கில மொழியில் பணியாற்றிய திருமதி புண்ணிய காந்தி விஜேநாயக்க அவர்களைப் பற்றிய விபரம் ஆங்கிலத்திலும். தமிழறிஞர் திரு.சொக்கன் அவர்களைப்பற்றிய விபரம் தமிழ்மொழியில் இடம் பெறாது ஆங்கிலத்திலும, இடம்பெற்றிருந்தது அதுமாத்திரமன்றி நிகழ்ச்சி அறிவிப்புக்கள் மாத்திரம் மும்மொழிகளிலும் இடம்பெற்று. சிறப்பு அதிதிகளில் உரைகள் தனிச்சிங் களத்திலேயே இடம்பெற்றன. சிங்கள மொழியறிவு இல்லாத தமிழ் இலக்கியக்குழு அங்கத்தவர்கள் உட்பட விழாவிற்கு வருகை தந்திருந்த மிகவும் குறைந்த தொகையினராகக் கலந்து கொண்ட தமிழ்மக்கள் எதுவுமே புரிந்துகொள்ள முடியாதவர்களாக வீற்றிருந்தமை மிகவும் பரிதாபகரமாக இருந்தது.

சிறப்புரையாக 'மொழியின் எல்லை தாண்டி யுத்தத்தைப் பின்புலமாகக் கொண்ட ஈழத்து நவீன கவிதைப்படைப்புக்கள்' என்ற தலைப்பில் உரையாற்றிய பேராதனைப்பல்கலைக்கழக சிங்களத்துறைப் பேராசிரியர் பி.பீ.மீகஸ்கும்புர அவர்களின் 'உரையும் சிங்களத்திலேயே இடம்பெற்றது. அவரது உரைகள் நூலாக மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டு வழங்கப்பட்டாலும்கூட அதுவும் குறிப்பிட்ட ஒரு சிலருக்கே வழங்கப்பட்டதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

இம்முறையும் சென்ற ஆண்டினைப்போலவே சிங்கள மொழியில் பல்துறைகளில் வெளியான 17 ஆக்கங்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்ட வேளையில் தமிழ்மொழியில் ஏழேஏழு நூல்களுக்கு மாத்திரம் அவை வழங்கப்பட்டன. இவை ஏன் என்பதுதான் புரியாத புதிராக இருக்கின்றது.

இவ்வேளையில்தான் தமிழ் இலக்கியக்குழு என்ன செய்கின்றது? முழுமையாகச் செயற்படுகின்றதா? அல்லது செயற்பட முடியாத கையறு நிலையிற்தான் இருக்கின்றதா? ஆண்டுக்கொரு தடவை வெறுமனே ஏழு நூல்களுக்கு. அதுவும் குறிப்பிட்ட ஒரு சிலருக்கு வேண்டப்பட்ட வர்களுக்கு மாத்திரம்



வழங்குவதற்காக மட்டுமே தமிழ் இலக்கியக் குழு தேவையா? என்ற பல வித மான வினாக்கள் தமிழிலக்கிய வாதிகளின் நெஞ் சங்களில் ஏற்படுவதில் தவறில்லை.

எமது உரிமைகளை நாம் போராடித்தான் வென்றெடுக்க வேண்டும். இது கடந்தகால வரலாறு காட்டும் பேருண்மை. வெறும் பதவிகளுக்காக மாத்திரம் குழுக்களில் அங்கம் வகிக்காது உரிமையோடு செயற்பட முடியாது போனால் அந்தப்பதவிகளில் உட்காந்திருப்பதில் எதுவித அர்த்தமும் இல்லை.

சில உரிமைகளைப்பற்றி தட்டிக்கேட்டமை யாலேயே சென்ற வருடம் இலக்கியக்குழுவில் இடம் பெற்றிருந்த கம்பன் கழகம் திரு.ஈ.ஜெயராஜ்அவர்கள் இம்முறை இலக்கியக்குழுவில் இருந்து ஓரங்கட்டப் பட்டிருக்கின்றார்.

**வல்வையூரான்**




## உங்களுக்காகவே!

இளையவர்களே உங்களுக்காக வெள்ளிநாதம் திறந்திருக்கும் இப்பகுதியில் உங்கள் மனதில் தோன்றுவற்றை கவிதையாகவோ சிறுபடைப்புக்களாகவோ உங்களைப் போன்றவர்களுக்காக எழுதுங்கள், உங்களையும் வளர்த்துக்கொள்ளுங்கள் மற்றவர்களையும் மகிழ்வியுங்கள்.

# சொல்லவேண்டிவந்த பொய்கள்

தமிழீழத்திலே ஓயாத அலைகள் 01.02.03.04 இப்படி பல பெருஞ்சமர்கள் விடுதலைப்புலிகளால் நடாத்தப்பட்டது. இந்தச்சமருக்கு இளையோர் முதல் முதியோர்வரை அனைத்து வழிகளிலும் பங்களிப்புச் செய்தார்கள். களமுனை போராளிகளுக்கு உணவு கொடுப்பதிலிருந்து அவர்களுடன் அங்கிருந்து பதுங்கு குழிகள் அமைத்தல், காயப்பட்டவர்களை பராமரித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டார்கள். நானும் சும்மா இருக்காம போராளிகளுக்கு சின்னச்சின்ன உதவிகள் செய்தேன். இங்கு நடைபெறும் சண்டைகளை அறிந்து பாராட்டி கொழும்பில் வசிக்கும் எனது நண்பன் குலேந்திரன் கடிதமூலம் என்னுடன் தன் உணர்வுகளை பகிர்ந்துகொள்வான். அங்கிருந்தாலும் அன்னை தேசத்திற்கு பங்களிப்பு செய்ய தவறுவதில்லை நண்பன். அவன் கேட்பான் நீ என்ன உதவி செய்கிறாய் என்று. நானும் விட்டுவைப்பதில்லை. இவரென்ன அங்கயிருந்து நான் செய்பிறத நேரபாக்கப்போறானே சும்மா அப்பிடி இப்பிடி உதவிகள் செய்கிறேன் என்று பதில் கடிதத்தில் எழுதி அனுப்பி விட்டேன். இதற்கு பதில் கடிதமும் வந்தது. தான் அலுவலக விடுமுறைக்கு இம்முறை இங்கு வருவதாக! கடிதம் பார்த்ததும் எனக்கு ஒரே கலக்கம். நண்பன் வந்து என்னை கழுத்துப்பிடி பிடிக்கப்போறானே என்று.



சொன்னபடி நண்பன் வீட்டு வாசலுக்கே வந்து விட்டான். இப்போ என்ன செய்வதென்று தெரியாதவனாய் புன்னகையுடன் வரவேற்றேன். வீட்டிற்குள் நுழைந்தவன் மறுகணமே நான் திண்டாடிய விடயத்திற்கே வந்து விட்டான். என்னமச்சான் இங்க வியக்கத்தக்க சண்டைகளெல்லாம் நடந்து நீயென்ன செய்தாய் சொல்லு நேர கேப்பம்! நான் உதவிகள் செய்த தென்றால் இவன் நம்பவே மாட்டான். ஆதாரம் காட்டிச் சொல்வதற்கு ஏதுவுமேயில்லை. ஏனென்றால் சாப்பாடு கட்ட வாழையிலையும் வாழை நாரும்தானே நான் கட்டுக் கணக்கில் குடுத்திருக்கிறன். இதை எப்பச் சொல்வது. எண்ணங்கள் எங்கெங்கோ ஓடியது. இடையில் மனதிற்கு ஆறுதலாய் திட்டம் இருக்க பொய்கள் பறந்து வந்து வழியமைத்தது.

"என்ன மச்சான் நீ இப்பிடி கேக்கிறாய் நான் சண்டையில விழுப்புண் தாங்கியேயிருக்கிறன் இது உனக்கு தெரியுமே" பொய்கள் மெல்ல மெல்ல நகர்ந்தது. நான் சின்னவயசில வலு சுட்டித்தனமானவன். உந்த கொய்யாமரம், மாமரம் ஏறுறதில் விண்ணன். அந்த நேரம் மரத்தில இருந்து விழுந்ததில வலது காலில் ஒரு காயம் வந்தது. அது மாறி இண்டைக்கு பதினைஞ்சு இருபது வருடமாப்போச்சிது. அந்த தடயம் எனக்கு உதவிகரமாய் எத்துப் பட்டது. அதை உடனே இந்தா பார் எனக்காட்டினேன் நண்பனும் நம்பியே விட்டான். நான் வேற என்னத்த சொல்லுறது. இத சொல்லி ஒரு மாதிரி தப்பிக்கொண்டேன். போர்க்களத்தில் புறமுதுகிடாது விழுப்புண்ணேந்திய இந்த வீரமகாபுருஷன்.

**க.அப்பன்**

## எங்கே?

விடுதலை நோக்கி விரைந்த
வீரமணி செல்வங்களே
விடியலுக்காய் ஒளிதந்து
வீறு நடை போட்ட வேங்கைகளே
உங்கள் வதனங்கள் எங்கே

கடும் மழையிலும்
சுடும் பகை எதிர்த்து
களமாட விரைந்த காவியங்களே
உங்கள் வரவுகள் எங்கே

சுதந்திரமாக எம்மண்ணில்
சொர்க்கத்தை உருவாக்க
எண்ணிய
காவல் தெய்வங்களின் சுவடுகளே
எம்மவர் பாதங்கள் எங்கே

வெற்றி பெற்று வீழ்ந்த மகனின்
செய்தி
பெற்றவள் காதோரம் சேர்ந்திட
கதறி அழுதவள்
கண்ணீர் கடலில் மூழ்கிட
அவள் இனி ஆறுதல் அடைவது
எங்கே
வடுவுக்கு மேல் வடுவாங்கி
வளமிழந்த எம் மண்
வளம் பெற இனி வாழ்வது எங்கே

## தெளிந்தேன்

மதுமடி - நீ
காய்வைத்திட வேண்டாம்
நான் சொன்னபடி கேள் - எனும்
பெரியார் சொல்லை
புறந்தள்ளி விட்டு எதிர்வரும்
விபரீதம் விளங்கிக்கொள்ளா
அம்மடி கால் பதித்த
என் மனப்போக்கிற்கு
எங்கிருந்தோ கசிந்து வந்து
என் உள்ளத்தில் குடிகொண்ட
கொடிய மது போதை
எனை ஆட்கொண்டு
கன்னத்தில் ஓங்கி அறைந்தது
இனியும் என்னைத் தொடாதேயென்று!

க.ஈழக்குகன்

சிறு குருவி வீடு கட்டும்
தென்னோலை பாட்டிசைக்கும்
குரியப்படியன்
செவ்வரத்தம்பூவை
புனரும் என் ஊரின்
இருப்பிழந்தேன்,
அலை எழும்பும்
கடலோரம் ஓர் வீடும்
செம்மண் பாதையோரம்
ஓர் தோட்டமும்
கனவுப்பணம்தேட
கடல் கடந்தோம்
நானும் நாங்களும்
அகதித்தரையில்
முகமிழந்தோம்.........

வ.சுதர்சன்

அகதி

## விசயமறிந்த பாட்டி

பங்கரில்
குப்பை கூழங்களை போட்டு
தென்னம்பிள்ளை நடலாம் என்றேன் நான்
தோடைக்கும் தோதென்றான் தம்பி
தென்னம்பிள்ளையா? தோடையா?
வாதப்பிரதி வாதங்கள்
தடுகாண
பாக்கு இடித்துக்கொண்டிருந்த
பாட்டி சொன்னாள்
உதுகள வேறிடத்தில் நடுங்கோ
பங்கர தூர்க்காமல்
கொங்கிரீற்றால கட்டுங்கோடா(?)

திருமலைத்தனன்

# காதல் வாசல்

அண்ட சராசரங்கள் அனைத்தும் ஏதோ ஓர் ஈர்ப்பில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறது.

அந்த ஈர்ப்பு ஒவ்வொரு அணுவிலும் நிரம்பியிருக்கிறது என்கிறது விஞ்ஞானம். உயிர் சமூகம் தன்னை ஆண், பெண் என இரண்டாகப்பிரித்து தங்களுக்குள் உருவாகும் ஈர்ப்பின் மூலம் இணைந்து முழுமை பெற்று விடுகிறது.

இந்த இனிய உணர்வை 'காதல்' என்று குறிப்பிடுவதில் தவறில்லை. ஆதிமனிதர்கள் கட்டுப்பாடு களற்று காதலித்தார்கள். அவர்கள் வாழ்தலின் முக்கிய குறிக்கோள் காதலாக மட்டுமே இருந்தது.

அதனால் காதலை விருப்பம் போல அனுபவித்தார்கள். மனிதன் தங்களுக்கான ஒலி, ஓசை, மொழி, எழுத்து இவை எதுவும் அறியப்படாததற்கு முன்பே அவர்களால் அறியப்பட்டது காதல்: மட்டுமே. கட்டுப்பாடுகளற்று காதலித்த ஆதிமனிதர்களின் மீது மெல்ல மெல்ல நாகரிகம்படர்ந்தபோது அவர்கள் தங்களுக்குள் கட்டுப்பாடுகளை விதித்துக்கொண்டார்கள். உறவுகள், குடும்பங்கள், இனக்குழுக்கள், எனப்பிரிந்து எல்லைக்கோடுகள் விரிந்தன. விரிந்த எல்லைக்கோடுகள் முதலில் காவுகேட்டது காதலைத்தான்: காதலர்களைத்தான்: நாகரிகம் வளரவளர தேசம், மதம், இனம், மொழி என காதல் சுவர்கள் பல எழும்பின. இருப்பினும் காதல் தொடர்ந்து காப்பாற்றப்பட்டுவந்திருக்கிறது. தங்களை அழித்துக்கொண்டு காதலை வாழ வைத்தவர்களின் பட்டியல் மிக நீளமானது.

சிலர் சரித்திரமாகவும் நிலைத்து விட்டார்கள். சுமார் ஆயிரத்து எழுநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு கிறிஸ்த்தவப்பாதிரியார் தன் காதலியை அடையாமலே தூக்கிலிடப்பட்ட தினத்தைத்தான் நாம் காதலர் தினமாகக்கொண்டாடிக்கொண்டிருக்கிறோம். இன்றைய அதிநவீன விஞ்ஞான உலகத்திலும் காதல் என்பது சமூகக்குற்றம் என்பதுபோன்ற எண்ணம் உருவாக்கப்படுகிறது. தங்களது வாழ்க்கைத்துணையைத் தாங்களே தேர்ந்தெடுக்கும் உரிமையை இந்த சமூகம் இன்னும் இளைஞர்களுக்கு முழுமையாக வழங்கவில்லை.

வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்கள் பலர் காதலித்தவர்களாகவும், காதலிக்கப்பட்டவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். வாழ்க்கையின் முழுமையான வெற்றி என்பது காதலையும் உள்ளடக்கியதுதான்.

## குறுக்கெழுத்துப் போட்டி .இல-40

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | |
| 08 | | | | | | |
| 15 | 16 | | | 19 | | 21 |
| | | 24 | | | | |
| | | | 32 | | | |
| | 37 | | | | | |
| 43 | | | | | | |

### இடமிருந்து வலம்

01. காந்தியின் சுயசரிதை கூறும் நூல்.
08. ஐந்து நிறங்கள்.
15. பயிர் செய்யமாநிலம். குழம்பிஉள்ளது.
19. மனைவி தலைகீழாக உள்ளது.
24. மனக் குழப்பமடைந்தநிலை.
32. சோறு குழம்பி உள்ளது.
37. புலி குழம்பி உள்ளது.
43. பார்த்தசாரதி குழம்பி உள்ளது.

### மேலிருந்து கீழ்

01. 40 நாள் விரதம் இருந்து இங்கு செல்வர்.
16. வெள்ளி.
21. விளையாட்டு இடம் குழம்பி உள்ளது.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.38 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

01. நந்தவனம்.
08. மண்டலம்.
15. சித்தார்த்தன்..
22. வாரம்.
26. கணல்.
29. கயல்.
43. மனை.

**மேலிருந்து கீழ்**

01. நமசிவாயம்.
14. மன்னன்.
19. கழித்தல்.
20. இரத்தல்.
23. மகரம்.
39. வளி.
49. மா.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி தங்கள் பெயர் முகவரியை இணைத்து அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி,இல.40
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.38 இன் பரிசுக்குரியவர்

கு. வித்தியா,
ஆயப்பகுதி,
புளியங்குளம்.

### குறுக்கெழுத்துப்போட்டி இல.38 இன், பாராட்டுக்குரியவர்கள்.

சு. விஜயதர்சினி,
முத்திரைச் சந்தி,
நல்லூர்.

கஜீபன்,
பூந்தோட்டம்,
வவுனியா.

பிரகதீஸ்வரன்இல.6,
ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

சந்திரகுமார்,
லிங்கநகர்,
திருகோணமலை.

பி. நந்திகரன்,
70/10 அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

ஆ. அனுசாந்,
தரம் - 07,
கிளி/கிளிநொச்சி/ம/வி.

# பயங்கரவாதத்தின் ஒரு பக்கவிளைவே; கொண்டாடப்படும் ஆய்வாளர்கள்

நூல்கள, சஞ்சிகைகள், செய்தித்தாள்கள், இன்ரநெற் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் குணரத்னவின் சிறப்புப்பட்டங்கள் எடுத்த எடுப்பில் கருத்தைக் கவர்பவையாக இருக்கின்றன. அவருடைய நூலான 'இன்ஸைட் அல்-குவைதா'வில் பின்வருமாறு கூறப்படிருக்கிறது.

"றோஹான் குணரத்ன ஆயுதம் தாங்கிய முரண்பாடு தொடர்பான ஆறு நூல்களை எழுதியிருக்கிறார். 2001 செப்ரெம்பர் 11க்குப்பின் ஐ.நா. அமெரிக்கக் காங்கிரஸ், அவுஸ்திரேலியப் பாராளுமன்றம் ஆகியவற்றில் உரையாற்ற அவர் அழைக்கப்பட்டார். ஸ்கொட்லாந்திலுள்ள சென். அன்ட்றூஸ் பல்கலைக்கழகத்தின் பயங்கரவாதம் மற்றும் அரசியல் வன்முறை ஆய்வு மையத்தின் புத்தாய்வு உறுப்பினராவர் (Research Fellow) அதற்கு முன்பு ஐ.நா பயங்கரவாதத்தடுப்புக் கிளையின் முதனிலை விசாரணையாளராக இருந்தார். பயங்கரவாதம் தொடர்பான ஆலோசகராக, பல அரசுகளுக்கும் வர்த்தக அமைப்புகளுக்கும் பணியாற்றியிருக்கிறார்"

குணரத்னவின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் தொடர்பாக 'த சண்டே ஏஜ' மேற்கொண்ட பின்பு, ஐ.நா பயங்கரவாத தடுப்புக்கிளையிலே முதனிலை விசாரணையாளர் என்ற பதவி இல்லை என்றும், தான் அங்கே ஆய்வு ஆலோசகராக (Research Consultant) கடமையாற்றியதாகவும் குணரத்ன இப்போது உறுதிப்படுத்தியுள்ளார். ஐ.நா காங்கிரஸ், அவுஸ்திரேலிய பாராளுமன்றம் ஆகியவற்றுக்கு நேரடியாக உரையாற்றவில்லை என்றும் உண்மையில் அவர், பாராளுமன்ற நூலகம் ஒழுங்கு செய்த கருத்தரங்கில் உரையாற்றி பயங்கரவாதம் தொடர்பாக கொங்கிரஸ் மேற்கொண்ட விசாரணையில் சாட்சியமளித்து ஐ.நாவின் ஆயுதக்களைவு விவகாரங்கள் பிரிவால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கு ஒன்றுக்கு ஆய்வுக் கட்டுரையையும் சமர்ப்பித்ததாகவும் இப்போது அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

குணரத்னவின் முதல் 6 நூல்களும் தமிழப்புலிகள் தொடர்பான ஒப்பீட்டளவில் ஐயப்பாடான ஆக்கங்களாகும். அதில் ஒன்றான "துப்பாக்கி முனையில் தெற்கு ஆசியா" (South Asia At Gun Point) என்ற நூலில், தமிழ் புலிகளின் ஆதரவு வலையமைப் பொன்று சிறிய ஹெலி ஒன்றையும், மிகமிக எடை குறைந்த வான்கலமொன்றையும் சிறிலங்காவுக்கு எடுத்துச்சென்றுள்ளது என்றும் 1993 இல் புலிகளின் ஆயுதக்கப்பல் ஒன்று அவுஸ்திரேலியா வந்திருந்தது என்றும் குறிப்பிட்டிருந்ததன் காரணமாக 2000 ஒக்ரோபரில் இவர்அவுஸ்திரேலியாவில் கவனத்தை ஈர்ப்பவராக ஆனார். உள்ளூர் தமிழ் சமூகத்தினர் ஆத்திரப்பட்டாலும் ஆகக்குறைந்தது ஒரு குற்றச்சாட்டுக்கு ஆதாரமிருப்பதாகவே தோன்றியது. இதே மாதத்திலே இடம்பெற்ற SBS இன் 'டேற்லைன்' (DateLine) அறிக்கை ஒளிபரப்பிலே நியுகாசின் கடை ஒன்றின் உரிமையாளரை பேட்டி கண்டு வெளியிடப்பட்டிருந்தது. 1994ஆம் ஆண்டிலே தொங்கு கிளைடர்களை (Hang Gliders) கொள்வனவு செய்து அவற்றை மலேசியாவுக்கு கப்பல் மூலம் அனுப்ப விரும்பிய தமிழ் புலிகள் அனுதாபிகள் இவரை அணுகியதாக எழுந்த தகவலைத் தொடர்ந்து இவர் ASIO இனால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இந்தத் தகவல் சிறிலங்கா புலனாய்வுச்சேவையுடன் குணரத்ன கொண்டிருந்த நெருக்கமான தொடர்பின் ஊடாகவே பெறப்பட்டது. 1984-1994ஆம் வருடங்களுக்கிடையில் குணரத்ன சிறிலங்கா அரசுக்காக வேலை செய்திருக்கிறார்.

தமிழ் புலிகள் பெற்ற நிதி ஆதரவுகள் மற்றும் படைக்கல வழங்கல்கள் தொடர்பான தகவல் சுவடுகள், புலிகள் சிறுரக ஆயுதங்களை வாங்கும் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட சர்வதேச பயங்கரவாதம் என்ற பரந்த உலகினுள் குணரத்னவை இட்டுச்சென்றன. தமிழ் புலிகள் மற்றும் அவர்கள் கையாளும் முறைகள் தொடர்பான குணரத்னவின் ஆய்வுகள் தற்கொலைக்குண்டுதாரிகள் தொடர்பான நிபுணராகவும் அவரை ஆக்கின. செப்ரெம்பர் 11 ம் திகதி நியூயோர்க்கிலும் வோஷிங்ரனிலும் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத்தாக்குதல்களுக்குப்பின் அவரை முன்னணிக்கு கொண்டு வருவதாகவும் இந்த அறிவு அமைந்தது.

2001 யூலையிலே ஜேன்ஸ் புலனாய்வுப்பார்வை (Janes Intelligence Review) சஞ்சிகையில், பதிலடி (Blowback) என்ற கட்டுரையை (வேறு மூவருடன்) கூட்டாக சேர்ந்து குணரத்ன வெளியிட்டார். கென்யாவிலும் தான்ஸானியாவிலும் அமெரிக்கத்தூதரகங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்களுக்கு பொறுப்பானவர்களுக்கெதிராக அண்மையில் நடத்தி முடிக்கப்பட்ட விசாரணைகளில் பெறப்பட்ட சான்றுகளின் பின்னணியில் ஒஸாமாபின் லேடனையும் அல்-குவைதாவையும் அக்கட்டுரை ஆராய்ந்திருந்தது. பின்லேடன் பற்றியும் அல்குவைதாவின் தோற்றம் பற்றியும் விபரமாக ஆராய்ந்த முதல் கட்டுரையாக இது இருந்தது. செப் 11ம் திகதிக்குப்பின் விரைவாகவே அது உசாத்துணை ஆவணமாக மாறியது.

2001 டிசம்பரில் போர் நிறுத்தம் பிரகடனம் செய்து பேச்சுவார்த்தைகளை ஆரம்பித் திருக்கும் தமிழ் புலிகளோடு சர்வதேச பயங்கரவாதம் எப்படித்தொடர்பு படுகிறது என்ற பின்னணியில் வைத்து ஆராயும் போக்கு, குணரத்தினவின் அணுகுமுறையில் உள்ள குறைபாடாக இருக்கிறது என முன்னாள் அவுஸ்திரேலிய புலனாய்வு அதிகாரிகளில் ஒருவர் தெரிவிக்கிறார்.

தமிழ் புலிகளின் சர்வதேச தொடர்புகள் பற்றியதன் ஆய்வுகளில் பெரும்பகுதியை 1995-1996 இல் அமெரிக்காவில் கல்விகற்றுக்கொண்டிருந்தபோதே மேற்கொண்டார். இதன் போது தான் புலனாய்வு பகுப்பாய்வு என்ற சிறிய உலகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த நட்புகளை அவர் எற்படுத்திக்கொண்டார்.

நொட்டர்டாம் பல்கலைக்கழகத்தின் சர்வதேச சமாதான ஆய்வுகளுக்கான குறேக்கல்லூரியில் 1996 ம் ஆண்டில் கலைமுதுமானி பட்டம் பெற்றார் இலினொய்ஸ் பல்கலைக்கழகத்திலும் மேரிலாண்ட் பல்கலைக்கழகத்திலும் ஆய்வுகளை மேற்கொண்டார். மேரிலாண்ட்டில் இருந்தபோது அமெரிக்க புலனாய்வுத்துறைத்தலைவராக இருந்த அட்மிரல் ஸ்ரான்ஸ் பீலீட் ரேணருடன் பணியாற்றினார். நொட்டர்டாமில் இருந்த பொழுது, ஸ்கொட்லாந்தின் சென் அன்ட்றூஸ் பல்கலைக்கழகத்தன் பயங்கரவாதம் மற்றும் அரசியல் வன்முறைகள் ஆய்வு மையத்தோடும் 1968 ம் ஆண்டில் இருந்து நிகழ்ந்த பயங்கரவாத சம்பவங்கள் தொடர்பான தகவல்களைக்கொண்டிருக்கும் அதன் தரவு இணையத்தளத்தோடும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார். அந்த மையத்தினுடைய அப்போதையத்தலைவரான கலாநிதி புறூஸ் ஹொப்மானையும் தெரிந்துகொண்டார். அவருடன் இணைந்து குணரத்ன எழுதிய பயங்கரவாதம் தொடர்பான ஒரு நூல் விரைவில் வெளியிடப்படவிருக்கிறது.

தனது கலாநிதிப்பட்டத்துக்கான ஆய்வுகளை முடிக்க ஸ்கொட்லாந்துக்கு நகர்ந்த குணரத்ன சென்அன்ட்றூஸ் இல் இணைந்து பயங்கரவாதம் மற்றும் அரசியல் வன்முறைகள் ஆய்வு மையத்தில் புத்தாய்வு உறுப்பினராக ஆனார். அந்த மையத்தினுடைய. பயங்கரவாதம் தொடர்பான தகவல்கள் அடங்கிய பாரிய தகவல் தளத்தை எட்டும் சிறப்பான வாய்ப்பும் அவருக்குக் கிட்டியது. உலகம் முழுவதிலும் சிதறியிருக்கும், இந்தவகை தகவல் தளங்கள் சிலவற்றிலே ஒன்றாக அது இருக்கிறது.

சென் அன்ட்றூஸ்-இனாலும், அமெரிக்க வான்படையால் ஏற்படுத்தப்பட்ட இலாபம் கருதா சிந்தனையாளர் குழுவான றாண்ட் ஹோர்ப்பறேஷன் (RAND CORPORATION) இனாலும் சேகரிக்கப்பட்ட விபரங்கள் அடங்கியதாக இந்தத்தளம் இருக்கிறது பயங்கரவாதம் மற்றும் குறைந்த முனைப்பு மோதல்கள் தொடர்பான றாண்ட்-சென் அன்ட்றூஸ் தகவல் தளம் என இப்போது அறியப்படும் இந்தத் தளமானது, பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களைத்தேடி இன்ரநெற்றையும் உலகெங்கும் வெளியாகும் செய்தித்தாள்கள் சஞ்சிகைகளையும் அலசிஆராயும் 30 மாணவர்களால் நிகழ்கால மட்டத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

றாண்ட்-இற்கும் சென் அன்ட்றூஸ்- இற்கும் இடையேயும் றாண்ட்-இற்கும் குணரத்னவுக்கும் இடையேயுமான ஒரே இணைப்பு இந்த தளம் மட்டும் தான் என்றில்லை. சென் அன்ட்றூசின் பயங்கரவாதம் தொடர்பான ஆய்வு மையத்தின் நிறுவுனரான புறூஸ் ஹொப்மான் இப்போது றாண்ட்- இனுடைபிரதித் தலைவராகவும் வோஷிங்ரனில் உள்ள அவ் அமைப்பின் அலுவலகத்தின் தலைவராகவும் இருக்கிறார். அத்தோடு, றாண்ட், சென் அன்ட்றூஸ் குணரட்ன மற்றும் ஜோன்ஸ் ஆகியோர் இணைந்து கடந்தவருடம் இடர் முகாமைத்துவ தீர்வுகள் (Risk management solutions) நிறுவனத்துக்கு தனிப்பட்ட ஆலோசகர்களாகச்செயற்பட்டனர். பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் பற்றி கவலை கொண்டிருக்கும் காப்புறுதி நிறுவனங்களுக்கு விற்பதற்கென "அமெரிக்க பயங்கரவாதஇடர் மாதிரி" (Us Terrorism Risk Model) ஒன்றை உருவாக்க அந்நிறுவனத்துக்கு இவர்கள் உதவினார்கள்.



இதேபோலவே றாண்ட் அமைப்பானது 3.5 பில்லியன் அமெரிக்கடொலர் மூலதனம் கொண்ட கார்லைல் குறுப்புடன் தொடர்புகளைக் கொண்டிருக்கிறது. உலகில் மிகப் பெரிய ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்புப்பல்கூட்டுத்தா பனங்களில், முன்னாள் அமெரிக்க பாதுகாப்புத்துறை செயலரும் CIA இன் பிரதிப்பணிப்பாளருமான பிராங்கார்லூசி ஊடாக பங்குகளை வைத்திருக்கின்றது. இந்த குறூப்பின் தலைவராக உள்ள கார் லூஸி றாண்ட் இன் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இருக்கிறார்.

கார்லைல் குறூப்பானது முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை முதுநிலை ஆலோசகராகவும் முன்னாள் அமெரிக்க இராஜாங்க செயலர் ஜேம்ஸ் பேக்கரை ஆலோசகராகவும் பணிக்கமர்த்தியிருப்பதோடு அதன் ஐரோப்பியப் பிரிவுக்கு முன்னாள் பிரித்தானிய பிரதம மந்திரி ஜோன் மேஜரைதலைவராகவும் கொண்டுள்ளது. இரகசியமாக வகைப்படுத்தப்படாத பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் தொழில் நுட்பங்களை வர்த்தக ரீதியாகப்பயன்படுத்தி, இலாபமீட்டவென பிரித்தானிய பாதுகாப்பமைச்சால் உருவக்கப்பட்ட நிறுவனமான குவின் ரெக் (QINTEQ)இல் மூன்றிலொரு பகுதி பங்குகளை இந்த வருட ஆரம்பத்தில் கார்லைல் குறூப் வாங்கியுள்ளது. விரைவிலேயே தனியார் மயப்படுத்தப்படவிருப்பதும் பிரித்தானியாவில் உள்ளவர்களின் பயிற்றப்படும் இடமுமான பாதுகாப்பு மொழிகள் புலனாய்வு மற்றும் புகைப்படக் கல்லூரியை வாங்குவதற்கு குவின் ரெக் நிறுவனம் பிரித்தானிய அரசுடன் பேச்சுவார்த்தைகளை நடாத்தி வருகிறது.

ஒரு உதவி பேராசிரியராக குணரத்ன இருக்கும் சிங்கப்பூரில் உள்ள பாதுகாப்பு மற்றும் மூலோபாய ஆய்வுக் கல்லூரியின் இணையத்தளத்திலுள்ள தனது சுயவிபரங்களிலே தன்னுடைய கடந்த காலபதவிகளில் ஒன்றாக "முதனிலை விசாரணையாளர் - பயங்கரவாதம் தொடர்பான தகவல்கள் பெறும் நடவடிக்கைகள"என்று குறித்துக்கொண்டுள்ளார்.

நான்யாங் தொழில் நுட்பபல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு மற்றும் மூலோபாயங்கள் ஆய்வு மையத்தை நிறுவுவதற்கென இந்தவருடம் குணரத்ன சிங்கப்புருக்கு நகர்ந்துள்ளார். அங்கே இவருக்கு உதவிப்பேராசிரியர் பதவி வழங்கப்பட்டுள்ளது. வியப்புட்டா விதத்திலே இந்த புதிய ஆய்வு மையத்தின். நடுநாயகமான விடயமாக ஆசியா- பசுபிக்பிராந்தியத்திலான பயங்கரவாதம் தொடர்பான தகவல் தளம் இருக்கிறது.

அல்குவைதா தொடர்பான தனது நிபுணத்துவமானது, அந்தக் குழுவினுடைய தற்போதைய தலைமைத்துவத்துக்கு முந்திய தலைமைத்துவத்துடனும் உறுப்பினர்களுடனுமான நேர்காணல்கள் ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிக்கப்பட்டபின்பு கைப்பற்றப்பட்ட நூற்றுக்கணக்கான ஆவணங்கள் ஒருடசினுக்கு மேற்பட்ட நாடுகளில் அல்குவைதா சந்தேக நபர்களிடம் பெறப்பட்ட தகவல்கள் முதலியவற்றிலிருந்து பெறப்பட்டதாகக் குணரத்ன கூறுகிறார்.

ஆப்கானிஸ்தானில் வைத்துக் கைது செய்யப்பட்டபின் கியூபாவின் குவாண்டனாமோ குடாவில் தடுத்து



வைக்கப்பட்டிருக்கும் அவுஸ்திரேலியரான டேவிட் ஹிக்ஸ் "அல்குவைதாவின் உறுப்பினர் அல்ல" "குடிசார் இலக்குகளை தாக்க அவர் திட்டமிடவில்லை" குடிசார் இலக்குகளைக்தாக்கும் உத்தேசம் அவருக்கு ஒருபோதும் இருக்கவில்லை" தலிபான் போராளிகளால் கணக்கெடுக்கப்படாத "விசித்தி ரமனிதா" என்றெல்லாம் குணரத்ன திட்டவட்டமாகக் கூறுவதற்கு இந்த வகையான தகவல்கள் தான் அடிப்படையாக இருந்தன.

இரண்டுவாரத்துக்கு முன்பதாக, ஒரு படைய நீதி மன்றத்தில் நிறுத்துவதற்குப்போதுமான சாட்சியங்கள் உள்ள ஆறு கைதிகளில் ஹிக்ஸ்-உம் ஒருவர் என்று அறிவித்தபின், குணரத்ன தன் நிலைப்பாட்டைத்தலைகீழாக மாற்றியது அவரது சகபுலனாய்வு ஆய்வாளர்களிடையே வியப்பை ஏற்படுத்தியுள்ளது. அல்குவைதாவின் அதிக முன்னேற்றகரமானதும், அதிக விசேடத்துவம் கொண்டதுமான பயிற்சிக்கு ஹிக்ஸ் உட்பட்டிருக்கிறார் என்றும் அவ்வமைப்பு "அவருக்கென ஏதோ சிறப்புத்திட்டங்களை வகுத்திருந்தது" என்றும் இம்முறை கூறினார்.

தன் மனமாற்றத்துக்குக் காரணமாக மிக அண்மையில்மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள" இல் இருந்தும் அவர் அடையாளம் காட்ட மறுக்கும் தகவல் முதல்களிலிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களைக் கூறுகிறார்.

வியப்புக்குட்பட்ட இன்னொரு ஆளாக ஹிக்ஸ்-சின் அடிலெய்ட் சட்டத்தரணி பிராங்கமாட்டா இருக்கிறார். குவாண் டனாமோவில் வைத்து தன் கட்சிக்காரரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை விபரங்களைக் குணரத்ன பெற்று கொண்டிருக்கும் சாத்தியம் இல்லை என உறுதிப்படக்கூறியுள்ள அவர் "அவருடைய தகவல் முதல் யார் என்று அறியநாங்கள் விரும்புகிறோம" என்கிறார்.

### யதார்த்த நிலை சோதனைகள் குணரத்ன கூறியவை

2001 செப்.11ம் திகதி, லண்டனின் ஹீத்சோவிமான நிலையத்திலிருந்து பிரிட்டிஸ் எயாவேய்ஸ் ஜெற் ஒன்றைக் கடத்தி பிரிட்டிஸ் பாராளுமன்றத்தோடு அதனை மோதுவதற்குப்பயங்கரவாதிகள் எப்படித் திட்டமிட்டிருந்தார்கள் என்று இன்ஸைட் அல்குவைதா என தனது நூலிலும் பல நேர்காணல்களிலும் றோஹான் குணரத்ன படங்களுடன் விலாவாரியாக விளக்கியிருந்தார். நியுயோர் இரட்டைக். கோபுரங்கள் மீது நடந்த தாக்குதலைத் தொடர்ந்து பிரிட்டன் விமானங்கள் உடனடியாகவே தரையில் தரிக்கவைக்கப்பட்டதால் திட்டம் தோல்வியடைந்தது. இந்தத்தகவலுக்கான முதலாக, 2001.10.03ம் திகதி மும்பாயில் கைது செய்யப்பட்டவரும், அல்குவைதா உறுப்பினர் என சந்தேகிக்கப்பட்டு வரும் 25வயதுடைய முஸ்லிம் ஒருவருமான மொஹமட் அப்றொஸ் மீது இந்தியப் புலனாய்வாளர்கள் மேற்கொண்ட தீவிரவிசாரணையில் கிடைத்த தகவல்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. தான் விக்ரோறியாவிலும் பிரிட்டனிலும் உள்ள விமானம் ஓட்டும் பயிற்சிப்பாடசாலைகளில் பயிற்சி பெற்றிருப்பதாகவும் மெல்போணின் றியால்ரோ கோபுரங்கள் மீது விமானம் ஒன்றைமோத திட்டமிட்டிருந்ததாகவும் அப்றொஸ் தன் விசாரணையாளரிடம் கூறியிருந்தார்.

### உண்மை நிலை

இந்திய பொலிசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யாத நிலையிலே ஒரு இந்திய நீதிமன்றம் அப்றொப்ஸை 2001 ஏப்ரலில் வரையறையற்ற பிணையில் விடுதலை செய்தது. விசாரணையின் ஒரு பகுதியாக அப்றொஸ் கூறியவற்றை சரிபார்ப்பதற்கென இந்தியபுலனாய்வு முகவர்கள்2001 பெப்ரவரியில் அவுஸ்திரேலியா வந்தனர் அப்றொஸ் விடுவிக்கப்பட்ட பின்பு, மும்பாய் பொலிசார் அப்றொஸ் சொன்னதாக கூறப்பட்ட பரபரப்பான தகவல்களை புனைவாக உருவாக்கினார்கள். நியூடெல்லி பொலிசார் நம்புவதாக அறியப்படுகின்றது. 2002ஆம் ஆண்டின் ASIO வருடாந்த அறிக்கையிலே அவுஸ்திரேலியா தொடர்பாக அப்றொஸ் தெரிவித்த தகவல்களை சரிபார்த்துக் கொள்வதற்கான வேறு தகவல்கள் கிடைக்கவில்லை என்றும் அவை நம்பகத்தன்மையற்றவை என்றும் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

### குணரத்ன கூறியவை

பாலி குண்டுவெடிப்பை நடத்திய பயங்கரவாதக்குழுவான ஜெம்மா இஸ்லாமியாவின் நடவடிக்கைக்காமாண்டரான ஹம்பாலி மற்றும் தலைவர்கள் ஒரு டசினுக்கு மேற்பட்ட தடவைகள் அவுஸ்திரேலியா வந்துள்ளதாகக் குணரத்னவின் "இன்ஸைட் அல்குவைதாவின்" அவுஸ்திரேலிய பதிப்பில் கூறப்பட்டுள்ளது.

### உண்மை நிலை

அவுஸ்ரேலியாவுக்குள்ளேயும் வெளிநாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் ஹம்பாலி தனது சொந்தப் பெயரிலோ அல்லது ஏற்கனவே அறியப்பட்ட மாற்றுப்பெயர்களிலோ அவுஸ்திரேலியாவுக்கு வந்திருப்பதற்கான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை என்று சட்டமாஅதிபர் டறில் வில்லியம்ஸ் கூறியுள்ளாார்.

ஆங்கிலம் மூலம் :- கறி ஹியூஸ்
தமிழில் :- வின்சென்ற்புளோறன்ஸ்

# தாமரைச்செல்வியின் பச்சைவயல் கனவு

தொடர் கதை

அத்தியாயம்-05

**பகுதி -02**

**அன்று** சாவகச்சேரியில் கார்த்திகேசு புதிதாய் கட்டிய வீட்டின் குடிபுகுதல் நிகழ்வு நடந்தது. அதில் சிவமும் விநாசியும் கலந்து கொண்டார்கள். நல்ல பெரிய வீடு. முன்புறம் விறாந்தை, இருபக்கமும் அறைகள், உட்பக்கம் சதுரமாய் பெரிய அறை, அதன் பக்கமும் அறைகள், பெரிய யன்னல்களும் தேக்கு மரக்கதவுகளும் வழு வழுப்பான சிவப்பு நிலமுமாக வீடு மிகவும் அழகாக இருந்தது. இப்படி ஒரு வீட்டை சிவம் இதுவரை பார்த்ததில்லை. அதில் கார்த்திகேசுவின் பண வசதி பளிச்சென்று தெரிந்தது. கார்த்திகேசுவின் மனைவி வந்து அவர்களை வரவேற்று சிறிது நேரம் நின்று கதைத்து விட்டு உள்ளே வேலைகளைக் கவனிக்கப் போய்விட்டாள். சிவத்தை விட அதிக சங்கடத்துக்குள்ளாகியது விநாசிதான்.

“ஆள் நல்ல வசதியாய்த்தான் இருக்கிறான். தகப்பன்ர காலத்தில இருந்தே அங்க வந்து வயல் செய்யிற ஆட்கள். எங்கட வீட்ட கார்த்திகேசு வந்தால் இருக்கச் சொல்ல ஒரு கதிரை இல்லை. முன் விறாந்தைக் குந்தில இருந்து தானே கதைக்கிறவன். காசு பணம் எண்ட பெருமை இல்லாதவன்தான்.”

மதியம் பந்தியில் இருந்து சாப்பிட்டுவிட்டு அவர்கள் முன் விறாந்தையில் அமர்ந்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்த போது கார்த்திகேசுவும் வந்து அவர்களுடன் அமர்ந்து கொண்டான்.

“நீ இந்த வீட்டை முரசுமோட்டையில உன்ர கமத்தில கட்டியிருக்கலாம். நீ தனிய அங்க இருந்து வயல் செய்து கஸ்ரப்படுறாய். மனிசி பிள்ளையள் உன்னோடஇருந்தா உனக்கு வசதிதானே.”

சிவம் கேட்டான்.

“அந்தக் காட்டுக்க ஒரு வசதியும் இல்லாமல் இதுகள் அங்கவந்து என்னெண்டு இருக்கிறது. ஆன பள்ளிக்கூடம் இல்லை படிப்புகளும் அங்க சரியில்லை. இங்க இருக்கிற வசதியள் அங்க இல்லையடாப்பா.”

“படிப்பு சரியில்லை எண்டால் பிள்ளையளை இங்க விட்டுப் படிப்பிக்கலாம்தானே. நீங்கள் ஒரே இடமாய் இருக்கலாம்.”

“மனிசி இந்தச் சூழலை விட்டு அங்க வர மாட்டுது. நானும் வற்புறுத்திறேல்லை. இங்க இருந்தால் பிள்ளையளும் நல்ல சூழ்நிலையில வளருங்கள்”

சிவம் சற்றுத்தள்ளி உறவுக் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்த கார்த்திகேசுவின் குழந்தைகளைப் பார்த்தான். நல்ல உடுப்புக்கள் போட்டு தலையில் றிப்பன்கட்டி பளிச்சென்று இருந்தார்கள்.

“இங்க நல்ல படிப்புத்தானே”

சிவத்துக்கு முருகானந்தனின் நினைவு வந்தது. சுட்டித்தனமான பிள்ளைதான். கிராமத்தின் நடுவே கொட்டிலில் இதுவரை இயங்கிய பாடசாலை சமீப காலமாகத்தான் ஒரு சீமெந்துக் கட்டடத்தில் இயங்கு கிறது. ராசரத்தினம் வாத்தியாரோடு இப்போது மேலும் நாலைந்து பேர் வந்து படிப்பித்தார்கள். சுந்தரமூர்த்தி வாத்தியார் மனைவி பிள்ளைகளுடன் கிராமத்திலேயே வந்து குடியேறிவிட்டார். பின்னேரங்களில் கூட பிள்ளைகளைக்கூட்டி வைத்து கதைகள் சொல்லிக்கொண்டிருப்பார். ஓடிவிளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா என்று பாரதியார் பாடல்களை ராகம் போட்டு பாடிக் காட்டுவார். வியாசர் விருந்து, சக்கரவர்த்தித்திருமகன் புத்தகங்களை கிராமத்தில் எல்லோருக்கும் வாசிக்கக் கொடுப்பார். பாடசாலை வாசலில் பாலைமர நிழலில் அமர்ந்து பிள்ளைகளின் விளையாட்டுக்களை பார்த்து ரசித்துக் கொண்டிருப்பார். ஏழு வயது முருகானந்தனுக்கு சுந்தரமூர்த்தி வாத்தியாரின் பாட்டும் கதையும் மிகவும் பிடித்துப்போனது. அவன் சிலேற்றும் பென்சிலுமாய் பாடசாலைக்கு செல்வதை பராசத்தியும் சிவமும் ஆசையோடு பார்த்துக் கொண்டிருப்பார்கள் .

கரடிப்போக்கில் சென் திரேசா பள்ளிக்கூடம் இருக்கிறது. முருகானந்தனை அவ்வளவு தூரம் விடப்பயமாய் இருந்ததால் கிராமத்து பள்ளிக்கூடத்திலேயே படித்து வந்தான். அந்த குழந்தைகளின் கல கலத்த சிரிப்பை பார்த்துவிட்டு விநாசி சொன்னான்.

“இங்க உள்ள பிள்ளையள் நல்ல பள்ளிக்கூடத்தில படிச்சு நல்லாய் வந்திடுவினம்தான். செல்வத்துக்கு இப்ப ரெண்டு வயதுதானே அவன்வளர்ந்து படிக்கப்போற நேரம் அங்க உள்ள பள்ளிக்கூடங்களும் நல்லா வந்திடும்”

அவர்களுடைய பிள்ளைகளுக்கும் கார்த்திகேசுவின் பிள்ளைகளுக்கும் வளர்ப்பு முறையிலும் வாழும் சூழலிலும்



நிறைய வித்தியாசம் இருப்பதாகவே தோன்றியது. யாழ்ப்பாணம் போலவே நாகரீகத்தின் சாயல் சாவகச்சேரியிலும் படியத் தொடங்கியிருந்தது. கல்வி, உத்தியோகம் காரணமாய் காசு வசதிகளும் இங்கே தாராளமாய் இருந்தது. அதனால் கல்வீடு, பாவனைப்பொருட்கள், வாகனங்கள் என்று வசதியாய் வாழ முடிகிறது. கிளிநொச்சி மண்ணில் இத்த கைய வசதிகள் பெறுவதற்கு இன்னமும் காலம்



இருக்கிறது. அதற்கு நிறைய உழைப்புத் தேவைப்படும்.

கிளிநொச்சிக்கு வந்து பதினாறு வருடங்கள் ஆகிறது. படிப்படியாய் தான் வளர்ச்சியடைய முடிகிறது.

மதியம் இரண்டு மணிக்கு மேல் காரில் சிவமும் விநாசியும் திரும்பினார்கள். ஏனோ கார்த்திகேசுவை நினைத்தால் கவலையாகத்தான் இருந்தது. காசு உழைக்கும் வேகத்திலும் வசதி களைப்பெருக்கும் சிந்தனையிலும் இயல்பாய் வாழ வேண்டிய வாழ்வை எங்கோ தொலைத்து விட்டானோ என்று எண்ணத்தோன்றியது.

சிவம் எதுவும் பேசாமல் எதிரே பார்வையைப் பதித்தபடி காரைச்செலுத்திக்கொண்டிருந்தான். விநாசியின் மனதிலும் இதே எண்ணமே நிறைந்திருக்கக்கூடும். அவனும் எதுவுமே பேசாமல் இருந்தான்.

ஆனையிறவை மூன்றரை மணியளவில் கடந்தார்கள். “அம்பத்தெட்டு கலவரத்துக்கு ஆனையிறவில வந்து நிண்ட ஆமிக்காரங்கள் பிறகு போக பழையபடி பொலிஸ்காரங்கள் வந்து நிற்கிறாங்கள் பார்”

“இதிலயும் ஆமிக்காரங்கள் தொடர்ந்து நிற்கிறேலைத்தானே....”

வெய்யில் சுள்ளென்று எரித்தது. சூடேறிய காற்று முகத்தில் வெம்மையுடன் வந்து மோதியது. பரந்தனை நெருங்கிக் கொண்டிருந்தார்கள். வலது புறம் பெரிய பெரிய கட்டடங்களுடன் இரசாயனத்தொழிற்சாலை இயங்கிக்கொண்டிருந்தது. அதிகாலை ஐந்து மணிக்கு இந்தத் தொழிற்சாலையின் சங்கு ஊதும் ஒலியில்தான் சுற்று வட்டாரமே விழித்துக் கொள்கிறது. இந்த தொழிற்சாலையின் வரவு பலருக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது. “இந்த தொழிற் சாலையிலதானே உன்ர தம்பியும் வேலை செய்யிறான”.

சிவம் விநாசியிடம் கேட்டான்.

“ஓம் ஏதோ இந்த வேலை கிடைச்சது அவனுக்குப் பெரிய ஆறுதல். வயலையும் முற்றாய் நம்பியிருக்க ஏலாது. இது மாதம் முடியசம்பளம் வாறவேலை நட்ட லாபம் பார்க்கத் தேவையில்லை” சலிப்போடு பேசும் விநாசியை சிவம் திரும்பிப்பார்த்தான்.

“வயல் செய்யிறதை குறை சொல்லாத விநாசிமழை இல்லாமல் எரிஞ்சோ மழை வெள்ளம் போட்டு அழிஞ்சோ இயற்கையால நட்டம் வந்தாச்சரி. மற்றப்படி ஒழுங்காய் வயல் செய்தால் நாங்கள் கஸ்ரப்பட்டு உழைச்சால் மண் எங்களை கைவிடாது.

“இல்லையடாப்பா, நானும் இப்ப நாலைஞ்சு வருசமாய் வயல் செய்யிறன்தானே. எங்க லாபம் வருகுது.”

“விநாசி நான் சொல்லுறன் எண்டு குறைநினைக்காத. வயலைச்செய்தால் முறையாய் செய்யவேணும். நீ உழுது நெல்லை விதைச்சுப்போட்டு கூத்து, பாட்டு எண்டு ஊரூராய் வெளிக்கிட்டிடுவாய். ஒழுங்காய் பசளை போடுறேலை. புல்லு புடுங்கிறேலை. நெல்லு என்னெண்டு விளையும் சொல்லு” விநாசி ஒரு தடவை அவனைப்பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டான்.

“வயல் செய்தா நட்டமும் வரும் லாபமும் வரும், உங்க வயல் செய்யிற எல்லாருமே நல்ல நிலைக்கு வாறேல” விநாசியின் அலுப்பான வார்த்தைகளில் உண்மையும் இருக்கிறது. சிவம் யோசித்துப்பார்த்தான். சிதம்பரி, தருமலிங்கம் எல்லோரும் வயல் செய்கிறார்கள்தான். சீவியத்துக்கு மட்டும் வருகிறது. மேலதிக வசதிகள் என்று எதுவும் இல்லை, வயல் செய்வதிலும் நுட்பம் இருக்கிறது. பருவத்தே பயிர் செய் என்பதில் எத்தனை உண்மை இருக்கிறது. நெல் விதைத்த நாளிலிருந்து அறுவடை செய்து வீடு வந்து சேரும்வரை கவனமாய் இருந்து பாதுகாக்க வேண்டும். இரவு பகல் பாராது களத்திலேயே நிற்கவேண்டும்.

“இந்த முறை வயலுக்கு பசளை போட்டிட்டியே”

“இல்லை”என்றான் விநாசி.

“கிளிநொச்சியில கஜநிதி ஸ்டோர்ஸ் தெரியும்தானே. நான் அங்க சொல்லி வைக்கிறன் என்ர கணக்கில பசளையைப் போய்வாங்கு.”ஒரு நிமிடம் பேசாமல் இருந்து விட்டு விநாசி சொன்னான்.

“போன சிறுபோகச் செலவுக்கு உன்னட்ட வாங்கின காசும் தரேலை”

“பரவாயில்லை, அதுக்காக பயிர் அழியப்பார்த்துக் கொண்டிருக்கிறதே. பிறகு நெல்லை அடிச்சு சேர்த்துத்தாவன்.”

விநாசி தோளில் போட்டிருந்த துண்டால் முகத்தை அழுத்தித் துடைத்துக்கொண்டான், சிவத்துக்கு அவனைப்பார்க்க கவலையாய் இருந்தது.

பரந்தன் சந்தி வந்து குமரபுரம் வீதியில் கார் திரும்பியது. விநாசியை அவன் வீட்டு வாசலில் இறக்கி விட்டு சிவம் தன் வீட்டுக்கு வந்தான். வெளியே எங்கு போய்விட்டு வந்தாலும் எதிர் கொள்ளும் பராசத்தியும் தாவி வந்து அணைக்கும் குழந்தைகளும் தருகின்ற இந்த நிமிட ஆறுதலும் மகிழ்வும் விலைமதிப்பில்லாதது. இந்த ஆறுதலையும் மகிழ்வையும் இழக்கின்ற கார்த்திகேசுவை நினைக்க கவலையாக இருந்தது.

சிவம் அலுப்புத் தீர குளித்துவிட்டு முருகன் கோவிலுக்குப் போனான். சில வருடங்களுக்கு முன்னதாக கூரை வேய்ந்த கொட்டிலில் வேல் வைத்து ஒரு முருகன் கோவிலை உருவாக்கியிருந்தார்கள். வெள்ளிக்கிழமைகளில் சிவம்கோவிலுக்குப் போகாமல் இருப்பதில்லை. ஆனி உத்தரத்தின் போது தீ மிதிப்பு திருவிழா எல்லாம் நடைபெறும். பறவைக்காவடி, தூக்குக்காவடி என்று திருவிழா ஆரவாரமாய் இருக்கும். அயற்கிராமங்களிலிருந்தும் நிறைய ஆட்கள் கூட்டம் கூட்டமாய் வந்து கலந்துகொள்வார்கள். விரைவில் கோவிலை பெரிதாய் கட்டுவதற்கான ஆயத்தங்களும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. கண்மூடி நின்று கும்பிட்டுவிட்டு வீட்டுக்கு வந்தான். குழந்தைகளுடன் இருந்து சாப்பிட்டான் அலுப்புடன் படுத்துக்கொண்ட சில நிமிடங் களிலேயே நித்திரையாகிப் போனான்.

நடு இரவு. ஒரு மணிக்கு மேல் யாரோ தெருவில் நின்று சிவம் அண்ணை சிவம் அண்ணை என்று கூப்பிடுவது ஆழ்ந்த நித்திரையிலும் அவனை அசைத்தது. எழுந்து லாம்பை எடுத்துக்கொண்டு கதவைத்திறக்க பராசத்தி எழுந்து “என்னப்பா” என்று கேட்டாள்.

“ஆரோ கூப்பிடுகினம் வாறன் பார்த்துக்கொண்டு”

கேற் வாசலில் பரமு பதற்றத்தோடு நின்றான்.

“என்னடாப்பா? இந்த நேரத்தில”

“அண்ணை! மனிசிக்கு வயித்துக் குத்து வந்திட்டுது. இப்பவே ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக வேணும். இந்த இரவில என்ன செய்யிறது எப்பிடிப் போறது”

“சரி சரி நீ போய் வெளிக்கிட ஆயத்தம் செய். நான் காரைக்கொண்டு வாறன்”

இருவரும் கதைப்பது பராசத்தியின் காதுகளிலும் விழுந்தது. உள்ளே வந்து சேட்டுப் போட்டுக்கொண்டு இருந்தவனிடம்

“இண்டு முழுக்க அலைஞ்சு போட்டு படுத்தனீங்கள்”

என்றாள் கவலையுடன்

“என்னப்பா செய்யிறது. இந்தச்சாமத்தில அதுகள் என்னெண்டு ஆஸ்பத்திரிக்குப் போறது. எங்க போய் வாகனம் பிடிக்கிறது. இவடத்தில என்னட்ட மட்டும் தானே கார் இருக்கு. அதால என்னட்ட ஓடி வருகுதுகள் பாவங்கள் தானே”

வழமையாய் நடக்கின்ற விடயம் தானே என்பது போல பராசத்தி பேசாமல் நின்றாள். சிவம் காரை எடுத்துக்கொண்டு போக பராசத்தி கதவுகளை பூட்டிக்கொண்டாள்.

அமைதியான இரவில் காரின் இரைச்சல் மெலிதாய் கேட்டு மறைந்து போனது.

(தொடரும்...)



# துன்னாலை வடக்கு – புலோலி ஸ்ரீ



# தேர்த் திருவிழாச் சிறப்


வல்லிபுர நகரினிலே - தேரில் வலம் வரும் நாயகனே!
எல்லையில்லாத வரமளிப்பாய் பல தொல்லையில் இருந்து
எமைக் காப்பாய்!

கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான
இலங்கை உரம் (லக்பொஹொர)விற்பனையில்
ஏக உரிமை பெற்றவர்கள்

**வேலும் மயிலும் களஞ்சியம்**

353,முதன்மைச்சாலை, (சி-8521) கிளிநொச்சி.



உங்கள் தேவைகள் எதுவாகினும் நிறைவேற்ற
காத்திருக்கின்றோம்.

**லவ்லி கூல்பார்**
**லவ்லி ஒலி, ஒளி பதிவுக்கூடம்**
**லவ்லி "பஸ்" ஆசனப் பதிவகம்**
**லவ்லி சைனிஸ் ரெஸ்டூரன்ட்**

பிரதான வீதி, T.P - 021-226 3219 நெல்லியடி. (சி-8522)



கோகுலத்து நாயகன் - எழும் கொடுந்துன்பம் தீர்ப்பான்; இரு
கரம் கூப்பித் தொழுதுவரின் - அவன் கோடியருள் தருவான்

**மருதம் வாணிபம்**

நெல்லயடி ம.ம.வி. வீதி, நெல்லியடி, கரவெட்டி

**மருதம் ரவல்ஸ்**

யாழ் - கொழும்பு மினிவான் சேவை

| யாழ் ஆசனப் பதிவு:- | கையடக்க தொலைபேசி:- | கொழும்பு ஆசனப் பதிவு |
|---|---|---|
| 021 - 226 3210 | 0777-550966 | 01 - 2360578 |
| 021 - 226 3195 | 0777-550967 | 074 - 512047 |
| 070 - 212 229 | 0777-550968 | |

(சி-8523)



கவச நாயகனாம் கண்ணனின் தேர்த்திரு நாளில்
தேசமெங்கும் இறையருள் பல்கிப் பெருகட்டும்.

* கட்டடப் பொருட்கள்
* பெயின்ற் வகைகள்
* வீட்டிற்கான சகலவகையான
  வர்ண மாபிள் வகைகள்
* விவசாய கிருமி நாசினிகள்

தெளிகருவிகள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள

**விண்மீன் அங்காடி**

பொருட்கள் தரமில்லையெனில்
விண்மீன் அங்காடியில் கூட
வாங்காதீர்கள்.

பிரதான வீதி, நெல்லியடி.
T.P:- 021-226 3027 (சி-8524)


## நாடிவருவோர்க்கெல்லாம் வாரி வழ



பருத்தித்துறைப் பிரதேசத்தின் வல்லிபுரப்பகுதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயமானது யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மிகப் பழமைவாய்ந்த வழிபாட்டுத்தலங்களுள் ஒன்றாகும். பருத்தித்துறை – மருதங்கேணி வீதியின் கிழக்குத் திசையின் பரந்த வெளிப்பகுதியையொட்டி அமைந்துள்ளது இவ்வாலயம்.


அலைகள் ஆர்ப்பரிக்கும் பாக்குநீரிணை ஓரத்திலே நர்த்தன நந்தனாக எழுந்தருளி மக்கட்கெல்லாம் அருளாட்சி செய்து,மாய விந்தைகளால் அவர்களைக் கட்டி, அவர்கள் முழுப்பேற்றினையடைய அருள்பாலிக்கும் வல்லிபுர மாயவனாக ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் குடிகொண்டுள்ளார். இவ்வாலயம் வரலாற்றுப் பெருமைமிக்கது. பல சகாப்தங்களாக வளர்ந்து அருள் சொரிந்துவரும் இவ்வாலயம் இன்று பூரண பொலிவு பெற்று தெய்வீகம் கமழ்ந்து கொண்டிருக்கிறது.

சக்கரத்தை மூலக்கருவறையில் வைத்து தாபித்து வழிபடும் ஒரேயொரு தலம் என்னும் சிறப்பு இவ்வாலயத்திற்குண்டு. இதன் அமைப்பு இந்தியாவிலுள்ள ஸ்ரீரங்கம் அரங்கநாதர் ஆலய அமைப்பை ஒத்திருக்கின்றது. பெருமானின் தசாவதாரங்களுள் ஒன்றாகிய மச்ச அவதாரம் இங்கு நிகழ்ந்ததாக வரலாறு கூறுகின்றது.

தலவிசேடமும், மூர்த்திவிசேடமும் விசேடமான தீர்த்தத்திற்குரிய அமைவிடமும் பொருந்தப்பெற்று

மூர்த்தியும்,
அமைந்து
சின்னங்கள
ஒரு குளத்
இத்தலத்தி
71 அடி உ
இராஜகோபு
சிலைகளும்
நிற்கின்றன
காத்தற் க
கிடைக்க
வாயுயர் (
போட்டியிட
எழிலுடன்
அடியவர்க
நிகழ்வுகளி
பேருதவிய

எழில்
வாடி வத
வாரி வழங்
திருப்பாற்க
வீற்றிருந்
எமது கண
இவ் ஆண
07ம் திகதி
அன்று செ
எதிர்வரும்
நடைபெற
கேட்டவர்
கண்ணன்.
நம் எல்லே



## வினைதீர்ப்பான் வெ

வல்லிபுர நகராளும் மாயவன் - கிழக்கே
வந்துவிளையாடும் அலை அருகில், தெ
நல்லருள் தந்தெமைக் காத்திடுவான் - தனை
நாடுவோர் நோய்நொடி தீர்த்திடுவான் கெடு
வல்லமையுள்ளவர் திமிரழிப்பான் - வாழும்
வலிமையற்றவர் இடர்களைவான் என்றும்
நல்லதைச் செய்யும் தன் அடியவர்க்கு - அன்
நலமுடன் இறையருள் கொடுத்திடுவான்.

சிறப்




எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்,
ஆதரவாளர்கள் அனைவருக்கும் தேரேறிவரும்
வல்லிபுர மாயவன் அருள் கிடைக்கப்
பிரார்த்திக்கின்றோம்.

**சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்**

**SUVAI THENDRAL CREAM HOUSE**

சுவையின் தரச்சிறப்பை நோக்கிய தென்றலின்
புதிய பயணம். அதுவே சுவைத்தென்றலின்
இனிய பயணம் இணைந்திடுவீர்எம்முடன் -
வாங்கி மகிழ்ந்திடுவீர்!

நிறுவன முகவரி:-
சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்
சாரையடி,புலோலி தெற்கு,
புலோலி.
T.p:- 0777 - 564820

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான
வைபவங்களுக்கு பரிமாறிக்கொள்ளத் தேவையான
சகல விதமான ஐஸ்கிறீம் வகைகளை
ஓடர் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

கே.வி. சூரியகுமாரன்
நிறுவன உரிமையாளர்.

(சி-8525)



தேரிலேறிவரும் வல்லிபுர மாயவன்அருள்
எல்லோருக்கும் கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.

நவீன வடிவமைப்புக்களில் அழகிய
தங்க நகைகளை செய்து பெற்றுக்
கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்

**வைஷ்ணவி நகைப் பூங்கா**

பிரதானவீதி, நெல்லியடி.

(சி-8526)




TVS
DAIDO
HERO HONDA
(சி-8527)

# ...ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்

# ...றப்பிதழ் - 08.10.2003



## ...ரி வழங்கிடும் வல்லிபுர மாயவன்



மூர்த்தியும், தலமும், தீர்த்தமும் சிறப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வைகஷ்ணவ சின்னங்களில் ஒன்றான திருநாமம் இத்தலத்தில் உள்ள ஒரு குளத்தில் இருந்து எடுக்கப்படுவதான சிறப்பும் இத்தலத்திற்குண்டு. 1981ம் ஆண்டில் 71 அடி உயரத்திற்கு ஏழுநிலை மாடங்களுடன் கூடிய இராஜகோபுரம் நிறுவப்பட்டது. அதில் உள்ள சிலைகளும், சிற்பங்களும், தலவரலாற்றைச் சுட்டி நிற்கின்றன. கோபுர தரிசனம் கோடி புண்ணியம், காத்தற் கடவுளாம் கண்ணனின் சந்நிதியில் கோபுர தரிசனம் கிடைக்க யாமும் நீவிரும் பெரும்பேறு பெற்றுள்ளோம். வாயுயர் கோபுரத்திற்கு உட்புறமாக அதனுடன் போட்டியிட்டபடி மாபெரும் வசந்த மண்டபம் எழிலுடன் அமைக்கப்பட்டுள்ளது. அலையெனத் திரளும் அடியவர்கள் ஒருங்கே இருந்து மாயவனின் பூஜை நிகழ்வுகளில் கலந்து அருள் பெற அம்மண்டபம் பேருதவியாகவுள்ளது.

எழில் கொஞ்சும் இவ்வாலயத்திற்கு நாடி வருவோர் வாடி வதங்காமல் கோடிநன்மைகளை வாரி வழங்கிடும் ஆயர் பாடிக் கண்ணன் திருப்பாற்கடலருகே சக்கரத்தாழ்வாராக வீற்றிருந்து தன் நல்அடியார்களை காத்தருள்கின்றான். இவர் எமது கண்கண்ட தெய்வம்.
இவ் ஆண்டு மகோற்சவம் சுபானு வருடம் புரட்டாதி மாதம் 07ம் திகதி புதன் கிழமை (24-09-2003) அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் 08-10-2003 அன்று தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது.
கேட்டவர்க்கு கேட்டபடி வாழ்வு நல்கும் "கீதை சொன்ன கண்ணன்." சித்திரத்தேரில் எழுந்தருளி நம் எல்லோருக்கும் அருள்பாலிப்பாராக.

## ...ன் வெண்ணெய் உண்ட நாயகன்

- கிழக்கே
... அருகில், தெய்வ
...டுவான் - தனனை
...த்திடுவான் கெடு
...ன் - வாழும்
...ளவான் என்றும்
...பவர்க்கு - அன்பன்
...காடுத்திடுவான்.

கண்ணனை மனதுள் நினைப்பவர் வாழ்வில் - எழும்
கஷ்டங்கள் யாவும் கலையும் தூய
எண்ணமதோடு அவன் இருப்பிடம் நோக்கில் - சூழ்
இருள் நீங்கி நல்லொளி பரவும்; திரள்
வெண்ணெயை உண்ட நாயகன் அருள் என்றும் - சோதனை
விளைகின்ற நேரத்தில் தெரியும்; தன்
கண்ணிமைபோல வரும் பக்தரைக்காக்கும் - நீலக்
கண்ணனை உலகென்றும் அறியும்

——— பாண்டியன்

சிறப்பிதழாக்கம்: காரையூரான்




வெண்ணெய் உண்ட கண்ணன்
மேலும் வீரம் தரவேண்டும்;
எம்மை வீழ்ந்திடாது காத்து
வெற்றி அருள பிரார்த்திக்கின்றோம்

தலைவர் பணியாளர்கள், அங்கத்துவசங்கங்கள்
**வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்**
பருத்தித்துறை. (சி-8534)

உங்கள் அனைத்து அச்சுவேலைகளுக்கும் தரமான பதிப்பகம்.
**தமிழ்ப் பூங்கா மல்ரி ஒப்செற் பதிப்பகம்**
பிரதான வீதி, நெல்லியடி (சி-8533)

உங்களுக்குத் தேவையான பாடசாலைஉபகரணப் பொருட்களையும், மின்சாரப் பாவனைப் பொருட்களையும் பெற்றிட நாடுங்கள்.
**தமிழ்ப்பூங்கா புத்தகசாலை அன் எலற்றிக்கல்ஸ்**
பிரதான வீதி, நெல்லியடி (சி-8532) T.P:- 021 -226 3073


அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு சிறந்த இடம்
**சுவர்ண மஹால்**
பிரதானவீதி, நெல்லியடி (சி-8531)

தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
**தரன் நகை மாளிகை**
ம.ம.வி. வீதி,நெல்லியடி, கரவெட்டி. (சி-8530)

உங்கள் இல்லங்களில் நடைபெறும் வைபவங்களை.
வீடியோப்படம் பிடித்திடவும்.புகைப்படம் பிடித்திடவும்
**வீடியோ கலாமினி**
அச்சுவேலி T.p: - 0777111018, 070 - 212431 (சி-8529)


**கோபாலா சர்வதேசதொலைத்தொடர்புசேவை.**
மந்திகை, புலோலி. T.p: 070-212958, 070-212372 070-212693, 021-2263277 021-2263653
(சி-8528)

புல்லாங்குழல் இசைக்கும் பரந்தாமனின் அருள் எல்லோருக்கும் கிடைத்திடப் பிராத்திக்கின்றோம்.
**சிவகுரு கட்டடப் பொருள் உந்துருளி வாணிபம்**
உந்துருளி விற்பனையில் முன்னனி வகிக்கும் நிறுவனம்.
நாயகி கட்டடம், பரந்தன் சந்தி அருகாமை, யாழ்சாலை, கிளிநொச்சி.



(சி-8527)



# விளையும் பயிரை...

ஆதித்தநிலா

"கிழவி புலி ; கதை சொல் லணை பிஞ்சுக் கரங்களால் என் கழுத்தைக் கட்டிக் கொண்டு என் முதுகில் சாய்ந்து கொண்டு கன்னத் தோடு கன்னம் வைத்து உரசிக்கொண்டு கேட்டான் என் மகாராஜாவின் மகன் குட்டி மகாராஜா..

துருதுரு கண்களும் துடிப்புமாய் துடுக்குத்தனம் மிகுந்த சுட்டிப்பயல் அவன். வெண்ணை திருடி உண்ட மாயக்கண்ணன் போல அவனது ஆறுவயதிற்கு சுட்டித்தனங்கள் அதிகப்படிதான்.

"கிழவிப்புலி; கதையல்லோ கேட்டனான்...."

"முன்னொரு காலத்தில் ஒரு ராஜாவும் ராணியும்....."

"வேண்டாம் கிழவிப்புலி! வண் அப்போணஸ் வண் அப்போணஸ் கிங் அன்ட் குயின்... வேண்டவே வேண்டாம். வொல்கனோ, டைனோரஸ் கதை சொல்லுங்கோ"

"தம்பி கிழவிப்புலி எண்டே சொல்லுறது. கூடாது அப்பன். மதி அதட்ட மான்குட்டியாய் துள்ளிக்கொண்டு பாய்கிறான் பயல்.

"மதி அவனை விடு! அவனுக்கு தோன்றுற மாதிரிச் சொல்லட்டும்"

"பாட்டிப்புலி " பயல் பவிசாய் அழைத்துக்கொண்டு பாய்ந்து அருகருகு நின்ற அவனுகள் இருவருக்கும் இடமும் வலமுமாய் கிருஷ்ணன் ருக்குமணியையும் ராணியையும் அணைத்துக் கொண்டது போல உலகத்து ஆளுமைகளையெல்லாம் அடக்கி அணைப்பது போல ஆளுமை செய்வதுபோன்ற பாவனையில் அவனுகள் நடுவே.

" பாட்டிப்புலி!பாட்டிப்புலி!.."

அவன் போய்விட்டான். 'வண் அப்போணஸ் வண் அப்போணஸ் வேண்டவே வேண்டாம்... சுட்டிப்பயலின் தேடல் தேட்டமாய் என்னை ஆகர்சித்துக்கொண்டது.

சிந்தனையில் இலயித் திருக்கையில் அவர்கள் பாண்ட் அணி என்னை கடக்கிறது.

அவர்கள் பாண்ட் அணிக்கு அருவிதான் தலைமை இரண்டரை வயதுகளே நிரம்பிய என் மகனின் மகள் அவள்.

அவள் பின்னால் 'பேஸ்றம்' மாதுளா. 'சயிற்றம்' நிலவன்.

அவன் எங்கள் அயல்பையன். சமாதான இடைவெளியில் தகப்பன் படிப்பிற்காய் வெளிநாடு சென்றுவிட அருவியின் ஐக்கியத்தில் தகப்பனின் பிரிவு மறந்து குதித்துக்கொண்டு அதிக இழப்புக்களை தாங்கிக் கொண்டிருப்பவன்.

அருவிக்கும் அவன் இல்லாட்டி சாப்பாடு சரியாய் இறங்காது. குளிக்கத்தன்னிலும் அவனை அங்கால விடமாட்டாள்.

சிம்பல், ஓகன், எக்கோ டியர் என்பனமுறையே தரங்கிணி, ஆர்த்தி, சுரபி. அருவியின் 'லீட்ஸ்றிக்' பெரு வைபவங்களின் பாவனைக்காய் பக்குவப்படுத்தி வைத்திருந்த பெரிய அகப்பை... வீடுமாதுளாவின் 'பேஸ்றம்' மெழுகுவதற்காய் முருங்கை இலை இடிச்சு சாறு வடிக்கும் அரிதட்டும் சிறட்டையும் 'சயிற்றம்' நிலவன் அதேபோல அவன் வீட்டு அரிதட்டும் சிறட்டையும். அவனைப் போலவே சிம்பல் என்பது அருவியினதும் நிலவனிதும் சாப்பாட்டுப் பிளேட்டுகள். ஓகன் அருவியின் பிறந்தநாளுக்கு நிலவன் பரிசளித்த விளையாட்டு ஓகன். எக்கோடியனாய் அழகு! முறையே ஆர்த்தியிடமும் சுரபியிடமும் அவர்கள் அணி அற்புதமாய் நகர்ந்து கொண்டிருக்கிறது. அருவி அட்டகாசமாய் அணியை நடத்திச் செல்கிறாள்.

'சிம்பல்' ஒலிக்கும் தரங்கிணி 'சிம்பல்' ஒலியை உண்டாக்கும் ஒவ்வொரு போதும் துள்ளி அபிநயிக்கிறாள்.அவள் துள்ளலுக்கு அவகாசம் கொடுத்து ஒரு தரிப்பு. தொடர்ந்து அருவியின் கட்டளையில் அணி நகர்கிறது.

" அருவி என்ன நடக்குது..."

அருவி நின்று பதில் சொல்லவில்லை.அணி நகர்ந்து கொண்டே பதில் சொல்கிறது.

"மாமாக்களுக்கு அஞ்சலி செய்கிறோம்"

"இப்பதானே சமாதான காலம் எந்த மாமாக்களுக்கு..."

"அப்பம்மா உனக்கு மறந்துபோச்சு. ஆர்த்தி தெளிவாய்ச் சொன்னாள். தேவன் மாமா, அன்பன் மாமா, வண்ணன் மாமா எண்டு அப்பா நேற்றுப் படம்கொண்டு வரேல்ல..."

என் மறதி சுடுகிறது. ஒப்பிலான் சொன்னதை அவர்கள் கேட்டுக்கொண்டுதானிருந் திருக்கிறார்கள். நெடுந்தீவுக் கடலில் கப்டன் பொதிகைத் தேவன், கப்டன் அன்பன், மேஜர் ஆற்றலோன் வீரகாவியமான துர்ப்பாக்கிய நிகழ்வது.

சமாதான காலத்தில எதிர்பாராதசாவு "வீரமரணம்"

சமாதானத்திற்கான விலை கொடுப்பு!...

பொங்கி எழவேணுமோ இன்னும் பொறுமை காக்க வேணுமோ...

"பொறுத்தார் பூமியாழ்வார்" - பொல்லாத சாக்குப் போக்குகளாய் தோன்றுகின்றது. பொறுமைக்கும் எல்லை உண்டு.

பெரியவர் எடுக்கிற தீர்மானத்தில தீர்க்க தரிசனம் இருக்கும். அதுதான் மக்கள் அமைதியாகவே பொங்கினம்.

'காலம் கனியும்' ஓடு மீன் ஓட உறுமீன் வரும் வரையில் வாடியிருக்குமாம் கொக்கு' அன்று நான் சிறுமியாய் இருந்தபோது அப்பு சொன்ன வரிகள் நினைவுக்கு வருகிறது.

"புயலுக்கு முந்திய அமைதியோ" என்று தோன்றுகிறது.

நேற்றும் உப்பிடித்தான் ஆமி, புலி விளையாட்டு கல்லால மட்டும் எறிஞ்சு விளையாடக்கூடாது என்று உறுதியானகட்டளை பிறப்பிச்சிப் போட்டான் என்று தரங்கிணி ஊமல் கொட்டைகள் கொண்டு வந்திருந்தாள்.

அவர்கள் அணி இரண்டாகப் பிரியும். ஆமி,புலி என்று ஒரு முறை ஆமிக்கு வந்தவர்கள் மறுமுறை புலிக்கு வரவேண்டும், புலிக்கு வருவதில் அடி பிடி என்பதால் இப்படியொரு நடைமுறை. ஆனா ஒரு நிபந்தனையோடு தான் விளையாட்டு ஆரம்பமாகும் 'எப்பவும் புலிதான் வெல்ல வேணும்.'

நிலவன் சில பொழுதுகள் ஆமி வெல்லுவதாய் குழப்பிக் கொள்ளுவான். அவர்கள் உடன்பமய்ர்க்ள் நிலவனை விலக்கி விடுவார்கள். நிலவன் பொறுக்காமல் விசமம் செய்வான். குழப்பம் ஆரம்பிக்கும்.

கண்காணிப்புக் குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். நான் தான் அவர்களின்ர கண்காணிப்புக் குழு. அருவிதான் அறிக்கை சமர்ப்பிப்பாள்.

"அப்பம்மா நிலவன் குழப்புறான்"

"என்ன செய்தவன்"

"புலிதானே வெல்ல வேணும். சுட்டால் பிறகும் எழும்பிச் சுடுறான் எழும்பி ஓடுறான்...."

"நிலவன்! என்ன சொல்லுறாய்..."

"கனநேரம் என்னெண்டு சும்மா கிடக்கிறது அதுதான்.... தரங்கிணி தான் எழும்பி ஓடச் சொன்னவள், சுடச் சொன்னவள்..."

"தரங்கிணி உன்ர கன்னையோ"

"தரங்கிணிதான் சந்திரிகா. தரங்கிணி சொன்னா நான் செய்யத்தானே வேணும்..."

"தரங்கிணி! நீ என்ன சொல்லுறாய்.

"அது நேற்றுத்தான் அப்பம்மா அப்பிடிச் சொன்னான். இண்டைக்குச் சொல்லேல்ல."

"சரி கதையை விடுங்கோ! தரங்கிணி சொன்னது நிலவனுக்கு விளங்கேல்லப்போல. அவன் இனிக் குழப்பமாட்டான்."

"என்ன நிலவன் குழப்பமாட்டாய்தானே!"

"இல்ல அப்பம்மா! தரங்கிணியையும் குழப்ப வேண்டாம் எண்டு சொல்லுங்கோ!"

"தரங்கிணி! நீ சொல்லுறதை வடிவா விளக்கமாச்சொல்லு. மாத்தி மாத்திக் கதைக்காதை சரியோ...."

"என்ன அருவி சரிதானே!"

"அப்பம்மா எனியும் நிலவன்பிள்ளை குழப்பினார் எண்டா எங்கட வீட்டைவர விடமாட்டன்."

"அருவியம்மா அப்பிடிச்சொல்லக்கூடாது, பாவம் நிலவன். அவையின்ர வீட்டையெல்லாம் உடைச்சதாலதானே எங்கட வீட்டுக்குப்பக்கத்தில வந்தவையள். அனுசரிச்சுப் போங்கோவன். பிள்ளை நல்ல பிள்ளையல்லோ"

"அருவி வா, இனி நான் அப்பாவாணைக் குழப்பமாட்டன். நிலவன் அருவியின் கையைப்பிடித்து இழுக்கிறான்.

"நீஅப்பாவில நேசமில்லை அம்மாவைக் கொண்டு சத்தியம் பண்ணு."

"அருவி வா! பாத்தியே நான் சொன்னாச் சொன்னது தான்"

"அருவி! நிலவன் திரும்பத் திரும்பச் சொல்லுறான் அல்லே. அவன் குழப்ப மாட்டான். நீ போ, குழப்பினா நான்வாறன்.

அதுக்குப்பிறகுதான் அரைமனதோடு அருவி சம்மதிக்கிறாள். அவள் சரியான சுட்டி தான்.

"சரி எல்லாரும் ஒற்றுமை தானே! எனி ஆரும் குழப்பக் கூடாது."

அவர்கள் தலையாட்டிக் கொண்டு போகிறார்கள். அருவி முணு முணுப்பது காதில் விழுகிறது.

இண்டைக்கு முகுந்தன் வரேல்ல. அவன் வந்திருந்தா இவ்வளவு கெதியா விலக்குப் பிடிச்சிருக்கேலாது. இதுகளிட்ட இருக்கிற சுட்டித்தனம் அவனிட்ட இல்ல. நசுக்கிடாம ஏதேன் வம்பு தும்பு செய்து போட்டு ஓடியிடுவான்.

அறுந்துபோன என் சிந்தனைகள்: என் சின்ன வயதுக்குத் தாவுகிறது. ●

# சிறுகதை என்றால் என்ன?

**சிறுகதை** என்றால் என்ன? சிறுகதை எப்படி இருக்கவேண்டும். என்று எழுப்பப்படும் கேள்விக்குப் பதில் என்ன?

"ஒரு சிறுகதையின் வடிவ அம்சங்களை நுணுகிக்கண்டறிதல் பெருஞ்சிரமமான செயல் இல்லை. ஆனால் அந்த அம்சங்களின் சேர்க்கை எங்ஙனம் ஒரு படைப்பைச் சிறுகதையாக உருமாற்று கின்றது என்பதைக்காணுதல் பெருஞ்சிரமம் ஆகும். இந்த விதத்தில் ஒரு சிறுகதை என்பது ஒரு சிறுகதைக் குரிய அனைத்து அம்சங்களும் சரியான வீதத்தில் சேர்க்கை பெறுதல் என்று சொல்லுதலே பொருத்தமாக இருக்கும்'' என்று சொல்லுகின்றார் டாக்டர் சோ.கேசவன் அவர்கள்.



சிறுகதைக்கு எந்த இலக்கணமும் இல்லை. எந்தச்சட்ட திட்டங்களுக்கும் அதனைக் கட்டுப்படுத்தி வைக்க முடியாது. இத்தனை செ.மீ. நீளம் இத்தனை செ.மீ. அகலம் என்ற கணக்கிலோ, மேசை கதிரை செய்வதைப்போல சிறுகதை உருவாக்க முடியாது என்றும் சொல்லப் படுகின்றது.

என்றாலும் நூற்றைம்பது ஆண்டுகளை உலகளாவிய ரீதியில் தாண்டிவிட்ட சிறுகதைக்குச்சில பாரம்பரிய மரபுகள் அமைந்து தான் உள்ளன. இந்த மரபுகளை ஒட்டியும் வெட்டியும் சிறுகதைகள் படைக்கப்படுகின்றன. மரபுக்குள் மாத்திரம் நிற்கின்றதா அல்லது மரபை விட்டு வெளியே நிற்கின்றதா என்பதை எல்லாம் விட சிறுகதை வெற்றிகரமாக அமைந்துள்ளதா என்பதே முக்கியமானது.

சிறுகதை என்றால் அளவில் சிறிதாக இருத்தல் அவசியம். உரைநடை வடிவிலானதாக அமைதல் அதனை விட முக்கியமானது. இதற்கு மேலதிகமாய் அது மிக மிகச்சிறப்பாக சொல்லப்பட்டு / எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.

ஒரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கை அல்லது ஒருமக்கள் கூட்டத்தின் வாழ்க்கையின் ஒரு பகுதியை/ ஒருநிகழ்வினை அது ரசனையோடு வெளிப்படுத்த வேண்டும்.

சிறுகதையின் மையம் - மனிதவாழ்க்கையோடு இயைந்ததாக சம்பவங்களாக அமையலாம். அல்லது தனிமனித உணர்வுச் சிக்கல்களை, எழுச்சிகளை, வேதனைகளை, தாக்கங்களை வெளிக் கொண்டு வருவதாக அமையலாம்.

இங்கு முக்கியமான ஒன்றைக்கவனிக்க வேண்டும். எழுத்துலகில் அனுபவமும் ஆற்றலும் உள்ள பல எழுத்தாளர்கள் இதனையே தான் குறிப்பிடுகின்றனர். அதாவது எதனை எடுத்துக் கொண்டாலும் அது ஒருதனிமனித சம்பவம், அல்லது அவனது ஒரு உணர்வு, அவனது ஒருநிகழ்ச்சி, ஒருதொல்லை, ஒருஇடர், ஒரு சந்தோஷம் என்று ஏதாவது ஒன்று மட்டுமே சிறுகதையில் முதன்மை படவேண்டும். பல நிகழ்ச்சிகளை / சம்பவங்களைத் தொட்டாலும் அது ஒன்றுக்கொன்று தொடர்புபட்டதாக ஒன்றுக்கொன்று தேவையானதாக தேவையான அளவில் பாவிக்கப்பட வேண்டும். அவை தனித்தனியே நெருடிக் கொண்டு இருக்கக்கூடாது.

''நாவல்களைப்போல சிறுகதைகளும் சம்பவங்களின் கோர்வைகளிலும், குணாதிசயங்களின் அடிப்படையிலும் எழுதப்படுகின்றன. பாத்திரங்களின் குணங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் கதை சிறந்த சிறுகதையாக மதிக்கப்படுகின்றது. ஆனால் சிறுகதைகளில் விஸ்தாரமாகக் குணங்களை உருவாக்கிக்காட்ட சந்தர்ப்பம் ஏற்படுவதில்லை. நாவல் வாழ்க்கையில் பூரணமான உருவம். சிறுகதை ஒரு சம்பவத்தின் அடிப்படையில் பின்னப்படும் ஒரு ஒளிக்கீற்று. எனவே சிறுகதையில் நம்லட்சியம் ஒரு முழு மனிதனைச்சித்தரித்துக்காட்டுவது அல்ல. மாறாக அவனுடைய குணங்களின் ஒரு பகுதியை மட்டும் காட்டுவதாகும்"

**சிதம்பரன்**

என்று வலியுறுத்துகின்றார். ஹிந்திஎழுத்தாளர் முன்ஷிப்.ரேம்சந்.

"சிறுகதை என்பது ஒரே ஒரு பாத்திரத்தின் நடவடிக்கைகளைப் பற்றியோ, ஒரு தனிச்சம்பவத்தைப்பற்றியோ அல்லது ஒருதனி உணர்ச்சி தரும் விளைவையோ எடுத்துக் கூறும் இலக்கிய வடிவம் ஆகும்"

என்று 1901இல் பிராண்டா மாத்தியூஸ் என்பவர் தெரிவித்ததாக சோ.சிவபாதசுந்தரம், சிட்டி ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

"சிறுகதையில் அதிகமான பாத்திரங்கள் இருக்கமுடிவதில்லை. இருக்கும் சில பாத்திரங்களும் அல்லது ஒரு பாத்திரமும் வளர்ச்சி நிலையில் இயங்குவதில்லை. குறிப்பிட்ட கணத்தில் அல்லது களத்தில் பாத்திரங்களின் உணர்வு நிலையின் மூலம் இயக்கம் பெறுகின்றது.

என்றார் டாக்டர் சோ. கேசவன் உண்மையில் ஏராளமான கதைமாந்தர்கள் சிறுகதை என்ற வடிவத்திற்கு பொருத்தமற்றவர்கள். கணக்கில்லா நிகழ்ச்சிகளும், ஏனைய தொடர் நிகழ்வுகள் கூட பொருத்தமற்றதே.

விஸ்தாரமான பாத்திர வர்ணனையோ - சித்தரிப்போ பெரும் நாவலுக்கு வாய்ப்பாக அமையுமே தவிர சிறுகதைக்கு பொருத்தமாக அமையாது. வீரியமுள்ள கவிதைக்கு எவ்வாறு சொற்சிக்கனம் அவசியமானதோ அவ்வாறே சிறுகதைக்கும் சொற்செட்டு முக்கியம்.

லாவகமாக சொற்களைப்பயன்படுத்தி சொல்லுகின்ற செய்திகளை விட சொல்லாத செய்திகளே அதிகமாக இருக்கக் கூடியவாறு சிறுகதை என்ற கட்டிடம் கட்டப் பட வேண்டும்.


அற்புதமாக கட்டப்படும் அந்தக் கட்டடத்தில் ஒரு கல்லை எடுத்தால் கூட அந்தக்கட்டடத்துக்கு ஊறு ஏற்பட வேண்டும் என்ற மாதிரியாக கல்லின் பெறுமதி அதாவது சொல்லின் பெறுமதி அமைதல் வேண்டும்.

இவ்வாறு அழுத்தம் கொடுக்கப்படும் சிறுகதையின் தாக்கம் - வீச்சு எவ்வாறு அமைய வேண்டும்? கதை எத்தகைய உணர்வுகளையும் வெளிக்கொணரலாம். சோகம், வேதனை, சிரிப்பு, சிந்தனை, என்று எந்த உணர்ச்சியை வெளிப்படுத்தினாலும் அது படித்து முடித்த பின்னர் மனத்தை விட்டுத்தூக்கி எறிய முடியாத தாக்கத்தைத்தர வேண் டும். உடனே படித்து உடனேயே மறந்து போகக்கூடியது கதை அல்ல. அது வேறு. உண்மை யான சிறுகதை. நெஞ்சினை விட்டு அகலாத நினைவுகளுடன் வாசிப் பவருடன் கூடவே வரவேண்டும்.

"எந்த உணர்ச்சியை அல்லது கருத்தை அது தன்னகத்தே கொண்டிருக்கிறதோ, அதைப்படிப்பவரின் நெஞ்சில் மின்வெட்டைப் போல பாய்ச்சும் ஆற்றல் சிறுகதைக்கு வேண்டும். படித்து முடித்தவுடன் படித்தவர் உள்ளத்தில் எது ஊற்றுப் பெருக்கினைப்போல் உணர்ச்சிகளைப்பூத்துக்சொரிகின்றதோ அதுவே சிறந்த சிறுகதை என்று கொள்ளலாம். கதைக்குப் பின்னே உள்ள கதாசிரியரின் கலை ஆற்றல், கற்பனைத்திறன், சொல்லாட்சி, அவர் மறைமுகமாய் கூறும் செய்தி இவ்வளவும் இலக்கணவரம்புகளை விடவும் மிகமிக முக்கியமானவை. சிறந்த சிறுகதை ஆசிரியர்கள் பலரும் எந்த இலக்கண வரம்புகளையும் நினைத்துக்கொண்டு தம் கதைகளை எழுதுவதில்லை. பெரும்பாலும் அவை தாமாகவே அமைந்து விடுகின்றன. வேறு சிலர் தெரிந்து கொண்டே வரம்புகளை மீறிச்சிறந்த படைப்புகளை உருவாக்கி விடுகின்றார்கள் என்றார் சிறுகதை நாவலாசிரியர் அகிலன் அவர்கள். ●

**இலக்கியப்பகிர்வு**

## ஒரே ஒரு முறை சிந்தித்துப்பார்...



கள்ளக்கோழி பிடித்தவனின்
களிப்புக்கர்சனை போல ஒருகுரல்...
கூரை ஏற முடியாதவன்
வானிலேறி வைகுந்தம் தமை கொண்டு வருவதாய்
பேச்சில் திழைத்து மிகமிக மகிழ்வோரே....
அவன் உன்னை அடித்து வீழ்த்திய போது
இவர்கள் ஆதங்கப்படாததும்
இன்று உனக்கு உதவி புரிவதில்
ஈடற்ற கவனமும் பொறுப்புணர்வும்
உண்டெனப் புசத்துவதால்...,
ஊளையிடும் நரியின் நிலையில் நீயும்
உன்னை வைத்திருப்பவனும்......
தூர நின்றே...... மிகமிக தூரமாக நின்றே
கண்காணித்தான்......
இன்று நீ பெரும் டார்சான் பாவனையில்
ஏதேதோ கண் காணாத இடத்தில்
கலங்கரை விளக்கமாக கயமை
காட்சிதரக்களிப்பில்மிதந்து கெக்கரி கொட்டுவதை
இனி நிறுத்திக்கொள்...
அவன் திருப்பி அடிக்காத வரை நீ
பெரும் வீரனாக இருப்பதாகவே எண்ணுகிறாய்
உன்னை ஏமாற்றும் உனது எஜமானனும்
தன்னை மறந்து தானும் எண்ணுவான்.
ஒரு பொழுதில்......
நீங்கள் இருவருமே ஓடிப்போனவர்கள் என்ற
மகுடம் சூடியதை இன்னமும் மறக்கவில்லை
உலகம்....
ஆனால்.... அவன்திருப்பி அடித்தால்
முந்தநாள் அவனது அடியைத்தாங்காது......
ஓடிஓடி ஒளிபுகா இடங்களிலுறைந்ததும்......
உங்கள் முதல்வரே அயல் வீடுகளிலிருந்து
கண்ணீருகுத்தவும் அயலவன்
கால்களைக்கட்டிக் கண்ணீரால் கழுவியதையும்
மறந்து போனதர்மர்மம் தானென்ன...?
ஆனால்..... உன்னை வீழ்த்திய அவனது வலிமை...
எப்போதும் அவனுள்ளேயாக இருப்பதை
ஒருமுறை...... ஒரே ஒரு முறை சிந்தித்துப்பார்.

வளவை வளவன்

## முற்றப்பனை



என் வீட்டின் முற்றப்பனையே....
நன்றேயிருக்கிறது உனது கம்பீரம்
மதாளித்து நீண்டு கிடக்கும் உனது
கருக்கேறிய கைகள் அச்சத்தை
ஏற்படுத்துகிறதெனக்கு

அன்றோர் நாள் உனை நான்
நீங்கிச்சென்ற பொழுது
நீயும் நானும் அருகு நின்றவுனது காதலனும்
சமஅளவு உயரமுடையோமாயிருந்தோம்.

இன்று எங்களிருவர் வாழ்விலும்
ஏகப்பட்ட மாற்றங்கள்
நீ என்னிலும் எட்டு மடங்காக
உயர்ந்து போயிருக்கிறாய்
அருகு நின்றவுன் காதலன்
தலையறுந்து போய் நிற்கிறான் – எனினும்
உன்னினத்தில் வேறொருவன்
உன்னை சுகித்திருக்கிறான் போலும்
நிறை மாதம் கொண்டனவாய்
காய்க்குழந்தைகள் நினது
சிரசை சூழ்ந்து தொங்குகின்றன.

வெட்டவெளியாய்போன எனது நிலத்தில்
ஓரேயொரு வெளிச்சம் நீ மட்டும்தான்
உனது வாழ்வைப்போலவே என் வாழ்விலும்
இதே மாற்றங்கள் நிகழ்ந்தாகி விட்டது
இருப்பினும் சொல்லப்படவேண்டிய
ஓர் வேற்றுமையும் ஓர் ஒற்றுமையும்
இப்பொழுது இருக்கிறது.

வேற்றுமை
உனதிளமை சுகிக்கப்படுகிறது
எனதிளமை சபிக்கப்படுகிறது

ஒற்றுமை
நானும் நீயும் நிலத்தில் ஊன்றியிருப்பது
ஒரு காலை மட்டும் தான்.

வேல்.லவன்




## சிறுவர்கதை

### ஏ மானே !

குரங்கு ஒன்று அபூர்வமாய்க் கிடைத்த ஒரு மாம்பழத்தைச் சுவைத்து தின்று கொண்டிருந்தது. பழத்தைத் தின்று முடிக்கு முன்பு"தட தட"என்று சத்தம் கேட்டது நிமிர்ந்து பார்த்தது குரங்கு.

உறுதியான கொம்புகளைக் கொண்ட ஒரு மான் தலை தெறிக்க வேகமாக ஓடிவந்தது. பின்னே நாய்கள் சில துரத்தி வந்தது. குரங்கிற்கு புரிந்து விட்டது."இந்த மானைப் பிடிக்க சில வேட்டை நாய்கள் துரத்திக் கொண்டு வருகின்றன. இது உயிருக்குப் பயந்து ஓடிவருகிறது''என்று நினைத்த குரங்கு. மாங்கொட்டையைக் கீழே வீசிவிட்டு ஓடிவரும் மானை ஏய் மானே! நில் என்றது.

"நிற்க நேரமில்லை!என் உயிருக்கு ஆபத்து என்று சொல்லிக் கொண்டு சில விநாடி நின்றது. "என்ன மானே!வேட்டை நாய்களைக் கண்டா நீ இப்படிப் பயந்து ஓடி வருகின்றாய். நாய்கள் என்ன அத்தனை பலம் உள்ளனவா? உன் முழங்கால் உயரம் கூட அவை வராது. அவற்றை விட ஐந்தாறு மடங்கு பருமன் உன் உடம்பு மூர்க்கமான கொம்புகள் இவை அந்த நாய்களுக்கு உண்டா? இல்லை உன் வேகம் என்ன? இத்தனை வீரத்தையும் கொண்ட நீ கேவலம் அற்ப பிராணியான நாய்களுக்குப் பயந்து ஓடிவருகிறாயே, எனக்கு அவமானம் பிடுங்கித் தின்கிறது" என்றது குரங்கு

குரங்கு சொன்னதையெல்லாம் அமைதியாய் கேட்டது மான். உன்னை நாய்கள் சூழ்ந்து கொண்டு தாக்கினால் நீ உன் கூர்மையான கொம்புகளைக் கொண்டும் அவற்றைத் தாக்கி அழிக்கலாமே இவற்றோடு மன உறுதியையும் தன்நம்பிக்கையும் உடன் சேர்த்து கொண்டால் அத்தனை நாய்களையும் துவம்சம் செய்து விடலாமே இவற்றை எல்லாம் உணராமல் இப்படி கோழையாக இருக்கிறாயே என்றது. குரங்கு இதைக் கேட்ட மானுக்கு உடனே வீரம் பொங்கியது.

குரங்கே! தக்கதருணத்தில் நீ வாந்தாய். எனக்குள் இருக்கும். திறமை இப்போ தான் புரிகிறது.எனது பலத்தையெல்லாம் திரட்டி மிகவும் மூர்க்கமான ஒரு அடிஅடித்தால் போதும் நாய்களின் முப்பத்திரண்டு பற்களும் சிதறிவிடும். அத்தோடு அவற்றின் மூளையும் சிதறு தோங்காய் போல சிதறும். அந்த நாய்களை எதிர்த்து. அழிக்கிறேன் பார்! என்று சொல்லிக் கொண்டே நாயை எதிர்த்தது நாய்கள் மிக அருகில் வந்து விட்டன.

மானுக்கு உடல் முழுக்க மூர்க்கம் உண்டாயிற்று. கால்களை தரையில் உராய்ந்தது. உயர்ந்த கொம்புகளை இப்படியும் அப்படியுமாக அசைத்துப் பார்த்தது. அதே நிமிடம் நான்கு வேட்டை நாய்கள் மானைச் சூழ்ந்து கொண்டு பயங்கரமாகக் குரைத்தது.

மானுக்கு என்னதான் உள்ளத்தில் உறுதி இருந்தாலும் நாயின் குரைப்பும் சத்தமும் அதன் கூரான பற்களும் மனதிற்குள் அச்சத்தை உண்டாக்கியது. மானுக்கு உடல் உறுதி தளர்ந்தது. மான்மிரண்டு பயந்து ஓட ஆரம்பித்தது. இவற்றிற்காக காத்திருந்த நாய்கள் மானின் மீது பாய்ந்தன. மான் அலறி கீழே விழுந்தது.

நாய்களின் பின்னே வந்த வேட்டைக்காறர்கள் அந்த மானைப் பிடித்து கட்டி எடுத்துச் சென்றனர் இவற்றை மறைவில் இருந்து பார்த்த குரங்கு கோழை பயலுக்கு நல்லுபதேசம் செய்தாலும் கோழை கோழை தான் எக்காலத்திலும் மானை வீரனாக்க முடியாது என்று முணு முணுத்தபடி... அங்கிருந்து சென்றது குரங்கு.

**பாமேஸ்வரி**

## வாரம் ஒரு குறள்



நாங்கள் கல்விஞானம். கேள்விஞானம் நிரம்பியவர்களாக இருந்தாலும் ஒரு சபையில் அச்சமின்றி எதையுமே எடுத்தியம்பக் கூடியவர்களாக இருக்க வேண்டும். பயம். கூச்சம் என்பவற்றில் கட்டுண்டு இருப்போமானால் எதையுமே சாதிக்க தகுதியற்றவர்களாகக் கூட ஆகிவிடலாம். உண்மையில் அதிகளவு கல்வியறிவு நிரம்பியவர்களாக நாம் இருந்தாலும் ஒரு சபையிலே திறமைகளை வெளிக்காட்டக் கூடியவர்களாக இருக்க வேண்டும். என்பதையே வள்ளுவப் பெருந்தகை பின்வரும் குறள்மூலம் விளக்கி நிற்கிறார்.

*"கற்றாருள் கற்றார் எனப்படுபவர்*
*- கற்றார்முன்*
*கற்ற செலச் சொல்லுவார்"*

## சொற்சிலம்பம்-05

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| த | ல் | செ | லை | ட | ம் | க |
| வ | ன் | லை | ல் | வ் | பூ | ற் |
| ணி | ச | ல் | வ | ம் | ணா | க |
| ய | ப் | த் | பா | னி | மு | ரை |
| ப | ஒ | றி | தா | ம | ப | ப |
| பு | லி | ன் | லி | ளி | சி | ச் |
| த | டீ | ம் | ர | கை | ம | க |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பிவையுங்கள்.

### சொற்சிலம்பம் - 03 இன் விடைகள்

01. அப்பா.
02. அண்ணா.
03. தங்கை.

01. தை.
02. கார்த்திகை.

### சொற்சிலம்பம் - 03 இன் பரிசுக்குரியவர்

ஜெ. ஜசோதினி,
உடையார்கட்டு
மகா வித்தியாலயம்.

### சொற்சிலம்பம் - 03 இன் பாராட்டுக்குரியவர்கள்

01) ந. ஸ்ரீபன், கிளி/இந்துக்கல்லூரி, கிளிநொச்சி.

02) டினேஸ்குமார், யாழ்.பருத்தித்துறை, வீதி.

03) சு.பகீரதன், மகிந்தபுரம், திருகோணமலை

ஊர்வன மூன்று?

01) ........................................
02) ........................................
03) ........................................

கொடிப்பூ இரண்டு?

01) ..............................
02) ..............................

*சொற்சிலம்பம் -05*
*ஈழநாதம்,*
*யாழ் சாலை,*
*கிளிநொச்சி.*

பெயர்

முகவரி :-..................................................

## வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம்

ஐப்பசி ஆறாம் திகதி. உலக ஆசிரியர் தினம். "கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்கிறது நாலடியார். அனைத்திலும் உண்மையை உணர வைப்பது அறிவு. அதுவே ஆக்கம் தரும். உயர்விற்கு வழி அமைக்கும். உள்ளத்தைப் பண்படுத்தும். கல்விக் கடலில் நீந்தியவர்கள் ஆசிரியர்கள் அன்றோ!

ஆம்! நாட்டிலே வல்ல மாணாக்கரை உருவாக்குவார்கள். நல்ல நல்ல துறைகளில் வாழவைப்பார்கள். எம்மைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்திருப்பார்கள்.

என்னே இவர்பணி! மாணவர் உயர்விலே நிறைவு காண்பார்கள். "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான" எமது ஆசிரியர்கள் நடமாடும் மனிதத் தெய்வங்கள். சகோதர சகோதரிகளே!

சிறந்த சீலம். திறந்த உள்ளம். உயர்ந்த இலட்சியம் உள்ள சமுதாயத்தை உருவாக்கும் அறிவுலகச் சிற்பிகள் இவர்களல்லவா? அடித்தாலும். அணைத்தாலும்.கண்டிப்பும்.கரிசனையும் ஆசிரியர்களது பண்புடமை. அறிவுச் சுடராலே ஆயிரம் ஆயிரம் தேசத் தீபங்களை ஒளிரச் செய்தவர்கள். ஏன். இன்னமும் ஒளியேற்றிக் கொண்டு இருப்பவர்களும் ஆசிரியத் தெய்வங்கள் அன்றோ!

இறந்த காலம். நிகழ்காலம். எதிர்காலம் யாவும் ஆசிரியப் பணியிலேயே தங்கியுள்ளது. 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்று செய்யும் ஆசிரியப்பணி உன்னதமானது. உயர்வானது.

நடமாடும் தெய்வங்களே! அறிவுச் சுடரொளியினரே!

உங்கள் நலனுக்காக இறையருள் வேண்டுகின்றோம். செய்கையாய். ஊக்கமாய். சித்தமாய். அறிவாய் நின்று எமக்கு வழிகாட்டுங்கள்.

"மாதா பிதா குரு தெய்வம் - அவர் மலரடி தினம் தினம் வணங்குதல் செய்வோம்."

**கு.மணிமேகலை.**

## நகைச்சுவை




**ஒருவர்:** அம்மணி: நாங்கள்புதிதாக முதியோர் இல்லம் ஆரம்பிக்கப் போகிறோம். உங்களால் ஏதாவது தரமுடியுமா?

**மற்றவர்:** தாராளமாகத் தரலாம்..... என்னோட மாமனார் மாமியாரைத் தருகிறேன்

**ஞா.அணலரசன்**

## கைவண்ணம்




எம். முரளி, இரணைமடு, கிளிநொச்சி.

## தாய் மடி வேண்டும்

தலையணை எனக்கு வேண்டாம் தாய் மடி எனக்கு வேண்டும்.
பஞ்சாமிர்தம் எனக்கு வேண்டாம் தாய்ப் பால் எனக்கு வேண்டும்.
நிலவு எனக்கு வேண்டாம் தாயே உன் முகம் காண வேண்டும்.
நச்சத்திரம் எனக்கு வேண்டாம் தாயே உன் சிரிப்பு வேண்டும்.
மழைச்சாரல் எனக்குவேண்டாம் தலைகோத உன் விரல்கள் வேண்டும்.

ஜே. அமலதாஸ்,
தரம் 7-A,



# உரிமைப்போரில் தம்பலகாமம் ஊர்த்தாய்



**மக்கள்** பலத்துடன் போராளிகள் ஆயுதப்பலம் ஒருபடி உயரும் போது வரலாறு மறுகட்டத்தை அடைகிறது.

இவ்வரலாற்று உண்மைக்கு சான்று பகர்வதாகவே தம்பலகாமம் வாழ்மக்களது உரிமைப்போர் பங்களிப்பும் இருந்தது.

இம்மக்களுக்குள் 50 வயதான பொன்னம்மா, அவரது கணவர் நான்கு பிள்ளைகள் வாழ்ந்து தம் தமிழ்த்தேசிய இன உணர்வை ஆழமாகவே வெளிப்படுத்தினர்.

தமிழ்ப்பாண்பாட்டில் வடித்தெடுத்த உருவமாய் அம்மாவை எப்போதும் காணலாம். அம்மாதான் இல்லத்தலைவி. கணவரின் ஒத்துழைப்பு எப்போதும் அம்மாவிற்கு இருந்தது.

தமிழர்களின் பாரம்பரிய பண்பாடு விழுமியங்களை தமது சமூக பண்பாட்டினுள் ஆழமாகப்பதிந்ததே தம்பலகாமம்.

ஆங்காங்கே தென்னந் தோப்புக்கள், உச்ச நெல்விளைச் சலைக்கொடுக்கும் பரந்து பட்ட வயல்வெளிகள், கோணேசர் ஆலயம் அனைத்தும் அனைவரது உள்ளங்களையும் குளிர்விக்கும் பசுமையான ஊராகவே காட்சிதரும்.

இவ்வூரின் நடுப்பிரப்பந்திடல் அம்மாவின் பூர்வீக வாழ்விடமாகும்.

இங்குதான் அம்மாவின் தமிழ்த்தேசிய அரசியலில் புதிய அத்தியாயம் ஒன்று தொடங்கியது. முற்றிலும் வேறுபட்ட அத்தியாயம் அது.

1958ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை இலங்கை முழுவதும் தமிழின அழிப்பினை மேற்கொண்ட இனக்கலவரங்களால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப்போராட முன்வந்தார்கள்.

1984 நடுப்பகுதியில் போராளிகள் அம்மா வீட்டிற்கு வந்து தம் இயக்கப்பணிகளை மெல்ல மெல்ல செய்யத்தொடங்கினார்கள்.

சிங்களப்படைகளின் நெருக்குவாரங்களுக்குள் அவ்வூர் இருந்தது அக்காலப்பகுதியாகும்.

ஒரு நாள் வயல் வேலைக்காகச்சென்ற சுமார் பத்து இளைஞர்களைச்சிங்களப்படையினர் கைது செய்து அவ்இளைஞர்களின் கையாலேயே வேலிக்கட்டைகளைப் பிடுங்கி எடுக்க வைத்தபின் அனைவரையும் சுட்டுக்கொன்றார்கள். சடலங்களையும், வேலிக்கட்டைகளையும் ஒன்றாக அடுக்கி எரியூட்டி விட்டு சிங்களப்படையினர் பின் வாங்கினர்.

இச்சம்பவம் நடைபெற்ற அதிகாலைப்பொழுதில் வெடிச்சத்தங்கள் ஊரைக்கதி கலங்கச் செய்து, மக்கள் அனைவரையும் பயத்தில் மூழ்கச்செய்து விட்டது.

இதற்குக்காலமும், வரலாறும் நியாயம் வழங்கியே தீரும். அது விடுலைப்புலிகளால் மட்டுமே நிறைவேறும் என்கிற நம்பிக்கையுடன் உரிமைப்போருடன் அம்மா தன்னை ஆழமாகவே ஈடுபடுத்தினார்.

சந்திரண்ணன் வீடு அம்மாவின் வீட்டிற்கு பக்கத்திலேயே அமைந்திருந்தது. சுதர்சன், சுஜி, குட்டிமணி, தீபன் ஆகிய போராளிகளின் அனைத்தும் சந்திரண்ணன் வீடு தான். பின்நாளில் சந்திரண்ணன் சிங்களப்படையினரால் கொல்லப்பட்டார். அவருக்கு வரலாற்றில் என்றும் தனியான பக்கம் ஒதுக்கப்படும்.

இரவின் அமைதியைக் கிழித்தபடி இப்போராளிகள் அம்மா, அம்மா..... என்று கூப்பிடுவது காதில் விழும்போதெல்லாம் இருண்டு கிடக்கும் அம்மா வீடு மங்கலாயிருந்து வெளிச்சத்திற்கு மாறும்.

பசி, உடற்சோர்வு நீங்கி மீள உற்சாகம் பெறுவார்கள் போராளிகள்.

இரவுப்படுக்கைக்கான அனைத்தையும் பெற்றுக்கொண்டு கன்னாக்காடுகளில் இரவைக் கழிப்பார்கள்.

சிங்களப்படையினரின் திடீர் சுற்றிவளைப்புக்களின் அபாயமிருந்து வரும் காலப்பகுதியில் தீபன் என்கிற போராளியின் பெற்றோர், உறவினர்கள், அம்மாவின் வீட்டிற்கு வந்திருந்தார்கள்.

அன்றிரவு தீபனும் பெற்றோர்களுடன் அவ்வீட்டில் தங்கி இருந்தார்.

மறுநாள் அதிகாலை அமைதியைக்கலைப்பது போல் துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டு அம்மா விழித்துக்கொண்டார்.

இருள் கரைந்து வைகறை ஒளி அரும்பத்தொடங்க இரண்டு இளைஞர்கள் இரத்தம் தோய்ந்த நிலையில் சிங்களப்படையினர் தூக்கிக்கொண்டு அம்மாவின் வீட்டின் முன் வீதியால் வருவது அம்மாவிற்குத்தெரிந்தது.

தீபனைக் காப்பாற்ற இக்கட்டான சூழ்நிலையில் அம்மா, தமக்குச்சாத்தியமான வெவ்வேறு வழிகளைப்பற்றி யோசித்த பின் முதலில் தன் அச்சத்தை நீக்கி தைரியத்தை வரவழைத்து விரைவான செயலில் இறங்கலாயினார்.

தென்னை மரத்திற்கென உரம் போட வெட்டிய குழியினுள் சாக்கை விரித்து அதில் தீபனைப்படுக்க வைத்து உருமறைப்புச்செய்து விட்டு அங்கிருந்தவர்களையும் தயார் படுத்தினார்.

சிங்களப்படையினரின் தேடுதல், விசாரணைகளுக்கு அம்மா துணிவுடன் முகம் கொடுத்துத் தீபனைக்காப்பாற்றினார். ஆபத்து நீங்கிய பின்னரே அனைவரும் நிம்மதியடைந்தனர். ஒரு சில மாதங்களின் பின் பன்குளத்திலிருந்து மணிக்கணக்காகத்தொடர்ந்து நடந்த கால்கள் நகரமறுக்கும் நிலையிலும் ஒரு புறம் தூக்க மற்றதால் களைப்பு, மறுபுறம் வயிற்றைக்குடையும் பசியுடன் மூத்த உறுப்பினர் புலேந்தி அம்மான், பிரபு, இந்திரன் ஆகியோர் ஊர்வந்தடைந்தனர்.

இரவின் இருளில் அம்மாவின் வீட்டுக்கதவைத் தட்டினார்கள். முதன் முதலில் புலேந்தி அம்மானை பிரபு, அம்மாவிற்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அடுத்து அம்மாவின் முருங்கை இலைச்சொதி, பொரித்த முட்டையுடன் சோறு அப்போராளிகளுக்கு புதுத்தென்பைக்கொடுத்தது.

சிலவாரங்களின் பின் கபிலன், விக்கி, சந்தர், பரதன், இந்திரன், றெஜி, அலோசியஸ் ஆகிய போராளிகள் இவ்வூர் வந்து சேர்ந்தார்கள். கள்ளிமேடு வேலாயுதம் அண்ணன் குடும்பம் தான் அப்போராளிகளுக்கு அனைத்தும் செய்து கொடுத்துப் பின்புலமாக இருந்தார்கள்.

இப்போராளிகள் கடவானைக் காட்டில் முகாம் அமைத்து தம் செயற்பாடுகளை விரிவாக்கம் செய்தார்கள். இப்படி இருக்கையில் சரோன், சந்தர், அலோசியஸ் இவர்களின் இனிய சமூக ஊடாட்டப்பண்பு இவ்வூர் மக்களூடான உறவை வலுப்படுத்தியது.

அம்மாவிடம் அடிக்கடி சென்று தமக்குரிய தேவைகளைப் பெற்றுக்கொள்வார்கள். காந்தி என்ற போராளி அம்மாவின் வீட்டினை இயக்கப்பணிக்காக முழுமை யாகப்பயன்படுத்தினர்.

போராளிகள் நடமாட்டத்தால் சிங்களப்படையினரின் நெருக்குவாரங்கள் இல்லாமல் போகும் சூழல் மெல்ல மெல்ல ஏற்பட்டு மக்கள் மகிழ்ச்சியாக, நிம்மதியாக வாழ ஆரம்பித்தார்கள்.

இருப்பினும் ஒருநாள் கோயிலடிப்பக்கம் சிங்களப் படையினரின் இரகசிய நகர்வைக்கண்டு மக்கள் பயத்தினால் சிதறி ஓடிப்பாதுகாப்புத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

இச்சமயத்தில் விக்கி, விசு, பிரபு, வரதன், ஆகிய இந்நான்கு போராளிகளும் துணிகரத்தாக்குதலை மேற்கொண்டு சிங்களப்படையினரை புறமுதுகு காட்டி ஓட வைத்தார்கள்.

இக்காட்சியை முதன், முதலாக இவ்வூர் மக்கள் நேரில் கண்டு உற்சாகமான மன நிலையை அடைந்தனர்.

போராளிகள் மனங்களில் எப்போதும் அம்மாவிற்கு என்று தனிஇடம் உள்ளது. தாக்குதலை முடித்த போராளிகள் அம்மா வீடு சென்று வழமையான உபசரிப்பு களைப்பெற்றனர்.

கள்ளிமேடு போராளிகளின் நிரந்தர முகாமாகியது.

இக்காலப்பகுதியில் 13ம் கட்டை சிங்களப்படை முகாமிற்கு மிக அண்மையில் LRS மில்லில் வேலை செய்த முப்பதிற்கு மேற்பட்ட ஏழைத்தமிழ் மக்களை சிங்கள ஊர்காவற்படையினர் இராணுவத்தினரின் துணையுடன் கடத்தி கல்மிட்டியாவில் வைத்து சுட்டு, வெட்டிக்கொன்று பின் எரித்தார்கள்.

இச்செய்தி மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியதோடு பயங்கரமான உளவியல் நெருக்குவாரத்திற்குள்ளாக்கியது.

இதற்குத்தகுந்த பதிலடி கொடுக்க வேண்டுமென்ற தார்மீக சீற்றம் உருவேறிய நிலையிலே போராளிகள் குரங்குப்பாலம் (மங்கி பிறிஜ்) புகையிரதப்பாதைப் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டு வந்த சிங்களப்படையினர் மீது பதுங்கித்தாக்குதல் ஒன்றை வெற்றிகரமாக மேற்கொண்டார்கள்.

எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட நான்கு ஆயுதங்களுடன் (2-AK, 01-SLR, 01-303) விக்கி, மது, வசந், அருண், வரதன், சறோன், றெஜி, வாகீசன், கபிலன், அன்சார், பரமன், தீபன், பரதன், கெங்கா (இவர் பின்னொரு நாளில் வீரச்சாவடைந்தார்) ஆகிய போராளிகள் இவ்வூர் வந்ததும் மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்கள்.

தமது ஊருக்குப்பயங்கர நெருக்குவாரங்களைக்கொடுத்து வந்த சிங்களப்படையினரின் ஆயுதங்களைக் கைப்பற்றி வரும் காட்சியை இவ்வூர் மக்கள் முதன் முதலாகக்கண்டு மன எழுச்சி கொண்டார்கள்.

அம்மாவிடம் போராளிகள் தமது அனுபவத்தைப்பகிர்ந்து கொண்டார்கள்.

மழையிலும், பனியிலும் நனைந்து நுளம்புத்தொல்லைகள் மத்தியில் பகையின் வரவுக்காகப் போராளிகள் முகம் குப்புறப் பதுங்கியிருந்த நாட்கள் பற்றியெல்லாம் அம்மா அறிவார்.

போராளிகள் வீரம், அன்பு, திறமை, அர்ப்பணிப்பு, சமூக உணர்வு இவ்வூர் மக்களுடன் பலமான இணைப்பை மேலும் ஏற்படுத்தி விடுதலைப்புலிகளுக்கு என தளத்தை உருவாக்கியது.

அம்மாவின் தனித்துவமான போராட்ட விசுவாசத்தினால் ஈர்க்கப்பட்ட போராளிகளான குணம், வசந், அம்மா வீடு சென்று தம்மன எழுச்சியை வெளிப்படுத்தி அம்மாவின் செயற்பாட்டிற்கு பலம் ஊட்டினார்கள்.

பல மாதங்கள் மக்கள் மத்தியில் நிலவிய மகிழ்ச்சி ஆரவாரம் நீடிக்கவில்லை.

குண்டு வீச்சு விமானங்கள், உலங்கு வானூர்தி உதவிகளுடன் பெரும் எடுப்பிலான படை நகர்வில் இவ்வூர் ஆக்கிரமிக்கப்பட்டது.

மக்கள் அனைவரும் குடிபெயர்ந்து பக்கத்து சூரங்கல் மாதிரிக்கிராமங்களில் தஞ்சம் புகுந்தார்கள்.

இவ்வேளை அம்மாவும், அவரது கணவனும் சிக்கிக்கொண்டு ஒருவாறு உயிர் தப்பி சூரங்கல் வந்து சேர்ந்தார்கள். பெற்றோர்கள் சிக்கிக்கொண்ட செய்தி அம்மாவின் கடைசி மகளை அதிர்ச்சிக் குள்ளாக்கியது. அதுவே பிற்காலத்தில் மகளின் சாவிற்குக்காரணமாக அமைந்தது.

முன்பு கந்தளாய் குள உடைப்பு வெள்ளத்தால் வசதியான வாழ்வை அம்மா இழந்திருந்தார். பின் இவ்விடப்பெயர்வு அம்மாவை வறுமைப்பிடிக்குள் அழுத்தியது.

இவ்வூர் மக்களின் நலன்களில் அக்கறையுடைய தில்லைநாதன் ஐயாவின் முயற்சியால் ஊர் பார்க்க ஒருநாள் சிங்களப்படையினரால் அனுமதிக்கப்பட்டது.

அந்நாளன்று அம்மாவும், மூத்த மகளும் மக்களோடு ஊர் சென்று தம் வீட்டிற்குச்சென்றார்கள்.

தம் வீட்டின் மேற்தளத்தினுள் மறைத்து வைக்கப்பட்ட போராளிகளின் இராணுவப்பொருட்கள் அனைத்தையும் இரண்டு உரப்பையினுள் போட்டு அதனுள் தேங்காய்களைப்போட்டு மறைத்துத்தம் தலையில் சுமந்து திரும்பினர்.

சிங்களப்படையினரின் இறுக்கமான நடமாட்டங்களுக்குள்ளாலும் திடீர் சோதனை செய்யும் சூழ்நிலைக்குள்ளாலும் உரப்பையைச்சுமந்து ஆபத்தின் எல்லையைக்கடந்தார்கள்.

தலைவலியும், தொண்டை வரண்டு உடற்களைப்பு ஏற்பட உரப்பையினுள் இருந்த தேங்காயும், இளநீரும் அவற்றைப்போக்கியது.

இப்பொருட்கள் அனைத்தும் பாதுகாப்பாக அம்மாவால் காந்தி என்ற போராளியிடம் ஒப்படைக்கப்பட்டது.

1987 யூலை 29ந்திகதி இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின் ஏற்பட்ட சூழ்நிலையைத்தொடர்ந்து போராளிகளின் வருகையோடு அம்மா சொந்த வீட்டிற்கே சென்று வாழ்ந்து வரலானார்.

மூத்த தளபதி பூலேந்தி அம்மான் உட்பட அனைத்துப் போராளிகளும் அம்மாவை சந்தித்து புதிய அரசியல் தொடர்பான கருத்துக்களை பகிர்ந்தார்கள்.

இன்னொரு ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக போராட வேண்டிய வரலாற்றுத்தேவை போராளிகளுக்கு இருக்கின்றது என்பதனை அம்மா புரிந்து கொண்டார்.

சில மாதங்களில் மூத்த தளபதி புலேந்தி அம்மானின் வீரச்சாவிற்கு பின் இந்த அமைதிச்சூழல் இந்தியப்படையினரின் யுத்த கொடூரப் பிடிக்குள் சிக்கிக் கொண்டது.

புலேந்தி அம்மானின் இழப்பில் ஏற்பட்ட மன அதிர்வுகளை அம்மா தான் சந்திக்கும் போராளிகளிடம் பகிர்ந்து கொள்வார்.

கோயிலடி IPKF முகாம், போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான திடீர் சுற்றிவளைப்புகள், வீதி ரோந்துகள் தீவிரமாகியது.

இப்படியான மிகவும் நெருக்கடியான சோதனையான இடர்படிந்த காலங்களில் கூட அம்மா நிலையான, ஆழமான பங்களிப்பைச் செய்தே வந்தார்.

முன்னணிப்போராளி சுஜனினால் ஒப்படைக்கப்படும் சுகயீனமான




தொடர்ச்சி 16 ம் பக்கம்




# பாடசாலை போகவேணும்

-ஆங்கிலத்தில் குவான்ஹுவா-



எனினும் அவன் ஆசிரியரை எட்ட முன்னதாகவே ஒரு பிடி மண்ணை அள்ளி எடுத்த இரும்பன், வெளியே பிதுங்கிக்கொண்டிருந்த அவன் கண்களிலும் திறந்திருந்த வாயினுள்ளும் மண்ணை வீசி எறிந்தான். அவன் அப்படியே நின்றுவிட்டான். தனது கண்களையும் வாயையும் துடைத்துவிட்டுக் கொண்டே தட்டுத்தடுமாறியபடி வெளியே ஓடிப்போனான். "இது அத்துமீறிய செயல். மிகவும் அத்து மீறிய செயல். உங்களை நான் கவனித்துக்கொள்கிறேன்." என்று சொல்லியபடிதான் அவன் ஓடினான்.

ஆசிரியர் சாய் வேலையில் இருந்து நீக்கப்பட்டு அன்றைக்கே கிராமத்தைவிட்டு வெளியேறும்படி கட்டளையிடப்பட்டது. அவருக்கு பிரியாவிடை சொல்லயாரும் போக்க கூடாது என்றும் ஆசிரியர் தனது உடைமைகளை கொண்டு செல்ல மாட்டுவண்டி எதையும் பயன்படுத்தக் கூடாது என்றும் பண்ணையார் ராய் தடைவிதித்து விட்டான். இதைப்பற்றி ஆசிரியர் சாய் கவலைப்படவில்லை. தன் படுக்கையைச் சுருட்டி முதுகில் கட்டிக்கொண்டு கிராமத்தை விட்டு நடக்கத் தொடங்கினார்.

அவர் சிறிது தூரம் போனதும் அவருக்குப் பின்னால் இருந்து யாரோ அழைப்பது கேட்டது. இரும்பன் அவரை நோக்கி ஓடிவந்துகொண்டிருந்தான். நடு இலையுதிர் காலம் அண்மித்துக் கொண்டிருந்ததால் மிகக்குளிராக இருந்தபோதிலும் அவன் மெல்லிய சேட் ஒன்றையும் ஒட்டுப்போட்ட நீளக் காற்சட்டைகளையும் அணிந்திருந்தான். ஓடிவந்து தன் ஆசிரியரைக்கட்டிஅணைத்துக்கொண்டவன் சோகமாக அவரை நிமிர்ந்து பார்த்தான். அவனுடைய கன்னத்தில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது. "எப்பவாவது ஒரு நாளைக்கு நான் பள்ளிக்குப் போக முடியுமா சேர்?" என்று விம்மத்தொடங்கினான். அவனது தலையை அன்புடன் தடவிக் கொடுத்த ஆசிரியர், "சீன எட்டாவது வழி இராணுவம் இந்தக் கிராமத்தை விடுவித்தபின், உன்னைப் போன்ற பிள்ளைகள் எல்லோரும் பள்ளிக்குப் போகலாம்." என்று ஆறுதல் சொன்னார். அதன் பின்பு வயல்களுக்கூடாக நடந்துபோய் விட்டார்.

இரும்பன் அங்கேயே நின்றபடி தூரத்தூரப்போய்க் கொண்டிருந்த அந்த உருவத்தை பார்த்தபடியிருந்தான். அவனது காலுக்குக்கீழே பனிபடர்ந்திருந்த புல்லும் தலைக்கு மேலே இருண்ட மேகங்களும் இருந்தன. அவனது ஆசிரியர் தூரத்தே கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக்கொண்டிருந்தான்.

வெகு தொலைவிலிருந்து பீரங்கிகளின் முழக்கங்கள் மெலிதாககேட்டன. "எட்டாவது வழி இராணுவம் எப்போது வந்து எமது கிராமத்தை விடுவிக்கும்?" என்று இரும்பன் தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

அது ஈரலிப்பும் மூடுபனி சூழ்ந்ததுமான இலையுதிர் காலமாக இருந்தது. ஒவ்வொரு இரவும் கூரைகள் சுவர்கள், வேலிகள், கோதுமைவயல்கள் மீது தடிப்பான அடுக்கில் பனி படிந்து கொண்டிருந்தது. சூரிய உதயத்தின் போதும் அஸ்தமனத்தின் போதும் குருதிச் சிவப்பான, பொன் நிறமான மேகங்கள் தொடு வானத்திலிருந்து (CRIMSON) சியாங் சுண் நதி கரையோரங்கள் வரை வர்ணஜாலங்களை உருவாக்கிக் கொண்டிருந்தன. இலையுதிர்காலம் முழுவதும் பீரங்கிகளின் ஒலி கேட்டுக் கொண்டிருந்த போது பிள்ளைகள் தங்கள் கைகளைத் தட்டிப்பாடினார்கள்:

வானமும் செந்நிறம்
பூமியும் செந்நிறம்.
சிவப்புக் கொடிகள், சிவப்புக் குதிரைகள்
சிவப்புக்குஞ்சங்களுடன் ஈட்டிகள்
ஆக்கிரமிப்பாளரை அழிக்க
எட்டாவது வழிப்படையினர் வருகின்றனர்.

மக்களின் வீடுகள்; வீதிகள், மற்றும் நதிக்கரையோரங்களில் மக்கள் தங்கள் முகங்களில் உற்சாகம் சுடர்விட, நம்பிக்கையில் கண்கள் மின்ன, "எட்டாவது வழி அணியினர் விரைவில் இங்கு வந்து விடுவார்கள்'' என்ற உற்சாகமூட்டும் செய்தியை ஒருவருக்கு ஒருவர் தெரிவித்தபடியிருந்தார்கள்.

ஒரு நாள் இரவில், எட்டாவது வழி இராணுவத்தின் முன்னோடி பிரிவொன்று லுங்ஹு" கிராமத்துக்கு வந்தது. இரும்பனின் அப்பாவும், தாத்தாவும் வேறு வளர்ந்தவர்களும் தானியங்கள் மற்றும் எரிபொருளை சேகரித்ததோடு, மக்கள் இராணுவத்தினருக்கான தங்குமிடங்களையும் ஏற்பாடுசெய்தார்கள்.

நீரைக்கொதிக்கவைப்பதிலும் இராணுவ வீரர்களுக்கு கொடுப்பதற்கான கொழுக்கட்டைகளுக்குரிய காய்கறிகளை வெட்டுவதிலும் கிராமத்தவர்கள் ஓய்வொழிச்சலின்றி ஈடுபட்டார்கள். முழுக்கிராமமுமே ஒரு தேன் கூடுபோல் இயங்கிக்கொண்டிருந்தது.

நிலத்தைக்கூட்டுவதிலும், .மேசை வாங்குகளில் தூசி தட்டுவதிலும் இரும்பன் தன் தாயாருக்கு உதவினான். பின்பு தாங்கள் மிக அருமையாக பயன்படுத்தும் மண்ணெண்ணை விளக்கைப்பலகணி மாடத்தில் இருந்து எடுத்து அதன் சிம்னி மீது வாயால் ஊதி,அது மினுங்கும் வரை அதனை மினுக்கினான். அந்த விளக்கு கொழுத்தப்பட்டபொழுது அந்த அறை முழுவதும் பிரகாசம் பரவியது

(தொடரும்...)

தமிழில்
**வி.பி.யோசப்**

(15ம் பக்கத் தொடர்ச்சி...)

போராளிகளை வைத்துப்பராமரித்தல், போராளிகள் தங்கிச்செல்ல உதவுதல் போன்ற பணிகள் தொடர்ந்தன.

திடீர் சுற்றிவளைப்பில் போராளிகளான மூர்த்தி அண்ணன் காப்பாற்றப்பட்டது, இன்னொரு நெருக்கடியில் கபிலன், சஞ்சய் சிக்கிய போது அந்நெருக்கடி விலக உதவிய சம்பவங்கள் அம்மாவின், உரிமைப்போரின் மீதான கடமைச்செருக்கை வெளிப்படுத்தியது.

இவ்வரலாற்று நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் IPKF க்கு எதிரான ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை ரவி, கோபி, விசு, றோய், விக்கி, அருண், ஆகிய போராளிகள் முன்னின்று ஒழுங்கு செய்தார்கள்.

இவ்வூரின் அனைத்து மக்களும் தேசியத்தலைவரின் படங்களைத்தாங்கிய வண்ணம் கலந்துகொண்டு தம் ஒருமித்த எழுச்சியை வெளிப்படுத்தினார்கள். அக்காலப்பகுதியில் அவ்வூர் மக்களின் துணிவை வெளிப்படுத்திய நிகழ்வாகும்.

மக்கள் பலம் எப்போதும் விடுதலைப்புலிகளுக்கு இருக்கும் என்ற பாடத்தை அப்போது இந்தியப்படைக்குப் புகட்டியது.

வீறுகொண்டெழுந்த, மக்கள் போராட்டத்திற்குரிய ஒழுங்குகளை பொம்மி அம்மா, குமார், அம்மா, பொன்னம்மா, சுந்தரலிங்கம்ஐயா வீடுகளில் தான் போராளிகள் தங்கி நின்று செய்தார்கள்.

இப்படியிருக்கையில் போராளிகள் மூன்று படைகளை எதிர்த்துப்போராட வேண்டியிருந்தது.

ஒன்று இந்தியப்படை, இரண்டாவது சிங்களப்படை, மூன்றாவது இந்தியாவின் கூலிப்படை.

இவ்வரலாற்றில் மிகுந்த நெருக்கடியான காலப்பகுதியின் போது IPKF உம், ENDLF உம் இணைந்து 29.05.1989 இல் கள்ளிமேடு கதிர்காமத்தம்பி, நவரெட்ணத்தை மண்ணெண்ணெய் ஊற்றி உயிருடன் எரித்துக் கொன்றார்கள்.

இக்கொடூரச்சம்பவம் மரண பயம் பற்றிய மன அழுத்தங்களை இவ்வூர் மக்களுக்குக்கொடுத்தது.

இக்காலப்பகுதி போராளிகள் இரவை பகலாக்கி நகரும் காலமாக மாறியது. இரவில் அம்மாவின் வீட்டிற்குப்போராளிகள் சென்று வழமையான உதவிகளைப்பெற்றே வந்தார்கள்.

அந்நியர் ஆட்சியை தமிழீழத்தை விட்டு அகற்றுவது ஒவ்வொரு தமிழனுடைய கடைமையென்றும், தமிழினத்தின் சுதந்திரத்திற்காக கடமை செய்து மடிவது உயர்வாகவே அம்மா கருதினார்.

இரண்டு ஆண்டுகளின் பின் ஆக்கிரமிப்பு அந்நிய இராணுவம் தமிழீழத்தை விட்டு முழுமையாக வெளியேறியது.

மக்கள் தமக்குக்கிட்டிய சுதந்திரத்தையிட்டு நிம்மதியுடனும் ,மகிழ்வுடனும் காணப்பட்டார்கள்.

1990 நடுப்பகுதியில் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகி மெல்ல, மெல்ல போர்க்களச் சூழ்நிலைக்கு இவ்வூர் மாற்றம் பெற்றது.

பீப்பாய் எறிகுண்டுகள் வானிலிருந்து வீசப்பட்டன. உலங்கு வானூர்தி சரிமாரியான வேட்டுக்களைத் தீர்க்க எறிகணை வீச்சுக்களால் ஊர் சிதைந்தது.

மீண்டும் சிங்களப்படை இவ்வூரை ஆக்கிரமித்தது. மக்கள் துயர் மிக்க இன்னொரு இடப்பெயர்வைச்சந்தித்தார்கள். அவை பயங்கர நாட்களாகவே அமைந்தன. அம்மாவின் உடல்நிலை பாதிப்பிற்குள்ளாகியிருந்த காலம். அப்போது போராளி பிரகாசின் அரவணைப்பு அம்மாவிற்கு தெம்பூட்டியது. இவ்வூர் மக்களைத்தொடர்ச்சியாக துன்பத்திற்கும், பொருளாதார நெருக்கடிக்கும் உயிர் பற்றிய பயங்கரத்திற்கும் உள்ளாக்குவதன் மூலம் போர்க்களைப்பினை ஏற்படுத்தியது சிங்களப்படை.

இப்போர்க் களைப்பானது உரிமைகளை விட, அற்ப சலுகைகளே முக்கியமென நம்பி வாழத்தலைப்படும் சூழ்நிலையை உருவாக்குவதே அவ்யுக்தியாகும்.

இதற்கு இவ்வூர் மக்கள் சோரம் போய் விடவில்லை. போராளிகளின் உதவியுடன் கடினங்களையும், ஆபத்துக்களையும் எதிர்கொண்டபடியே ஒரு தொகுதி மக்கள் காட்டுப்பாதையால் வன்னிக்கு வந்து சேர்ந்தார்கள்.

இன்னொரு தொகுதியினர் வாகனங்கள் மூலம் வன்னி வந்து சேர்ந்தார்கள்.

அம்மாவும் தன்பிள்ளைகளுடன் வன்னி வந்து புதுக்குடியிருப்பு அன்புத்திட்டத்தில் குடியேறினார்.

மூன்றாவது தடவை அம்மா அனைத்தும் இழந்த நிலையில் இருந்ததனால் வறுமை அனைத்திலும் வெளிப்பட்டது. தான் எந்த நிலையில் வாழ்ந்தாலும் கௌரவத்தை இழக்கக்கூடாது என்ற இலட்சியத்துடன் வாழ்ந்தார்.

இங்கும் கூட அம்மா தன்னாலான பங்களிப்புக்களை செய்யத்தவறவில்லை. எப்போதும் போராளிகள், மாவீரர்களின் அர்ப்பணிப்புக்களை தன் ஆழ்மனதில் கலந்தவாறே அந்நிகழ்வுகளில் கலந்துகொள்வார்.

வன்னியில் விடுதலைப்போர் வித்தியாசமான மட்டத்தில் தொடர்ந்தது.

பல சிங்களப்படை யெடுப்புக்களைச்சந்தித்தது.

மெல்ல மெல்ல யுத்தத்தின் கொடூரப்பிடிக்குள் வன்னி வந்துகொண்டிருந்த வேளையில் எதிரியின் போர் வலுவின் உயிர்நாடி விடுதலைப்புலிகளால் உலுப்பியெடுக்கப்பட்டது.

இவ்யுத்த களநிலை மாற்றம் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு வழிவகுத்தது.

இச்சூழல் ஏற்பட்ட சில மாதங்களில் மக்கள் பெருமளவில் தம் சொந்த ஊர்களுக்கே செல்லத்தொடங்கினார்கள். அம்மா அன்புத்திட்டத்திலேயே தொடர்ந்து வாழ முடிவு செய்தார்.

குணம், மூதூர்நேயன், பிரகாஷ், கபிலன், ரவி, ஆகிய போராளிகள் அன்பு அம்மாவிற்குத்துணையாக இருந்து வருகின்றனர்.

எதிரியின் அதிகாரங்கள், நெருக்குவாரங்கள் அற்ற சுதந்திரமான ஓர் சூழலில் வாழ வேண்டுமென்பதே அம்மாவின் உள்ளெண்ணம்.


அம்மா தன்னிடமுள்ள கஸ்டங்களை வெளிப்படுத்த மாட்டார். அவரின் நடவடிக்கைகளில் காணும் மாற்றங்களில் தான் நாம் உணரமுடியும்.

பற்பல துன்பங்களாலும், இன்னல்களாலும் அம்மாவின் பொருளாதார நிலை முழுமையாகவே சிதைவடைந்தே போனது.

இவ்வறுமையில் வாழ்ந்த போதும் அம்மாவின் சமூக உணர்வு உயர்வானது. அயலில் கொக்குத்தொடுவாய்க்குடும்பம் ஒன்று வறுமையின் பிடிக்குள்ளே வாழ்ந்து வந்தது. கணவன் தாமோதரம்பிள்ளை இராணுவத்தால் அவர் ஊரிலேயே சுட்டுக்கொல்லப்பட்டுவிட்டார். ஆறு பிள்ளைகளையும் வளர்த்து வந்த அவரது மனைவி அண்மையில் சாவடைந்தார். பிள்ளைகள் யாருமற்ற அநாதைகளாயினர்.

இச்சாவு வீட்டிற்கு அம்மா உணவு சமைத்துக்கொண்டு சென்று கொடுத்து தன் சமூக உணர்வை வெளிப்படுத்தினார். நாளாந்த சமயலில் மிச்சம்பிடித்த உணவுப்பொருட்களை வைத்தே அதனை நிறைவேற்றினார். இக்காட்சியை கண்டவர்களது உணர்வின் செய்தியே இது. ஏழ்மையிலும் உயர்வான எண்ணம்.

அம்மாவின் தன்னலம் காட்டாத சமூக உணர்வு, அர்ப்பணிப்புக்கள், நிறைந்த விடுதலைப்போராட்டப் பங்களிப்புக்கள் அனைத்தும் எல்லோரது மனங்களிலும் உயர்வாக நிலைத்தே விட்டது.



வாழ்வை அளக்க வேண்டியது சிந்தனையாலும், செயலாலும், காலத்தால் அல்ல. – ஸர்ஜான் லுப்பாகி

# அமெரிக்க மோட்டார் சைக்கிளுக்கு வயது நூறு

உந்துருளி உலகின் முடிசூடா மன்னன் என்று வர்ணிக்கப்படும் ஹார்லி டேவிற்சன் (HARLEY DAVIDSON) மோட்டார் சைக்கிள் நூறு வயதைத்தாண்டி விட்டது. வில்லியம் ஹார்லி, ஆர்தர் டேவிற்சன் என்ற இரு அமெரிக்கர்கள் இணைந்து 1903ல் இந்த மோட்டார் சைக்கிளை உருவாக்கினார்கள். அதன் பின் வர்த்தக ரீதியாக அது தொடர்ச்சியாகத் தயாரிக்கப் படுகின்றது. ஒரு நூற்றாண்டு காலம் ஒரு மோட்டார் சைக்கிள் தயாரிப்பில் இருப்பது வியப்பூட்டும் சாதனையாகக் கருதப்படுகின்றது.

1960, 1970களில் எரிபொருள் சேமிப்பிற்கும், பராமரிப்புச் சிக்கனத்திற்கும் பெயர்பெற்ற மோட்டார் சைக்கிள்களை ஜப்பானியர்கள் தயாரிக்கத் தொடங்கினர். இதன்பின் உலகின் பல பெயர்பெற்ற உந்துருளிகள் காணாமற்போய்விட்டன. மிகக் கூடுதலான மோட்டார் சைக்கிள்களைத் தயாரித்த பிரித்தானியா மிகவும் பாதிப்படைந்தது. பிரித்தானியா ஆட்சி செய்த காலனித்துவ நாடுகள் சிறந்த சந்தைவாய்ப்புக்களை வழங்கினாலும் மலிவாகக்கிடைக்கும் ஜப்பான் தயாரிப்புக்கள் மக்கள் ஆதரவைப்பெற்றன. இதனால் பிரித்தானியாவின் மிதிவண்டிகளும் மோட்டார் சைக்கிள்களும் இருந்த இடம் தெரியாமல் மறைந்தன.

றல்லி, றட்ஜ், ஹம்பர் என்ற தலை சிறந்த பிரிட்டிஷ் மிதிவண்டிகள் பற்றி இப்போதைய தலைமுறையினர் அறியமாட்டார்கள். அதுபோல் பி.எஸ்.ஏ(B.S.A), நோர்ட்டன் மாங்ஸ் (NORTON MANX), ஏறியல் (ARIEL), றோயல் என்பீல்ட் (ROYAL ENFIELD) போன்ற பிரிட்டிஷ் மோட்டார் சைக்கிள்கள் பற்றியும் அவர்கள் அறியவாய்ப்பில்லை. இந்த நான்கில் பி.எஸ்.ஏ மிகவும் பிரபலமானது. பேர்மிங்காம் நகரின் சிறியரகத்துப்பாக்கி தயாரிக்கும் நிறுவனம் என்ற பெயரின் ஆங்கில முதலெழுத்தின் கூட்டாக பி.எஸ்.ஏ இடம் பெறுகின்றது.

பி.எஸ்.ஏ நிறுவனத்தின் முக்கிய தயாரிப்பு துவக்கு என்பது புலப்படும். முறித்துச்செருகும் வேட்டைத்துப்பாக்கிகளை அது கூடுதலாகத்தயாரித்தது. இதுவே அதனுடைய வர்த்தகச் சின்னமாக அமைந்தது. மிதிவண்டி களையும் அது பி.எஸ்.ஏ என்ற பெயரில் தயாரித்தது. அதனுடைய தயாரிப் புக்களில் மூன்று வேட்டைத் துப் பாக்கி அடையாளம் பொறிக் கப்பட்டிருக்கும். பி.எஸ்.ஏ மிதிவண்டியின் அடிச்சட்டம் துப்பாக்கியின்முன் குழாய்களைப் பொருத்திச் செய்யப் பட்டது. ஓட்டம் மந்தமாக இருந்தா லும் பி.எஸ்.ஏ மிதிவண்டிகள் பொதி சுமப்பதற்கு சிறந்தவையாக இருந்தன.

பி.எஸ்.ஏ மோட்டார் சைக்கிள்கள் 50 சி.சி தொடக்கம் 650 சி.சி வரை யில் தயாரிக்கப்பட்டன. அன்றைய மோட்டார் சைக்கிள்களின் எந்திர சாதனங்கள் யாவும் இரும்பிலானவை. இன்று அலுமினியம், மக்னீசியம் போன்ற உலோகங்களின் கலவைகள் இதே தேவைக்குப் பயன்படுகின்றன. வேகம், எரிபொருள் சிக்கனம், குறைந்த எடை போன்ற அனுகூலங்கள் கிடைக்கின்றன. 650 சி.சி பி.எஸ்.ஏ உந்துருளியின் வர்த்தகப் பெயர் கோல்டன் பிளாஷ் (GOLDEN FLASH), நிகரற்ற வாகனம் என்பது ஆர்வலர் கணிப்பீடு.


மோட்டார் சைக்கிள், மிதிவண்டி ஆகியவற்றின் தயாரிப்பை பிரித்தானியா நிறுத்திவிட்டது. பி.எஸ்.ஏ மிதிவண்டியின் தயாரிப்பு உரிமையை ஒரு இந்திய நிறுவனம் கொள்வனவு செய்து தயாரிப்பில் ஈடுபடுகின்றது. சென்னை வாழ் தொழிலதிபர் விஸ்வநாதன் ஐயர் றோயல் என்பீல்ட் தயாரிக்கும் உரிமையைப் பிரித்தானிய நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்தார். பல வருடங்களாக இவருடைய தயாரிப்புக்கள் அமோக விற்பனை கண்டன. இந்திய இராணுவம் மற்றும் பொலிசார் அவற்றை விரும்பிக்கொள்வனவு செய்தனர. இப்போது இந்திய-ஜப்பானிய கூட்டுத்தயாரிப்புக்கள் அதனுடைய கதையை முடித்துவிட்டன.

ஆர்வலர் பார்வையில் மோட்டார் சைக்கிள்கள் மூவகைப்படுகின்றன; போக்குவரத்துச் சாதனங்கள், சவாரி ஓட்ட ஊர்திகள், உல்லாசப் பயணத்திற்கான அதிசக்தி வாய்ந்த வாகனங்கள். போக்குவரத்துச்சாதனங்களாகப் பயன்படும் மோட்டார் சைக்கிள்கள் எம்மத்தியில் பெரிய எண்ணிக்கையில் காணப்படுகின்றன. இவை பொதிசுமக்கவும் பயன்படுகின்றன. ஆசிய ஆபிரிக்க நாட்டவர்கள் மாத்திரம் மோட்டார் சைக்கிள்களை போக்குவரத்துச் சாதனமாகப் பயன்படுத்துகின்றனர். போக்குவரத்துச்சாதனமாகப் பயன்படும் ரகத்தை மிதமான வேகத்தில் செலுத்த வேண்டும் என்பது பொதுவிதி. இதை மீறும்போது அனர்த்தம் விளைகின்றது.

ஓட்டப் போட்டிக்காக மோட்டார் சைக்கிள்கள் விசேடமாகத் தயாரிக்கப்படுகின்றன. உலகின் பல பாகங்களில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன. மிதிவண்டிப் போட்டிக்குப் பிரான்சுபோல் மோட்டார் சைக்கிள் போட்டிக்கு ஐல் ஒப்மான் (ISLE OF MAN) என்பார்கள். இங்கிலாந்திற்கும் அயர்லந்திற்கும் இடையிலுள்ள இக்குறுந்தீவில் ஒவ்வொரு வருடமும் ஜுன் மாதத்தில் போட்டிகள் நடைபெறுகின்றன. ஐல் ஒப்மான் போட்டியில் வெற்றியீட்டுவதைப் பெரும்பேறாக ஓட்டக்காரர்கள் கருதுகின்றனர்.


நான்கு வகையான வலுவுள்ள மோட்டார் சைக்கிள்கள் ஐல் ஒப்மான் ஓடுகளத்தில் பங்குபற்றுகின்றன. அவையாவன: 80, 125, 250, 500 சி.சி கடந்த சில வருடங்களாக ஜப்பானின் ஹொண்டா வெற்றிவாகை சூடுகின்றது. பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்சு ஆகிய நாடுகளிலும் கிரான் பிறீ (GRAND PRIX) எனப்படும் அனைத்துலக மட்டத்திலான மோட்டார் சைக்கிள் ஓட்டப்போட்டிகள் நடைபெறுகின்றன. கடந்த வருடம் (2002) பிரித்தானியா, ஜேர்மனி கிரான் பிறீ போட்டிகளில் ஹொண்டா நிறுவனத்தின் 990 சி.சி மோட்டார் சைக்கிள் வெற்றி பெற்றது. 23 வயதினரான வலன றினோ றொசி (VALENTINO ROSSI) வெற்றியீட்டிய ஊர்தியை ஓட்டினார். இவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்.


என்பீல்ட்


ஹார்லி டேவிற்சன்

உல்லாசப் பயணத்திற்கான அதிசக்திவாய்ந்த மோட்டார் சைக்கிள்கள் குறுயிசர்கள் (CRUISERS) என்று அழைக்கப்படுகின்றன. இவை பெரும்பாலும் 1000 சி.சி வலுவள்ளதாகவோ அல்லது அதற்கும் கூடுதலான வலுவுள்ளதாகவோ காணப்படுகின்றன. இந்த ரக வாகனங்கள் பதிவானதாகவும், காரிலும் அகலமான பலூன்ரயர் பொருத்தப்பட்டவையாகவும் அமைகின்றன. சாதாரண உயரமுள்ள மனிதர்கள் இதில் சுகமாகச் சவாரி செய்வது கடினம். இது நீட்டுப்போக்கான வாகனம், முதல் கியரிலேயே மணிக்கு 30 மைல் வேகத்தில் செல்லக்கூடிய ரதம்.


டெய்மலர்


கோலடன பிளாஸ்

குறுயிசர் மோட்டார் சைக்கிளில் அலுங்காமல் நலுங்காமல் நெடுந்தூரம் பயணம் செய்யலாம். மிக நேர்த்தியான அதிர்ச்சி தாங்கிகள் பொருத்தப்பட்டுள்ளதால் காற்றில் மிதக்கும் பிரமை ஓடுபவர்களுக்குக் கிடைக்கும். ஹார்லி டேவிற்சன் மோட்டார்சைக்கிள் இந்த ரகத்தைச் சேர்ந்தது. அதிபர் கெனடி படுகொலை செய்யப்படும் வரை அமெரிக்கத்தலைவர்கள் பவனி வருவது வழமை. பிரமாண்டமான திறந்த காரில் தெருவோரம் நிற்கும் மனிதர்களுக்குக் கையசைத்தபடி அவர்கள் செல்வார்கள். காருக்கு முன்னுக்கும் பின்னுக்கும் சீருடை தரித்த மெய்ப்பாதுகாவலர்கள் ஹார்லி டேவிற்சன் மோட்டார் சைக்கிளில் ஆரோகணித்தபடி பாதுகாப்பு வழங்குவர்.

ஹார்லி டேவிற்சன் நிறுவனம் பல தரப்பட்ட சாதனைகளை நிலை நாட்டியுள்ளது, தொடர்ந்து நிலைநாட்டுகின்றது. 1912ல் அது தனது தயாரிப்புக்களை முதன்முதலாக ஜப்பானுக்கு ஏற்றுமதி செய்தது. மணிக்கு 160கி.மீ வேகத்தில் செல்லும் வர்த்தக அடிப்படையிலான வண்டிகளை அது 1928ல் சந்தைப்படுத்தத் தொடங்கியது. 1941-1945 காலப்பகுதியில் அமெரிக்க இராணுவத்திற்கு மோட்டார்சைக்கிள் வழங்கும் முழுப்பொறுப்பை அது ஏற்றது.

1987ல் அது அமெரிக்கப் பங்குச்சந்தையில் குறிப்பிடப்படுமளவுக்கு இலாபகரமாக இயங்கத் தொடங்கியது.

அமெரிக்காவின் றெட் இந்தியன் மோட்டார் சைக்கிள் மிகச் சிறந்ததொரு குறுயிசர் ரகவண்டியாகவும் ஹார்லி டேவிற்சனுக்குப்போட்டியாகவும் 1953 வரை இடம்பெற்றது. அவ்வருடம் பொருளாதார நெருக்கடி காரணமாக றெட் இந்தியன் தயாரிப்பு நிறுத்தப்பட்டுள்ளது. குறுயிசர் ரகத்தில் பெருமளவு இயந்திரவலு கிடைக்கின்றது. ஆனால் முழு அளவு வலுவையும் பயன்படுத் தாமல் அது அதிவேகமாகச் செல்கின்றது. மோட்டார் சைக்கிள் ஓட்டத்தில் கவனிக்கப்படவேண்டிய மிகவும் முக்கியமான விடயம் யாதெனில், வேகம் காட்டும் கருவியில் பொறிக்கப்படும் அதியுச்ச வேகத்தின் அளவுக்கு வண்டியை செலுத்த முடியாது. செலுத்தவும் கூடாது. வங்கியில் பணம்போல முழு வலுவையும் பயன்படுத்தாமல், செலவிடாமல் ஓடத் தெரியவேண்டும். இது ஓடுபவருக்கும் பிறருக்கும் நன்மை பயக்கும்.

பி.எம்.டபிள்யூ (B.M.W) என்ற மூன்று எழுத்துக்களால் அறியப்படும் ஜேர்மன் கார் தயாரிப்பு நிறுவனம் அதே பெயரில் ஒரு குறுயிசர் ரக மோட்டார் சைக்கிளைத்தயாரிக்கின்றது. உலகம் முழுவதும் இன்று 1000 சி.சி வலுவுக்கும் கூடிய மோட்டார் சைக்கிள்களுக்கு சிறந்த வரவேற்பு இருப்பதாக இந்த நிறுவனத்தின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மொன்தோக் (MON TAUK) என்ற குறியீடுள்ள பி.எம்.ட பிள்யூ குறுயிசர் 1200 சி.சி எந்திர வலுக்கொண்டது. இதன் முன்ரயர் பின்ரயறிலும் பெரியது. முன்ரயர் அளவு - 150/80-16, பின்ரயர் அளவு 170/80-15 ஜேர்மன் இராணுவம் மற்றும் பொலிசார் இந்த ரக ஊர்திகளைப் பயன்படுத்துகின்றனர்.

மிதிவண்டியின் பிள்ளை என்று உந்துருளியை அழைப்பார்கள். முதன்முதலாகத் தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் எந்திரம் பொருத்தப்பட்ட மிதிவண்டிகளாகவே காட்சியளித்தன. முதலாவது மோட்டார்கார் உள்ளக எரிபொருள் எரிப்பு எந்திரத்துடன் 1885ல் ஊருவாக்கப்பட்டது. இதை உருவாக்கியவர் கொட்லீப் டெய்ம்லர் (GOTTLIEB DAIMLER) என்ற ஜேர்மனியர் இதே எந்திரத்தின் சிறிய வடிவங்களை மிதிவண்டியில்பொருத்தி அன்றைய மோட்டார் சைக்கிளை பொறியியலாளர்கள் உருவாக்கினார்கள்.

ஜப்பான் நாட்டில் மோட்டார் சைக்கிள் உற்பத்தியில் இறங்கிச்சாதனை படைத்த ஹொண்டா, மிதி வண்டி திருத்தும் தொழிலாளியாக வாழ்க்கையை ஆரம்பித்தார். சொந்தச் சேமிப்பு, வங்கிக்கடன் என்பனவுடன் அவர் உலகின் ஒவ்வொரு மோட்டார் சைக்கிள் தொழிற்சாலைக்கும் விஜயம் செய்தார். அவற்றின் சிறப்பம்சங்களை ஒன்றிணைத்து அவர் ஹொண்டா மோட்டார் சைக்கிளை உருவாக்கினார். ஹொண்டா நிறுவனம் தயாரிக்கும் கார்களும் உலக அரங்கில் பெரும் சாதனை படைக்கின்றன.

மோட்டார் சைக்கிள் தயாரிக்கும் தொழில்நுட்பத்தையும் ஹொண்டா (HONDA) நிறுவனம் விற்பனை செய்கின்றது. இந்தியாவின் ஹீரோ மிதிவண்டி நிறுவனம் இதன் மூலம் ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்களைத் தயாரிக்கின்றது. தென்கோரியாவின் டெய்லிம் நிறுவனம் ஹொண்டா தொழில்நுட்ப அனுசரணையுடன் டெய்லிம் (DALIM) மோட்டார்சைக்கிளைத் தயாரிக்கின்றது. இந்தோனேசியாவிலும் ஹொண்டா மோட்டார் சைக்கிள் தயாரிக்கப்படுகின்றது. 2001ஆம் ஆண்டில் 1.4 மில்லியன் ஹீரோ ஹொண்டா மோட்டார் சைக்கிள்கள் இந்தியாவில் தயாரிக்கப்பட்டன.

யமகா (YAMAHA), கவசாக்கி (KAWASAKI) என்பன ஜப்பனின் மோட்டார் சைக்கிள் தயாரிக்கும் வேறிரு நிறுவனங்கள். யமகா நிறுவனம் இசைகருவிகளைத் தயாரிக்கின்றது. எலத்திரணியல் பியானோ, எலக்ற்றிக் ஓர்கன், அக்கோடியன், கிதார், வயலின் போன்ற யமகாத் தயாரிப்புக்கள் இத்துறையில் முதலிடம் பிடித்துள்ளன. ஜப்பனின் கப்பல்கட்டும் நிறுவனமான கவசாக்கி , மோட்டார் சைக்கிள்களையும் தயாரிக்கின்றது. உலகின் நான்காவது மிகப்பெரிய இருசக்கர ஊர்திகளைத்தயாரிக்கும் இந்திய நிறுவனமான பஜாஜ் (BAJAJ) கவசாக்கித் தொழிநுட்பத்துடன் கலிபர் (CALIBER) போன்ற உந்துருளிகளைத் தயாரிக்கின்றது. அமெரிக்க மாநிலங்களின் சில பொலிஸ் படைகள் ஜப்பான் தயாரிப்பு கவசாக்கி மோட்டார் சைக்கிள்களைப் பயன்படுத்துகின்றன.

மிதிவண்டியின் பிள்ளை மோட்டார் சைக்கிள். மோட்டார் சைக்கிளின் பிள்ளைகள் ஸ்கூட்டரும், ஆட்டோவும் என்பார்கள். வெஸ்பா, லம்பிறெற்றா போன்ற இத்தாலிய நிறுவனங்கள் ஸ்கூட்டர் தயாரிப்பில் முதன்முதலாக இறங்கின. அவை என்றோ நிறுத்தப்பட்டுவிட்டன. ஆனால் வெஸ்பா தொழில்நுட்பத்தைக் கொள்வனவு செய்த பஜாஜ் நிறுவனம் ஸ்கூட்டரையும் ஆட்டோவையும் தயாரிக்கின்றது. லோகியா மெஷின் லிமிற்றட் (LML) உருவாக்கும் ஸ்கூட்டர்களும் வெஸ்பாதொழில்நுட்பத்தில் செய்யப்படுகின்றன. ஸ்கூட்டர்கள் இன்னும் சில காலத்தில் மறைந்துவிடும்: மோட்டார் சைக்கிளின் கையோங்கிவிட்டது.

ஆட்டோக்களுக்கு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்புக் காட்டுகின்றனர். அது புகை கக்குவதால் சூழல் மாசுபடுவதாகப்புகார கூறப்படுகின்றது. உலகின் மிகக் கூடுதலான ஆட்டோக்களைப் பயனபடுத்தும் நாடு இந்தியா, இரண்டாம் இடத்தில் தாய்லாந்து. புதிய ஆட்டோக்களுக்கு உரிமம் வழங்கப்படமாட்டாது என்று தாய்லாந்து அரசு அண்மையில் அறிவித்துள்ளது. புகையை நிறுத்தக் கற்றுக்கொண்டால் இந்தியாவின் ஆட்டோக்களின் ஆயுசு கெட்டியாக இருக்கும்.

— அன்பரசு



## 16ஆம் ஆண்டு நினைவாக...

## பட்ட மரமாகிக் ஒழிந்து நின்றார்

மஜீசன்

பதைக்குதே நெஞ்சம் துடிக்குதே - அந்தப்
பாதகர் செய்த கொடுமைகளால்
சிதைக்கவே இனம் அழிக்கவே - வந்தார்
சிதையில் ஏற்றி எரிக்க வைத்தார்

நம்பியே ஆயுதம் ஒப்படைத்தோம் - நய
வஞ்சகராகச் செயல்புரிந்தார்
விம்மிக் கதறி மாரடிக்க - எங்கள்
வேங்கைகள் மூச்சினை எடுத்துவிட்டார்

குமரப்பா புலேந்திரன் உடன்பத்து வேங்கைகள்
ஒன்றாகப் படுத்ததைத் தாங்குவமோ
அமைதிப்படையென வந்தவரால் - உயர்
அறம் கொன்ற வினையெல்லாம் நிகழ்ந்ததையா

உரிமைக்குப் போராடத் துணைபுரிந்தார் - பின்னர்
உயிரையே குடித்தெமை அழித்து நின்றார்
பரிவோடு கூறிய வார்த்தையெல்லாம் - ஒரு
கணத்தினில் கணைகளாய் எரித்ததம்மா

இமயத்தின் உறுதியோ டவர் இருந்தார் - பகை
நெருங்கிட நஞ்சிடம் சரணடைந்தார்
எமைக்காக்கும் மரங்களின் வேர்நறுக்கி - வெறும்
பட்டமரமாக்கிக் களித்து நின்றார்.

திலீபனின் தியாகத்துக் குயிர் கொடுத்தார் - தமிழ்
மக்களின் மானத்தின் விலை உரைத்தார்.
வலிந்துடன் விரட்டியே இந்தியரின் - சாயம்
வெளுத்திட வைத்தனர் வேங்கைகளே.

**05.10.1987**
**05.10.2003**

லெப்.கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன், மேஜர். அப்துல்லா, கப்டன். நளன், கப்டன். ரகு, 2வதுலெப். ஆனந்தகுமார், லெப். தனக்குமார், லெப். அன்பழகன், கப்டன். கரன், கப்டன். மிரேஷ், 2வது லெப். ரெஜினோல்ட், பழனி. ஆகியோரின் நீங்காத நினைவாக...

# நல்ல எண்ணங்களே நம்மை வாழ்வில் முன்னேற்றுகிறது

இந்த மனது இப்படித்தான். நல்லது நினைக்கத்தெரியாத மனது. துன்ப துயரங்களையும், தோல்விகளையும் தன்போக்கிற்கு கற்பனை செய்து அஞ்சி அழியும் பேதை மனது. இந்த மனதைச்சோரவிடாமல் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவன் தான் எதையும் சாதிக்கிறான். இதைத்தான் பாரதியார் "திண்ணிய நெஞ்சம்வேண்டும்" என்று குறிப்பிடுகின்றார். மலையே சரிந்து போனாலும் மனம் அழிந்து போகக்கூடாது. தலைக்குமேல் வெள்ளம் வந்தாலும் மனதை இழந்து விடக்கூடாது. குழப்பமில்லாத தெளிந்த மனம் கொண்டவர்கள் வாழ்வில் வெற்றியடைகிறார்கள்.

இரத்தம் வடியும் இந்த யுத்த பூமியில் யாருக்குத் தான் குழப்பமில்லை? வீதியிலே செல்லும் போது ஷெல் வந்து விழுந்து சிதறி மடியலாம். வீட்டுக்குள் இருந்தால் விமானக்குண்டு வீழ்ந்து உயிரிழக்கலாம். ஏ9 வீதியில் போகும் போது எந்த நேரமும் விபத்து ஏற்படலாம். இராக்காலம் வந்து படுக்கையில் சரிந்தால் ஹெலியிருந்து வரும் சன்னங்கள் துளைத்து இறக்கலாம். யாருக்குத்தான் அச்சமில்லை?

உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே என்று களத்திலே நின்று போரிடும் வீர இளைஞர்களைப்பாருங்கள். அவர்கள் கலங்குகிறார்களா? அவர்களைப்போல் குழப்பமின்றி ஏன் எம்மால் இருக்க முடியாது?

உங்கள் உள்ளத்திலும் கேள்விகள் உருவாகின்றன அல்லவா?

தோல்விகளை கண்டு துவண்டு எடுத்து வைத்த அடியை பின் நோக்கி இழுக்கக்கூடாது. தோற்கும் தொழில் என்று எந்தத்தொழிலும் இல்லை. தோற்கும் மனிதர்கள்தான் இருக்கிறார்கள். இத்தோல்விகளுக்குக் காரணம் அவசரபுத்தி, தவறான பழக்க வழக்கங்கள், தன்னம்பிக்கையீனம், சலனம், கோப உணர்ச்சி, சோம்பல் என பலவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம். நாம் வாழ்வில் உயர்வடைய முடியாமைக்கான காரணத்தை முதலில் இனம் காணவேண்டும்.

இக்காரணங்களைத் தேடி அலைவதிலேயே சிலர் காலத்தை விரயமாக்கி விடுகிறார்கள். இன்னும் சிலர் காரணங்களைக்கண்டு பிடித்த பின்னரும் அடுத்த அடியை எடுத்து வைப்பதில் தயங்குகிறார்கள். வெற்றி இலக்கை அடைய நினைப்பவன் அந்த அளவிலே நின்று விடாமல் தடைக்கற்களை அகற்றுவதற்கான வழி வகைகளை நாடவேண்டும்.

முயற்சியின்மையும் சோம்பலும் நம்மைப்பீடித்திருக்கும் போது நாம் இலக்கை அடைவது எப்படி? முயற்சியில் இறங்கும் சிலரிடம் கூட, விரைவிலேயே சில தோல்விகளை கண்டு துவண்டு போகின்ற சலிப்பு நிலையை அவதானிக்க முடிகிறது. சலிப்பை விடுத்து நாம் ஏன் மாற்று வழியைத் தேடக்கூடாது. ஒரு கதவு அடைக்கப் படும் போது நிச்சயமாக இன்னொரு கதவு திறக்கும். சாதுரியமான அணுகு முறை மூலம் வெற்றிக்கான சரியான பாதையைத் திறக்க முடியும்.

எதிர் நீச்சல் போட்டு வெற்றி பெறுவது என்பது எப்போதும் இலகுவாக இருப்பதில்லை. காட்டு வெள்ளம் ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும் போது எதிர் நீச்சல் போட முடியாது தான். ஆனால் வெள்ளம் வழிந்து வரும் வேளையில் எதிர் நீச்சல் போட முடியுமல்லவா? முற்றாக வெள்ளம் வற்றும் வரை பொறுப்போம் என்று காத்திருந்தால் எதையும் எட்ட முடியாது.

காற்று வீசும் போது பஞ்சு வியாபாரம் செய்வதையும், மழை பெய்யும் போது உப்பு வியாபாரம் செய்வதையும் தவிர்க்கத்தான் வேண்டும். அதற்காக அந்த வியாபாரத்தையே கைவிடவேண்டுமா? கால நேர சூழ்நிலைகளை அவதானித்து சமயம் சரியாக வரும் போது புத்திசாதுரியத்துடனும் மன நம்பிக்கையுடனும் இயங்கினால் வெற்றிக்கனியை நிச்சயமாக பறிக்கலாம்.

ஒழுக்கமாய் நாணயமாய், சுயநல நோக்கம் மட்டுமே என்றில்லாமல் உழைப்பதன் மூலம் எவ்வளவு கஸ்ரம் வந்தாலும் அது வெற்றிக்கு வழிகோலும். தோல்வியுற்றாலும் அது வெற்றிக்கான அத்திவாரமாகும்.

உற்சாகம், ஊக்கம், உழைப்பு, துணிவு, தன்நம்பிக்கை மட்டும் வெற்றிக்கு வழிவகுக்கும் என்று அறுதியிட்டு கூறமுடியாது. நன்மை, தீமை, சாத்தியம், அசாத்தியம், என்பவற்றையும் ஆழ்ந்து பார்த்துச்செயற்படும் தன்மையும் வேண்டும். இதையே வள்ளுவரும் "எண்ணித்துணிக" கருமம் என்றார்.



வளரத்துடிக்கும் வாழ்வில் பிரச்சினைகளும் சவால்களும் எதிர்படவே செய்யும் வாழ்க்கைக் களத்தில் நாம் தினமும் எதிர்ப்பைச் சந்திக்கலாம். பலரது முன்னேற்றத்திற்கு வறுமை முதல் எதிரி! வறுமை என்பது தலையெழுத்தல்ல. நம் தேவைகளை நிறைவேற்றிட முடியாத வறுமையயை நாம் முயன்று மாற்றிட முடியும். பின் வெற்றிக்கான பயணத்தைத்தொடரலாம். நல்லதையே நம் மனம் எண்ண வேண்டும். எண்ணங்களே செயல் வடிவை நிர்ணயிக்கிறது. செயல்கள் மீது கவனம் செலுத்துங்கள். அவையே எம் வாழ்வினை வெற்றியை நிர்ணயிக்கிறது.

இந்த மனது குழப்பமில்லாது நல்லதையே நினைக்கும் என்ற நிலையை உருவாக்குங்கள். எண்ணியயாவையும் கூடிவரும்.

**சு.முருகானந்தன்**

நீ செய்யக்கூடாத செயலை நாளை வரை எப்பொழுதும் ஒத்திப்போடு. - மாரிஸ்மேண்டல்



# அனுமார் பதில்கள்

● அன்பின் அனுமாரே! போர் மூளுமானால் நான் வெளிநாடு செல்வதற்கு உத்தேசம் தாங்கள் இதற்கு என்ன சொல்கிறீர்கள்.

கு.மஞ்சு,
கிளி/கறுக்காய்த்தீவு.

என் வீரமகளே! ஏன் அடுத்த தமிழீழப்போர் வெளிநாட்டிலா நடக்கவிருக்கிறது.

● அன்பின் அனுமாரே! மீளக்குடியமர்வு கொடுப்பனவை எடுத்து மதுபானசாலையில் நிற்கும் ஆடவரைப்பற்றி தங்கள் கருத்து?

கே. ஓவியன்,
செம்மலை

அவர்கள் மீளக்குடிக்க அமரும் கொடுப்பனவு என்று விளங்கியிருப்பார்கள்.

● அனுமாரே! புலிகளை விமர்சிக்கும் அளவிற்கு இந்தத் துரோகக்கும்பல்களை யாரும் விமர்சிக்கிறார்கள் இல்லையே. ஆத்திரமாக இருக்கிறது.

சற்குணம்,
யாழ்/கொய்யாத்தோட்டம்

காய்க்காத மரத்திற்கு யாரும் கல்லெறிவதில்லை சற்குணம்.

● இனிய அனுமாரே! திடீரென எனக்கொரு யோசனை தோன்றிச்சு. வெளிநாடுகளில் உள்ள வீதிகள்போல் தமிழீழ வீதிகளும் இருந்தால் நிலைமை எப்படியிருக்கும்?

கு.ரஜனிகாந்,
பூநகரி.

'புழிச்'என்று துப்பும் வெற்றிலை எச்சில் சகதியாக வழியும். காய்வதற்கு மண்ணிருக்காதே!

● அனுமாரே! நாம் ஒவ்வொரு படிகளிலும் கால்வைக்கும் போது பல தடங்கல்கள் ஏற்படுகிறதே?

கு.உதயஜெயச்சித்திரா
பூநகரி.

ஒருவன் தான் பத்தாம் முறையும் கீழே விழுந்துவிட்டேனே என்று அழுதபோது சாமி அவனுக்குச் சொல்லியதாம். நீ பத்துமுறை விழுந்தவனல்ல. ஒன்பது முறை எழுந்தவன் என்று.

● ரணில் சர்வதேச வலைப்பின்னல் நெய்கிறார். வாஜ்பாய் சமயம் வரும்போது இந்தியா நேரடியாகப் பங்களிக்கும் என்கிறார். அமெரிக்கா 08ஆம் திகதி தடையைப் புதுப்பிக்கும் என்கிறார்கள்.

புலிகளின் படகுபயணிக்குமா அனுமாரே?

சுதா,
நெல்லியடி.

சுதா! அமைதியான கடல் திறமையான படகோட்டியைத் தருவதில்லை.

● அன்பின் அனுமாரே! தாய்க்காக பிறர் அன்பை இழக்கலாம். பிறர் அன்புக்காக தாய் அன்பை இழக்காதே என்று சொல்வது எதற்காக?

செ.சுசீலா.
கோம்பாவில்.

சுசீலா! நீர் தாய்மை அடைந்துவிட்டால் இது தானாகப் புரிந்துவிடும்.

● அனுமாருக்கு! கண்பார்வை இருந்து இல்லாதது போல் கூலிங் கிளாஸ் போட்டு நடமாடும் பெண்களைப்பற்றி என்ன நினைக்கிறீ?

எம்.புயலரசன்,
உடையார்கட்டு.

கண்பார்வை இல்லாதவள் என்றாவது இந்த ஆண்கள் வழியாமல் விடுவார்களா என்ற எதிர்பார்ப்பில்தான்.

● அனுமாரே! திருமண வயைதைத் தாண்டிய எனது அண்ணனுக்கு திருமண ஒழுங்கை மேற்கொள்ளும்போது அவர் அதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றார் அனுமாரே காரணம்?

க.ஜெயதீபன்,
உதயநகர்.

உமது திருமணத்தை தள்ளிப்போடுவதற்காக என்று ஆத்திரப்பட்டு எதுவும் செய்துவிட வேண்டாம் தீபன்.

● அனுமாரே! "உயிரே உயிரே வந்து என்னோடு கலந்துவிடு"என்று காதலிக்கும்போது பாடுகிறார்கள். கைவிடும்போது இவர்கள் என்ன நினைப்பார்கள்?

ஜெகா,
திருகோணமலை.

''உயிரே உயிரே என்னை இன்றோடு மறந்துவிடு" என்று.

● அனுமாரே! மாரிகாலம் வருகிறது வீதிகள் சறுக்கி விபத்துகள் கூடுவது நாட்டுக்கு ஆபத்தாமே?

சுமன்,
பூவரசம்குளம்.

தேர்தல்காலம் வந்தால் கட்சிகள் சறுக்கி நடக்கும் விபத்துக்களையே நாடுதாங்குகிறது இதையா தாங்காமல் விட்டுவிடும்.

● வெற்றிகாணும் இரகசியத்தை கண்டறிந்த பிறகுதான் வாழ்வில் எந்தச் செயலிலும் இறங்க வேண்டுமென்றிருக்கிறேன். வழிஎன்ன அனுமாரே?

க,தீபன்,
மன்னார்.

தோற்பதுதான்.

● அனுமார் அவர்களுக்கு! தற்போது வெளிவரும் தென்னிந்தியத் திரைப்படங்களில் புகைப்பிடிப்பதை (சிகரெட்) இளைஞர்களின் தேசியக் கடமைபோல் காட்டுகிறார்களே! இந்தக் கேவலத்திற்கு என்னகாரணம்?

ச.சந்திரன்,
விசுவமடு.

அவற்றைப்பார்த்துவிட்டு உங்களைமாதிரி சிலர் கேள்வி கேட்கலாம் என்பதற்காகக் கூட இருக்கலாம் தானே.' முதலில் பார்ப்பதை நிறுத்தி விட்டால் எல்லாம் சரிதானே.


● அனுமாரே! திடீரென கணனி மயமாகிவரும் வடபகுதியின் எதிர்காலம் எப்படியிருக்கும்?

ம.மயூரன்,
வவுனியா.

நல்ல கவிதை ஒன்று ஞாபகத்தில் வருகிறது. யாழ்ப்பாணத்தில் மின்சாரம் இல்லாது போனபோது வெளிவந்த கவிதை. ''மின்சாரம் வருவதற்காய் மரங்களைத் தறித்து விட்டோம். இன்று நிழலும் இன்றி மின்சாரமும் இன்றி...." அதுபோலதான். ●

"எவ்வளவு காலம் தான்
எருமைக் கடாவில்
காலம் தான் மாறிவிட்டது
காலன் தான் வருகிறான் கயசில்"

ப.இ.அன்பழகன்,
தமிழீழம்



ஓவியம் - நிசா

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 37



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள் – 37

.........................................................
.........................................................
.........................................................
.........................................................

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் – 36



வள்ளுவன்,
கந்தசாமி கோயிலடி,
கிளிநொச்சி.

### பரிசுக்குரிய வரிகள்

எங்கள் தலைவன் இவன்தான் - என்றும்
எங்கள் உரிமைக்காய் இவன்தான்
எங்கள் கைகள் சோர்வதில்லை - அந்நியரே
உங்கள் ஊருக்கு நீங்கள் போங்கள்.

### பாராட்டுக்குரிய வரிகள்

*கரம் பற்றி நிற்பது வெறும் காட்சிப்பொருளல்ல*
*பரம்பொருள் என்றுணர்வீர் பாதகரே - இங்கு*
*அரங்கேறியது வெறும் ஆர்ப்பாட்ட நிகழ்வல்ல*
*உரங்கொள் தமிழின் பொங்குணர்வெனப் புரிந்திடுவீர்.*

த.க.லிங்கராஜா
கிளிநொச்சி.

*தலைவனின் படத்தை கரத்தில் ஏந்தி*
*ஏன் கர்வச்சிரிப்பு சிறுவா உனக்கு - புரிகிறது*
*சுதந்திர மண்ணில் சுழன்று*
*பந்தாடப்போகிறேன் என்ற இறுமாப்பு தானே*

K.சங்கவி
கிளிநொச்சி

*பொங்கு தமிழ் பொலிவு பெற - எம்*
*தங்கத்தலைவனை தலை மேல்ஏந்தி*
*முந்தி இருக்கின்றீர் முனைப்புடனே*
*தம்பியரே! தமிழீழம் உமது கையில்*

ப.கிருஷ்ணபிள்ளை.
முத்து ஐயன் கட்டுக்குளம்

*உன்பள்ளியும் உயர் பாதுகாப்பு வலயமா*
*பொங்கு தமிழில் உலகிற்கு சொல்லிட*
*அண்ணன் பிரபாவின் படத்தினை ஏந்தி*
*அணிவகுத்து வந்தீர்களா உரிமைக்காக.*

பா.கனியவள்
வவுனியா

*சங்கம் வளர்த்த எம் இன்பத்தமிழுக்கும், தானை*
*தலைவனுக்கும் தங்க தமிழர் நாம் உள்ள*
*வரை பங்கம் விளைவிக்க முடியாது பாரும்*
*இனிபொங்கு தமிழ்யாகம் காண்போம் வாரும்.*

கவிப்பிரியா
தாளையடி..

*உலகத்தமிழினத்தின் ஒப்பற்ற தலைவனை*
*உலகிற்குக் காட்டவா உயர்த்திப் பிடிக்கின்றாய்*
*இன்னும் உயர்த்தடா எங்கும் தெரியட்டும்*
*எம் எழுச்சி புரியட்டும்.*

ச.அப்பன்
விசுவமடு

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம்
புதுக்குடியிருப்பு வழங்குகின்றது. கிளிநொச்சி.

என் தகுதியின் நிறைவே, என் தகுதியின் குறைகளை நான் உணர்வது தான். - புனிதர் அகஸ்டின்



கேணல் சங்கர் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவில் அவர்நினைவாக அமைக்கப்பட்ட சிலையை அவரது துணைவியார் திறந்து வைப்பதையும் அவரது நினைவாக வெளியிடப்பட்ட "சங்கரண்ணா சாவு உனது முடிவல்ல" என்ற நூலை தளபதி கேணல் சொர்ணம் வெளியிட்டு வைப்பதையும் கேணல் சங்கரின் துணைவியார் அதனைப் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்



# உணர்வார்களா?



ஏ9 இல் தினம்தினம் பதிவாகும் விபத்துக் காட்சிகள்


நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள் தற்பொழுது மக்களின் வாழ்க்கையே கேள்விக்குறியாக்கி விட்டிருக்கிறது. வீதிகளில் நடமாடி மீள்வதென்பதே நிச்சயமற்றதாகி விட்டது என்கின்றனர் மக்கள். இது தொடர்பில் முற்று முழுதாக அக்கறையெடுக்க வேண்டிய தரப்பு எந்த வாகனத்தையும் ஓட்டிச் செல்லும் சாரதிகளே. இனியாவது அவர்கள் கவனமெடுப்பார்களா?


செல்வம் செழிக்கக்கூடிய
வளமான விளைச்சலுக்கு
இலங்கையில் முன்னணியில் திகழும்

## எட்க்ரோ
## கிரீவ்ஸ்
## MK 12/ MK 25

## விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்

புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு. எட்க்ரோ நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கி வரக்கூடிய சலுகைகள்.
ஒருவருடத்திற்கான உத்தரவாத சான்றிதழ். பலம் மிக்கதும் நீண்டகாலம் உழைக்கக் கூடியதும். அதிக தண்ணீரை பெற்றுக் கொள்ளக்கூடிய வல்லமை. சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர் இறைக்க வல்லது. எரிபொருளை சேமிக்க வல்லது. நாடளாவிய விற்பனைக்குப் பிந்திய சிறந்த சேவை. தேவையான அளவு உதிரிப்பாகங்கள்.



EDNA GROUP

**எட்னா அப்ளயன்ஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட்**
160, பௌத்தாலோக மாவத்தை கொழும்பு 04.
தொலைபேசி. 508961 - 2, 502291 - 3, 592135 - 6
தொலைநகல். 594558, 500909
தொடர்புகளுக்கு: மயுரா - 0777-418821
இபுனு - 0777-418817

SM Graphics சி-8503

யாழ்ப்பாணத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:

## ஆர்க் என்ரப்பிறைசஸ்

150,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம். ☎ 021-2222052


## கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29-12-1979 | 28-09-2003 |

## தியாகர் சண்முகபாலன்

(4 1/5 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்)
த.மு. 1ஆம் வட்டாரம் வேணாவில், புதுக்குடியிருப்பு.

பணிப்பாளர்,
பணியாளர்கள்,
ஈழநாதம்.


# EXPOAIR

*your friend in the skies*

எக்ஸ்போ எயார்



யாழ்-கொழும்பு பயணத்தின் போது றோல்ஸ் றோய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்.

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் - 021-2223891, 021-2226297, 074 512666, 01-2360291, 0712-348888, 0712-349999, 01-2360290,

e-mail- jaffna@expoavi.com

இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை



இப் 'பத்திரிகை' கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு அக்டோபர் மாதம் 03 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.